# கன்னிப் பெண்

நகுலன்

நகுலன் வெளியீடு

[illegible]/10

# கன்னிப்பெண்

( சிறுகதைத் தொகுப்பு )

EK/10

நகுலன்




'கலையகம்,' கலைநகர், சித்தன்கேணி

1965

முதற் பதிப்பு — மே, 1965

[பதிப்புரிமை: திரு. நா. க. கந்தசாமி அவர்கள்]

விலை: ரூ. 2/50.

❋

அச்சுப்பதிவு :

**கலைவாணி அச்சகம்**

**10, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.**

[186—65]

இலங்கைப் பல்கலைக் கழகத்

தமிழ்ப் பேராசிரியர்

**கலாநிதி க. கணபதிப்பிள்ளை** B. A., Ph. D. (Lond.)

அவர்கள் அளித்த

# ஆசியுரை

இலக்கியம் படிப்பதற்கு மக்களுக்கு ஓய்வு கிடைப்பது அரிதாயுள்ள இந்த இயந்திர யுகத்தில் நல்லுணர்வூட்டும் பணியைச் சிறுகதைகளே பெரும்பாலும் செய்து வருகின்றன. காலத்தியல்புக்கேற்பச் சிறுகதைகள் புனைவதில் பலர் ஆர்வம் காட்டுவதால் தமிழில் சிறுகதைகள் பெருகி வருகின்றன.

இலக்கியத் தரமுள்ள சிறுகதைகள் நூலுருவில் வெளிவருவது விரும்பத்தக்கது. ஆனால், எமது நாட்டு எழுத்தாளருக்கு நூல் வெளியிடுவதில் இடர்கள் பல இருக்கின்றன. அவ்விடர்களைப் பொருட்படுத்தாது 'கன்னிப்பெண்' என்ற இச்சிறுகதைத் தொகுதியை வெளிக்கொணரும் ஆசிரியர் பாராட்டுக்குரியவர்.

இந்நூலிலுள்ள கதைகள் பலவும் இயல்பான நடையில் எழுதப்பட்டவையாகவும் படிப்போருக்கு நல்லுணர்வூட்டுபவையாகவும் இருப்பது மகிழ்ச்சிக்குரியது. ஆசிரியரின் கற்பனைசக்தி ஓரோரிடங்களில் சிறந்து விளங்குகின்றது. ஆசிரியர் மேலும் நல்ல கதைகளை எழுத இன்றைய ஆட்சியாளராகிய பொதுமக்களின் ஆதரவுகிடைப்பதாக.

இலங்கைப் பல்கலைக் கழகம்,
பேராதனை.
16. 6. 65

**க. கணபதிப்பிள்ளை**

கோப்பாய்
மகளிர் அரசினர் ஆசிரிய கலாசாலைத்
தமிழ் விரிவுரையாளர்

## செல்வி க. சௌ. சந்தனநங்கை

அவர்கள் அளித்த

## வாழ்த்துரை

## இலக்கியப் பணிபுரிய வாழ்த்துகின்றேன்

இந்த நூற்றாண்டில் வேகமாக வளர்ந்து வரும் இலக்கிய வகைகளுள் சிறுகதை சிறந்தவோர் இடத்தை வகிக்கின்றதெனலாம். நல்ல எழுத்தாளர் தோன்றுவதற்குச் சிறுகதையின் அமைப்புச் சிறந்த தூண்டுகோலாக இருக்கின்றது என்பர் இலக்கியப் பேரறிஞர்.

வாழ்க்கையின் பல்வேறு உணர்ச்சிகளை நுகர்ந்து உணரும் உள்ளமும், அவற்றைத் தாம் உணர்ந்தவாறு எழுதி வெளிப்படுத்தும் திறமையும் உடைய பலர் நம்மிடையில் வாழ்வது நமது நல்லதிட்டமேயாகும். திரு. நா. க. தங்கரத்தினம் (நகுலன்) அவர்கள் ஓர் ஆசிரியர். உளவியல் தெரிந்தவர். மனித மனத்துட் புகுந்து ஆராய்ந்தும், வர்ணித்தும் வளமான கதைகள் புனையும் ஆற்றல் வாய்ந்தவர். இத்தகைய படைப்பாளர் வாழ்க்கையின் சிறந்த குறிக்கோள்களைப் பின்னணியாக வைத்துப் புதிய புதிய கதைகள் புனைந்து இலக்கியப் பணிபுரிய வாழ்த்துகின்றேன்.

செல்வி க. சௌ. சந்தனநங்கை

ம. அ. ஆ. கலாசாலை,
கோப்பாய்,
12-4-65.

"ஈழநாடு" ஆசிரியர்

உயர்திரு. கே. பி. ஹரன் அவர்கள்

அளித்த

# அணிந்துரை

முப்பது வருடங்களுக்கு முன்பாக ஒரு கதை எழுதி சென்னையிலே கல்கியாரிடம் கொடுத்தேன். அப்போது அவர் 'ஆனந்த விகடன்' ஆசிரியராக இருந்தார். கதை வருமென்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். வந்தது.

எப்படி?

"தாங்ஸ்" என்ற குறிப்புடன், எனக்கே அது தபாலில் திரும்பி வந்துவிட்டது! எனது முதல் கதையும் கடைசிக் கதையும் அதுதான்.

கதை எழுதுவதென்பது சுலபமல்ல. எல்லாராலும் எழுதமுடியாது. அது ஒரு தனிக்கலை. அன்பர் தங்கரத்தினம் எழுதிய பல நல்ல கதைகள் ஈழத்திலே பல பத்திரிகைகளிலும் வெளியாகிப் பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளதே, அவரது கலைத்திறனுக்கு அத்தாட்சியாகும்.

கதை கேட்பதிலும் படிப்பதிலும் குழந்தைகளுக்கு மட்டுமன்றி, தாய்மார்களுக்கும் பெரியவர்களுக்கும் ஆவல் அதிகமுண்டு. சமூகத்திலுள்ள பல குறைகளை எடுத்துக் கூறி, மக்களைச் சீர்திருத்த, கதைகளுக்குள்ள சக்தி அதிகம். அன்பர் தங்கரத்தினத்தின் கதைகள் யாழ்ப்பாணத்துச் சூழலுக்கேற்ப, சமூகத்தை நல்ல

முறையில் சீர்திருத்தும் நோக்கத்துடன் அமைந்துள்ளன. கதை சொல்லும் ஆற்றல் ருசியாகவும், மேலே மேலே படிக்கும்படி தூண்டுவதாகவுமுள்ளது.

இந்த இளம் எழுத்தாளருக்கு நாம் அளிக்கும் ஆதரவும் உற்சாகமும், ஈழத்தில் நாம் பெருமைப்படக் கூடிய சிறந்த கதாசிரியனாக உருவாக்க உதவுவதாகும். அப்படி அவர் பிரகாசிப்பார் என்பது என் ஆசையும் நம்பிக்கையுமாகும். அதுவே அவருக்கு எனது ஆசியும் கூட.

கே. பி. ஹரன்,
ஆசிரியர்.

'ஈழநாடு'
யாழ்ப்பாணம்.
3-6-65.

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர்

உயர்திரு. ச. அம்பிகைபாகன் B. A., அவர்கள்

அளித்த

# மதிப்புரை

தமிழ் இலக்கியத்தில் இப்பொழுது சிறுகதை ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுவிட்டது. இதற்குக் காரணம் தமிழ்க் கல்வி பரவி வருவதும் பத்திரிகைகளின் தொகை அதிகரித்து வருவதுமாகும். பத்திரிகைகளைப் படிப்போர் சிறுகதைகளை விரும்பிப் படிப்பதால் பத்திரிகையாளர் சிறுகதைகளைப் போட்டி போட்டுப் பிரசுரம் செய்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் சிறுகதை எழுத்தாளர் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. நமது நாட்டில் அவ்வளவு பெருந்தொகையான எழுத்தாளர் தோன்ருவிட்டாலும் காலத்துக்குக் காலம் சில சிறந்த சிறுகதை எழுத்தாளர் தோன்றி வருகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன் திரு. சம்பந்தன், திரு. வைத்தியலிங்கம் போன்ரேரின் சிறுகதைகள் கலைமகள் போன்ற தமிழ்நாட்டுப் பத்திரிகைகளை அலங்கரித்து வந்தன. அவற்றுட் சில தமிழ்நாட்டில் வெளிவந்த கதைத் தொகுதிகளில் பிரசுரிக்கப்பட்டு அறிஞரின் பாராட்டைப் பெற்றன. ஆனுல் அவர்களுடைய கதைகள் புத்தக ரூபமாக வெளிவராதிருப்பது பெருங் குறையாகும்.

இப்பொழுது திரு. தங்கரத்தினம் (நகுலன்) என்னும் இளைஞர் தமது கதைகளைத் தொகுத்து வெளியிட முன் வந்துள்ளார். இவர் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி

பெற்று வருகிறார். இவருடைய கதைகளை வாசிக்கும் போது, இவர் ஆசிரிய, மாணவ உலகத்தை – அவர்களின் குறைவு, நிறைவுகளை – நன்கவதானித்திருக்கிறாரென்பது புலப்படுகின்றது.

திரு. தங்கரத்தினம் தமது கதைகளில் நமது சமூகத்தில் காணப்படும் குடி, சூது, சீதனம் முதலிய ஊழல்களை அம்பலப்படுத்தியுள்ளார். அதனோடு நமது பெண் குலத்தின் சிறப்புக்களையும் எடுத்துக் காட்டியுள்ளார். மாறிவரும் சமுதாயத்திலும் பெண்கள் தங்கள் பாரம்பரியமான நற்பண்புகளைப் பாதுகாத்து வருகிறார்கள், பாதுகாக்க முடியுமென்பதைத் தமது கதைகள் மூலம் காட்டியுள்ளார். இக் கதைகளை வாசிக்கும் ஆண்கள் இனிமேல் பெண்களை அநாவசியமாகத் துன்புறுத்த மாட்டார்களென எதிர்பார்க்கலாம்.

ஆசிரியருடைய நடையும் பொருத்தமாக அமைந்துள்ளதெனக் கூறலாம். பாத்திரங்கள் பேசும் பொழுது அவற்றுக்குப் பொருத்தமான கிராமியப் பாஷையில் பேசச் செய்திருக்கிறார். இப்படிச் செய்து கதைகளுக்குத் தத்ரூபத்தைக் கொடுத்திருக்கிறார். மற்றைய இடங்களில் நடை தெளிவானதாகவும், ஓட்டமுடையதாகவும் காணப்படுகிறது.

திரு. தங்கரத்தினம் தொடர்ந்து தமிழுக்குப் பணிபுரிய இறைவன் அருள் புரிவாராக.

ச. அம்பிகைபாகன்,
அதிபர்.

வைத்தீஸ்வர வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.
8-6-65

கொழும்புத்துறை
அரசினர் ஆசிரிய கலாசாலைத்
தமிழ் விரிவுரையாளர்

## பண்டிதர் சு. இராசையா அவர்கள்

வழங்கிய

## வாழ்த்தொலி


## என்னைக் கவர்ந்த கன்னியே வாழ்க!

வெண்பா

கன்னிப்பெண் நாமக் கதைகளாம் பூங்காவில்
மன்னி உலாவில் மகிழ்வீர்கள் — என்னைக்
கவர்ந்தனளே என்றுங் கதைகளிலே மேலாய்
உவந்தேற்றுக் கொள்ளும் உலகு.

அ. ஆ. கலாசாலை,
கொழும்புத்துறை.

— பண்டித சு. இராசையா.



# என்னுரையும் நன்றியும்

விஞ்ஞானம் விழித்திருக்கும் இவ்விருபதாம் நூற்றுண்டிலே சமுதாயத்தில் சீர்திருத்தக் கருத்துக்களேயும் புதுமை எண்ணங்களேயும் தோற்றுவித்து, மூடக்கொள்கைகளுக்குச் சாவுமணி அடித்துப் புதுவாழ்வு வாழ வைக்கும் பணியில், சிறுகதை இலக்கியம் சிறந்தவோர் இடத்தைப் பெற்று வருகின்றதென்றே சொல்லலாம்.

சமுதாயத்திலே காணப்படும் சீர்கேடுகளேயெல்லாம் படம் பிடித்துக் காட்டி, மக்களே மக்களாகக் காண ஆசைப்பட்டேன். அவ்வழியே நெடுந்தூரம் மனத்தை ஓடவிட்டு, என்ஞல் இயன்றவரை ஒரு சில சீர்திருத்தக் கருத்துக்களேக் கதைகள் மூலம் வெளியிடத் துணிந்தனன். எனது துணிவின் ஒரு சிறு 'துகள்'தான் இந்தக் 'கன்னிப் பெண்'.

இதோ! உங்கள் கையில் தவழ்ந்துகொண்டிருக்கும் இந்தக் 'கன்னிப் பெண்' என் வாழ்க்கையில் நடந்தவையல்ல. என் சமுதாயச் சிந்தனேயின் ஓர் உருவம்தான் இக்கதைகள். உண்மையைச் சொன்ஞல் இவை என்னுடைய கற்பனேகள். நான்—நாமெல்லோருமே தினந்தோறும் காணும், கேட்கும் நிகழ்ச்சிகள்தாம்.

எனது கதைகளில் இடம் பெற்றிருக்கும் கதையின் 'கரு' உயர்ந்த தரமுள்ளவையாக இருக்கின்றன' என்று பல எழுத்தாள நண்பர்கள் எனக்கு அறிவித்திருக்கின் றனர். ஏன்? எனது கதைகளுள் ஒன்றான 'மானம்' என்பது 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்ததும் 'இந்தக் கதை என் மகளைத் தாக்குகின்றது' என்றும் 'இந்தக் கதை என் மகளின் வாழ்க்கையையே கருவாக வைத்து எழுதப்பட்டிருக்கிறது' என்றும் எத்தனையோ பேர் எனக்கு அறிவித்திருந்தனர். ஒருவர் மாத்திரம் எழுதாது வெவ்வேறு ஊர்களிலிருந்து பலர் பலவிதமாக எழுதியிருப்பதால் எனது கதையின் 'கரு' எத்தனையோ பெண்களை — குறிப்பாக மாணவி களைத் தொட்டிருக்கிறது என்பதை உணர்ந்துகொண் டேன். எவ்வளவுக்கு எவ்வளவு கூடுதலான மக்களின் வாழ்க்கையைத் திருத்தக்கூடியதாக ஒரு கதையின் 'கரு' அமைகின்றதோ அவ்வளவுக்கு அந்தக் கதை உயிரைப் பெறுகின்றது. எனது கதைகளுக்கும் உயிர் கிடைத்திருப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைகின் றேன்.

சிலர் என்து கதையில் இடம்பெறும் பாத்திரங்க ளைப் போன்ற பாத்திரங்கள் வாழ்க்கையில் இடம்பெறு கின்றனவா? என்று கேட்கின்றனர். உண்மையில் இப் படியான பாத்திரங்கள் நிசவாழ்க்கையில் இடம்பெறு கின்றன என்றே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

ஏன்? 'மன்னிப்பு' என்ற எனது கதையில் இடம் பெறும் பவானியைப் போன்ற பெண்மணிகள் இல் லையா? 'அன்பின் வழி அது' என்ற கதையில் வரும் குடி காரத் தியாகனைப் போன்ற குடிகாரர்கள் இல்லையா? 'கற்புக்கரசி' தந்த மான்குட்டி போன்ற கற்புடைய மாண விகளைக் காணவில்லையா? தாலி கட்டாததால் கன்னிப் பெண்ணென நினைத்துக் காதலித்தபின் ஏமாற்றமடை யும் 'கன்னிப்பெண்' தந்த தேவனைப் போன்றவர்களைக் காணவில்லையா? "எல்லாற்றை பெட்டையளும் காற்சட்டை போட்டவங்களோடை இங்கிலீசு பேசிக்கொண்டு போக, என்ரை பெட்டையை மாத்திரம் வேட்டி உடுத்தவரோடை தமிழ் பேசிக்

கொண்டு போகச் சொல்லுறியளே'' என்று சொல்லி ஒரு தாயானவள் தன் மகளைத் தமிழ்ச் சட்டம்பிக்குக் கலியாணம் செய்துகொடுக்க மறுப்பதைச் சுதந்திரனில் வெளிவந்த 'தமிழ்ச் சட்டம்பி' எடுத்துக் காட்டுகின்றது. இப்படியான ஆங்கில மோகங் கொண்ட தாய்மார்களைச் சமுதாயத்தில் காணவில்லையா? ஆத்திரத்தால் மிருகத்தனமான செய்கைகளைச் செய்துவிட்டு மன்னிப்புக் கேட்கும் பத்மநாதன் மாஸ்ரர் போன்ற மாஸ்ரர்மார் தான் இல்லையா? காதலில் தோல்வியுற்றபின் 'கன்னிப் பெண்'ணாகவே இருந்து சேவை செய்யும் அமராவைப் போன்ற ஆசிரியைகளைக் காணவில்லையா? உத்தியோக காரப் பெண்ணைக் கலியாணம் செய்து கஷ்டப்படும் நாகராசனைப் போன்றவர்கள் சமுதாயத்திலே உலாவவில்லையா? வாசக நேயர்களே! நீங்கள்தான் இந்தக் கதைகளில் இடம்பெற்றிருக்கும் கருத்துக்களுக்கு மதிப்புக் கூறக்கூடியவர்கள். இதோ! உங்கள் கையில் இருக்கும் 'கன்னிப் பெண்'ணின் கதைகள் ஒவ்வொன்றையும் வாசித்து நீங்களே தரப்படுத்தி மதிப்பிட்டுக்கொள்ளுங்கள்......

நான் ஓர் ஆசிரியனாகவோ எழுத்தாளனாகவோ இருப்பதற்குப் பலர் காரணமாவர். நான் ஐந்து வயதுச் சிறுவனாக இருக்கும்போது என்னைவிட்டு என் தந்தையார் இறந்தபின்பு என்னை வளர்த்து ஆளாக்கிய பெருமை எனது பெரிய தகப்பனாராகிய திரு. நா. கதிரவேலுவுக்கும் காலஞ்சென்ற எனது பேரனார் திரு. பு. வேலுப்பிள்ளைக்கும் பாட்டியார் வே. அன்னப்பிள்ளைக்கும் உரியது. அவர்களுக்கு என் நன்றி. என்னைப் படிப்பித்து ஆசிரியனாக்கிய பெருமை எனது மாமனார்களான திரு. கே. எஸ். நாகமணி (கெட் ரீமேக்கர்) அவர்களுக்கும் திரு. வே. தம்பையா (தலைமையாசிரியர்) அவர்களுக்கும் என் நன்றி என்றும் உரியது.

1957-ம் ஆண்டு வெளிவந்த சமூகத்தொண்டன் தீபாவலி மலரில் ''பெண்களும் சமூக சேவையும்'' என்ற கட்டுரையை முதன் முதலில் வெளியிட்டு என்னை

ஊக்கப்படுத்தியவர் காலஞ்சென்ற உயர்திரு கே. பி. முத்தையா (விடிவெள்ளி) அவர்களாவர். அன்னாருக்குப் பின், சிறுகதை எழுதும்படி என்னைத் தூண்டிய சவாரித்தம்பர் புகழ் திரு. சி. சிவஞானசுந்தரம் (சுந்தர்) அவர்கட்கும் எனது தொகுதி நல்ல முறையில் அமைவதற்கு அமைப்பு முறைகளைச் சொல்லித் தந்தவரும் மறுமலர்ச்சி எழுத்தாளர்களுள் முன்னணியில் திகழ்பவருமான எழுத்தாள அன்பர் திரு. அ. செ. முருகானந்தம் அவர்களுக்கும் என் நன்றி என்றும் உரியதாகும்.

இத்தொகுதியில் இடம்பெற்ற கதைகளில் அன்பின் வழி அது, கன்னிப்பெண், மானம், ஆத்திரக்காரனுக்கு, உண்மை ஒளி, தண்டனை ஆகிய கதைகள் ஈழநாட்டிலும் மன்னிப்பு தினகரனிலும் அந்தஸ்து ஒத்துவராது வீரகேசரியிலும் தமிழ்ச்சட்டம்பி சுதந்திரனிலும் கற்புக்கரசி, பண்பு கலைவாணியிலும் உங்களுக்குத்தான் சொந்தம் விவேகியிலும் வெளிவந்தவை. இப்பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இத்தொகுதியினை நூல்வடிவில் வெளியிட ஆரம்பித்த போது,கையெழுத்துப் பிரதியினை மணிமணியான எழுத்துக்களில் எழுதித் தந்து என்னை ஊக்குவித்த, தமிழ்ச் செல்விகள் செங்கமலர் கந்தையாவுக்கும் சோதிமலர் கந்தையாவுக்கும் என் மனமுவந்த நன்றி என்றும் உரியது.

பத்திரிகைகளில் வெளிவந்த எனது சிறுகதைகளுள் பன்னிரண்டு கதைகளைத் தொகுத்து நூல்வடிவில் வெளியிடும்படி என்னை ஊக்கப்படுத்திய திரு. நா. சிவகுரு ஆசிரியர் அவர்கட்கும் திரு. வே. கந்தசாமி (அஜந்தாஸ்) ஆசிரியர் அவர்கட்கும் திரு. சபா. கந்தசாமி ஆசிரியர் அவர்கட்கும் திரு. க. காசிநாதன் நெசவு ஆசிரியர் அவர்கட்கும் என் நன்றி.

நூலை அழகுபடுத்த — உயர்வடையச் செய்வது பேரறிஞர்களின் அருள்மொழிகளாகும். எனது தொகுதிக்கு ஆசியுரை தந்த பேராசிரியர் கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்கட்கும் "இலக்கியப் பணிபுரிய வாழ்த்துகின்றேன்" என்று வாழ்த்துரை தந்த விரிவுரையாளர் செல்வி சந்தனநங்கை கந்தப்பு அவர்களுக்கும் சிறப்பான முறையிலே அணிந்

துறை தந்த ஈழநாடு ஆசிரியர் உயர்திரு கே. பி. ஹரன் அவர்களுக்கும் மதிப்புரை தந்த வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் உயர்திரு சு. அம்பிகைபாகன் அவர்களுக்கும் "என்னைக் கவர்ந்த கன்னியே வாழ்க," என்று வாழ்த்தொலி பாடித் தந்த எனது விரிவுரையாளர் பண்டிதர் சு. இராசையா அவர்களுக்கும் இலங்கையில் உள்ள பல பத்திரிகைகளில் நிலா, சித்தார்த்தன், இரவி, வீகே ஆகிய புனைபெயர்களுள் மறைந்திருந்து ஆயிரக்கணக்கான சித்திரங்களை வரைந்து பிரபலமானவரும் இலங்கையிலும் சிறந்த சித்திரக்காரர்கள் இருக்கிறார்கள் என்பதை எனதுதொகுதிக்கு வரைந்த அட்டைப் படத்தின் மூலம் நிரூபித்துக் காட்டியவருமான ஓவியர் திரு. வீ. கனகலிங்கம் அவர்களுக்கும் எனது தொகுதியின் அட்டைப் படத்தைக் கவர்ச்சியான முறையிலே அச்சிட்டுத் தந்த கொழும்பு மெய்கண்டான் அச்சியந்திரசாலையினருக்கும் என் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் சிறந்த முறையிலே ஆக்கப்பெறுவதற்குத் தோன்றாத்துணை புரிந்த அன்பர்கள் — ஆசிரிய மாணவர்கள் — குறிப்பாக எழுத்தாள நண்பர்கட்கும் இத்தொகுதி புது மெருகுடன் வெளியாவதற்குக் கைதந்து அவ்வப்போது உதவிய எனது சிறிய தகப்பனார் திரு. க. வீரகத்திப்பிள்ளை அவர்கட்கும் என் நன்றியுரியது.

இக்கதைகளைத் தொகுத்து புத்தக உருவத்தில் வெளியிட ஊக்கமெடுத்து, உழைத்து, இன்று அழகிய புத்தக வடிவில் உங்கள் முன் சமர்ப்பிக்கும் கலைவாணி அச்சகத்தினர்க்கும் குறிப்பாக ஊழியர்கட்கும் எனது மனமார்ந்த நன்றியைக் கூறுகின்றேன்.

வணக்கம்.

" கலையகம் " கலை நகர்,
சித்தன்கேணி. 15-6-65.

" நகுலன் "

# சமர்ப்பணம்



சிந்தைக் கினிய சிறந்தபல கற்பனையை
உந்தன் கருவினிலே உண்டாக்கித்—தந்ததனுல்
இந்தக் கதைநூலே என்னன்னுய் நின்பாதந்
தந்து சமர்ப்பித்தேன் தாழ்ந்து.

"நகுலன்"

## உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| 1. | மன்னிப்பு | (தினகரன்) | 1 |
| 2. | அன்பின் வழி அது! | (ஈழநாடு) | 12 |
| 3. | கற்புக்கரசி | (கலைவாணி) | 26 |
| 4. | உங்களுக்குத்தான் சொந்தம் | (விவேகி) | 38 |
| 5. | கன்னிப் பெண் | (ஈழநாடு) | 49 |
| 6. | தமிழ்ச் சட்டம்பி | (சுதந்திரன்) | 61 |
| 7. | மானம் | (ஈழநாடு) | 68 |
| 8. | ஆத்திரக்காரனுக்கு | (ஈழநாடு) | 87 |
| 9. | உண்மை ஒளி | (ஈழநாடு) | 97 |
| 10. | தண்டனை | (ஈழநாடு) | 109 |
| 11. | பண்பு | (கலைவாணி) | 123 |
| 12. | அந்தஸ்து ஒத்துவராது | (வீரகேசரி) | 133 |


(இத்தொகுதியில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையாகும்.)

# மன்னிப்பு

எல்லோருக்குமே காலம் ஒரேமாதிரி இருப்ப தில்லை. வாழ்க்கையில் இன்பமும் துன்பமும், மேடும் பள்ளமும் ஏற்படத்தான் செய்கின்றன. அன்னம் மாத்திரம் இதற்கு விதிவிலக்கல்ல.

அன்னம்....அன்னமும் செல்வக் குடும்பத்திலே பிறந்து, செல்வந்தர் ஒருவரைத் திருமணம் செய்து, மாடி வீட்டிலே பஞ்சு மெத்தையில் படுத்துறங்கி, பார்ப்போர் வியக்கும் முறையிலே சீமாட்டியாக வாழ்ந்தவள்தான். மாமியென்றும் மச்சாளென்றும், ஆச்சியென்றும் அக்காளென்றும் உறவு கொண்டாடி அவளின் மிச்சச் சோறு தின்று வளர்ந்தோர் எத்தனையோ பேர். அத்தனை பேரும் பேயென்றும் பிசாசென்றும் கூறுமளவுக்கு அவள் வாழ்க்கை மாறிவிட்டது!

மாடி வீட்டிலே பஞ்சு மெத்தையில் படுத்துறங்கியவள் படுக்கப் பாயின்றி, இருக்க வீடின்றி, உண்ண உணவின்றி, நடைபாதையின் ஓரத்திலே படுத்திருக்கும் பிச்சைக்காரக் கும்பலோடு சேர்ந்துவிட்டாள்.

அன்று அன்னம் மாத்திரம் எல்லோருக்கும் முன்பு எழும்பிவிட்டாள். எல்லோருமே கால்களையும் கைகளையும் முடக்கிக்கொண்டும் பிள்ளைகளை அருகில் வைத்துக் கொண்டும் படுத்திருந்தனர். எல்லோருக்கும் முன்பு

தான் தன் தொழிலை ஆரம்பித்துவிடவேண்டும் என்பத னலோ என்னவோ, அதிகாலையிலேயே அவள் தன் பிச்சைப் பாத்திரங்களை எடுத்துக்கொண்டும் பொல்லை ஊன்றிக்கொண்டும் எழும்பினுள். திடீரென அவளது மடியிலிருந்து "கலீர் கலீர்" என்ற சத்தத்துடன் முதல் நாள் சேர்த்த நாணயங்கள் எல்லாம் கீழே விழுந்தன. கண்ணுக்குத் தெரிந்த நாணயங்கள் எல்லாவற்றையும் தடவி எடுத்துக்கொண்டு புறப்பட்டாள்.

அன்று அவள் போன வீடுகளிலெல்லாம் அவளுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. பணம் நிறையச் சேர்ந்தது. மிக்க மகிழ்ச்சியுடன் எல்லாக் காசுகளையும் எண்ணிக்கொண்டு, தாண்டித் தாண்டிச் சென்ருள், கிழவி. நிறையப் பணம் சேர்ந்த பெருமகிழ்ச்சியினுல் வாடிக்கையாகச் செல்லும் பாதையைக் கூட மறந்து பரமானந்தர் வீதி வழியாகச் சென்ருள். அந்த வீதி அவளுக்குப் புதிய பாதையாதலால் கதவுகளில் தட்டு வதற்குப் பயமாக இருந்தது. எனினும், ஒரு குறிப் பிட்ட வீட்டுக் கதவில் இருந்த பொத்தானை அழுத்தி ஞள். ரீங்!...ரீங்!!...என்றது மணி.

மணி அடிக்கும் சத்தம் கேட்டதும் ஓடிவந்தாள் பவானி. பவானி அழகிகளுள் அழகி. கயல் போன்ற கண்கள். அம்பு விழிகள், கதுகதுப்பான கண்ணுடிக் கன்னங்கள், வில் போன்று வளைந்த – மை தீட்டிய புருவங்கள், சிவந்த நெற்றியில் குங்குமப் பொட்டு, சுருண்டு நெளிந்து கன்னத்தை முத்தமிடும் மயிர்த் தளிர்கள், கொவ்வையிதழ், முத்துப் போன்ற பற்கள், பொன்னகையைப் பழிக்கும் புன்னகை.

வந்ததும் ஏசிக் கலைத்துவிடுவாள் என்றுதான் நினைத்தாள் கிழவி — காற்றுப்போன பலூன் போல் சுருங்கிய சரீரம்; நரைத்த தலைமயிர், சுருங்கிய நெற்றி யிலே திருநீற்றுப் பூச்சு, பூஞ்சணம் பிடித்த கண்கள்,

கறுப்புக் காவி படிந்த இரண்டு மூன்று பற்கள், வலக் கையிலே பொல்லு, இடக்கையிலே பிச்சையெடுக்கும் பாத்திரங்கள்—பயந்து, நடுங்கி, ஒடுங்கிப் பாவிபோல் நின்ருள்.

கிழவியைக் கண்டதும், மிக்க ஆவலுடன் "யார் நீங்கள்? என்ன வேண்டும்?" என்ருள் பவானி. "அம்மா! நான் பரம ஏழை. பிச்சை தாருங்கள் அம்மா!" என்று கைகால் நடுநடுங்கத் தாழ்ந்த குரலில் கேட்டாள் கிழவி. கிழவியைப் பார்த்தவுடனே கிழவி பெரிய இடத்திலே பிறந்து, செல்வச் சீமாட்டியாக வாழ்ந்து, காலத்தின் கோலத்தால் பிச்சைக்காரியாக மாறியிருக்கிருள் என்பது பவானிக்குப் புரிந்து விட்டது.

"தாயே! உள்ளே வாருங்கள்" – கிழவிக்கு ஆச்சரியம் வந்துவிட்டது. "தாயே! உள்ளே வாருங்கள்" என்று கூறுகிருளே. 'தாய்' என்று என்னைக் கூப்பிடுவதற்கு இவள் மனம் எப்படி இசைந்தது? ஒருவேளை இவளது 'தாய்' இறந்துவிட்டாளோ, அல்லது என்னை இவளுக்கு முன்னரே தெரியுமோ?" என்று தனக்குள்ளே நினைத்துக்கொண்டு நிற்கும்பொழுது; "தாயே! ஏன் தயங்குகிறீர்கள்? இந்த வீடு உங்கள் சொந்த வீடு மாதிரி. வாருங்கள் உள்ளே." – பவானியின் வற்புறுத்தலைக் கிழவியால் மீற முடியவில்லை. கிழவி உள்ளே போனுள்.

"தாயே! உந்தக் கதிரையில் இருங்கள்! இதோ வருகிறேன்" என்று அன்பு ததும்பக் கூறிவிட்டுச் சிட்டுக் குருவிபோல் ஓடினுள் பவானி.

பவானி குசினிப்பக்கம் செல்வதைக் கண்ட கிழவிக்குப் பவானியின் செயல்கள் ஒன்றுமே புரியவில்லை. சுற்று முற்றும் பார்த்தாள். ரீப்போவில் வைக்கப்பட்டிருந்த பெண் ஒருத்தியின் சிலை அவள் கவனத்தைக் கவர்ந்தது. அச்சிலையை அவள் முன்பு பார்த்ததாக

ஞாபகம். அந்தச் சிலையையே கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஆச்சி! எனது நண்பர் ஒருவர் வருவதாகச் சொல்லியிருக்கிறார். அவரைக் கூட்டிக்கொண்டு வரவேண்டும். அவரைக் கூட்டி வரும்வரை அவவோடு இருந்து கதையுங்கோ. அவவுக்குப் பாட்டிகள் என்றால் அதிக விருப்பம். நான் வரும்வரை கதைத்துக்கொண்டிருங்கோ" என்று கூறிவிட்டுப் பவானியின் கணவன் கலாதரன் நடையைக் கட்டினான்.

கலாதரன் கதவைச் சாத்திவிட்டு வெளியே போவதற்கும் பவானி காப்பியை ஏந்திக் கொண்டு கிழவியின் அருகில் வருவதற்கும் சரியாக இருந்தது. கிழவியின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன.

"தாயே! இந்தக் காப்பியைச் சாப்பிடுங்கள்," என்று கிழவியின் கையில் கொடுத்துவிட்டு அருகில் இருந்த கதிரையில் அமர்ந்தாள் பவானி.

கிழவியைப் பற்றிக் கேட்க வேண்டும்; கிழவியின் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளை அறியவேண்டுமென்று பவானியின் உள்ளம் துடித்தது.

"தாயே! உங்களைப் பார்க்கப் பெரிய இடத்துப் பெண் போலவும், படித்த பெண் போலவும் தெரிகிறதே."

"அம்மா! உன்னைப் போன்ற பண்புள்ள பெண் மணிகளை நான் இதுவரை கண்டதேயில்லை. நீ இப்படி நடந்துகொள்வதற்கு?..."

"காரணத்தைத் தான் கேட்கிறீர்கள் போல் தெரிகிறது. அதை மாத்திரம் கேட்காதீர்கள். அதைச் சொல்ல என் நா மறுக்கிறது".

"சொல்ல முடியாத காரியம் ஏதாவது நடந்துவிட்டதா?"

"என் தாய் இறந்துவிட்டாள். எனக்காகத்தான் இறந்துவிட்டாள்".

"உங்களுக்காக உங்கள் தாய் இறப்பதற்குக் காரணம்?"

"என் அப்பா நான் விரும்பாத ஒருவரை எனக்குத் திருமணம் செய்து வைத்ததுதான் காரணம்."

"அப்படியானுல் நீயேன் அதற்கு உடன்பட்டாய்?"

"என் தந்தையின் பெயரைக் காப்பாற்ற... அது இருக்கட்டும், தயவுசெய்து எனது விஷயத்தை நிறுத்தி விட்டுத் தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட விபரீதங்களைச் சொல்கிறீர்களா?" என்று பவானி கேட்டதும், கிழவிக்குப் பெரும் வேதனையாக இருந்தது.

"எனது வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளை நான் எப்படிக் கூறுவேன்! அதைக் கூறும்படி எத்தனையோ பேர் என்னை வற்புறுத்தினர். நான் இதுவரை ஒருவருக்குமே கூறியதில்லை நீ தாயை இழந்ததனுலோ என்னவோ என்னையும் உன் தாயைப் போலவே கருதுகிருய். உன்னை மருமகளாகப் பெற்றவள் பாக்கியசாலியாகத்தான் இருக்கவேண்டும். நீ எனக்கு மருமகளாகக் கிடைத்திருந்தால்..." என்று இழுத்துக்கொண்டே தனது வரலாற்றைக் கூற ஆரம்பிக்கும்போதே, கிழவியின் மங்கிப்போன கண்கள் குளமாகிவிட்டன. கண்ணீரைத் தன் அழுக்குப் படிந்த சேலைத் தலைப்பினுல் துடைத்து விட்டுக்கொண்டு, நாலு வருடமாகப் பிச்சையெடுத்து வயிறு வளர்த்துவரும் கதையை ஆரம்பித்தாள்.

## 2

அன்று எங்களூரிலே அழகி—படித்தவள் யாரும் இருகிருர்களா என்று யாரையாவது கேட்டால் தெய் வேந்திரனின் மகள் 'அன்னம்' என்று கூசாமல் கூறிவிடுவார்கள். அத்தகைய பெருமை பெற்ற என்னை என் அத்தான் முறையான ஒருவர் திருமணம் செய் தார். அவர் தாலி கட்டியதிலிருந்து நானும் அவரும் ஒருவரை ஒருவர் பிரியாது சந்தோஷமாக வாழ்ந் தோம். நான் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தேன். அவரும் அப்படித்தான்.

மாடி வீட்டிலே சகல சௌகரியங்களுடனும் பார்ப் போர் பொருமை கொள்ளும் வகையில், எங்கள் வாழ்க் கையில் ஓராண்டு உருண்டோடியது. ஆனுல், கொஞ் சிக்குலாவ—மழலை மொழி கேட்க எங்களுக்கு ஒரு பிள்ளை இல்லையே என்ற கவலை எங்களை வாட்டி வதைத் தது. வேண்டாத வரமில்லை. கோவிலெல்லாம் கையெ டுத்துக் கும்பிட்டோம். வெள்ளிக்கிழமை என்ருல், எங் களைக் கந்தசுவாமி கோவிலில்தான் காணலாம்.

'மலடி' என்ற பெயரை நீக்கக் கந்தனருளால், மகன் பிறந்தான். அவனுக்கு எங்களூரிலே இருந்த மதிப்பு அப்பப்பா! சொல்லவே முடியாது. அழகான எனக்கு அழகானவன்தான் பிறந்தான். எங்கள் வீதி யில் யார் போனுலும் அழகா! அழகா!! என்று கூப் பிட்டு அவனைத் தூக்கி முத்தமிட்டுவிட்டுத்தான் போவார்கள்.

அவனுக்கு ஐந்து வயது நிரம்பியபோது, அவன் தந்தைக்கு ஆயுள் முடிந்து விட்டது. அவர் போய் ஒரு வாரங்கூட ஆகவில்லை — அவரின் அன்புருவம் என்னை விட்டு அகலவில்லை. அதற்கிடையில் எனக்கு மறு திரு மணப் பேச்சு நடைபெற்றது... இந்த வழக்கம் எப் பொழுதுதான் மாறுமோ ?.........

சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்ற 'புரோக்கர்' மாரிடமிருந்து தப்பவே முடியாது. சந்தர்ப்பம் கிட்டும் போதே பணத்தைச் சம்பாதித்து விடவேண்டும் என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருந்த புரோக்கர் முருகுப்பிள்ளையும் வல்லிபுரமும் எனது வீட்டுப் பக்கம் தலைகாட்டினர்.

"அன்னம் உனக்கும் வயது சொற்பம். உனது பிள்ளைக்கும் ஐந்து வயதுதான் ஆகிறது. இந்தச் சின்ன வயதிலே இன்னும் எத்தனையோ பிள்ளைகளைப் பெற்றுச் சீரும் சிறப்புமாக வாழவேண்டியவள் நீ. அதை விட்டு விட்டுச் செத்துப்போன கணவனை நினைத்துக் கண்ணீரும் கம்பலையுமாகக் காலத்தைக் கழிக்கப் போகிருயா?" என்று பேச்சை ஆரம்பித்தார் முருகுப்பிள்ளை.

"ஐயா! பெரியவரே பணம் தேவையானல் கேளுங்கள் தருகிறேன். இதை மாத்திரம் சொல்லாதீர்கள். நான் சிறுவயதிலே கணவனை இழந்தது உண்மைதான். ஆனல் மறுமணம் செய்ய நான் விரும்பவில்லை. என் கணவர் இருக்கிருர் என்பதற்கு அத்தாட்சியாக இதோ என் மகன் இருக்கிருன். என் மகனை வளர்த்துப் படிக்க வைப்பது என் கடமை. அது என் ஆசையுங்கூட."

"அன்னம்! இந்தச் சிறு வயதிலே நீ மறுமணம் செய்யாது தனிமையாக இருந்தால்...ஊரவர்கள் சந்தேகிப்பார்கள். அதனல் நீ தற்கொலை செய்யவேண்டி நேரிடும்."

"ஊரவர்கள் சந்தேகித்தால் என்ன? நான் சரியாக இருந்தால் யார் என்ன செய்ய முடியும்? ஊரவர்களுக்காக நான் என் வாழ்க்கையை நாசப்படுத்துவதா? ஒருத்தி ஒருவனுக்குத்தான் உரியவள். அவன் போய் விட்டால்...பிறகு மண்ணுக்குத்தான் அவளை மணக்க உரிமையுண்டு"—என்று ஆத்திரம் பொங்கக் கூறினேன்.

இதைக் கேட்டதும் புரோக்கர் முருகுப்பிள்ளையும் வல்லிபுரமும் போய்விட்டார்கள்.

“நீங்கள் மறுமணம் செய்யவில்லையா?” என்று கேட்டாள் பவானி.

“இல்லை”

“உங்கள் மகன் எங்கே?”

“என் மகன் — அவனை நினைத்தாலே உடலெல்லாம் நெருப்பாக எரிகிறது. அவனும் என்னைவிட்டுப் பிரிந்துவிட்டான். பிரிவு என்பதே பொறுக்க முடியாத ஒன்று. அதுவும் மகனை விட்டுத் தாய் பிரிவதென்றால்...அதை எவரால் பொறுக்கமுடியும்? அந்தப் பிரிவும் என்னைப் பொறுத்தவரையில் ஏற்படத்தான் செய்தது.”

“அந்தப் பிரிவு எப்படித்தாயே ஏற்பட்டது.”

“சின்னஞ் சிறு வயதிலிருந்து என் இரத்தத்தை எல்லாம் பிழிந்து பாலாகக் கொடுத்து, என் மகனை வளர்த்தேன். அவனும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வந்தான். அவனை நன்றாகப் படிப்பித்துப் ‘பட்டதாரி’யாக்க வேண்டுமென்று என்னுள்ளம் துடித்தது. அவனைப் படிப்பித்தேன். அவனும் நன்றாகப் படித்தான். ஒவ்வொரு வகுப்பிலும் முதலாவதாகவும் வந்தான். அவனைக் கல்லூரியிலே எல்லோரும் போற்றிப் புகழ்ந்தனர். பரிசுகளும் கொடுத்தனர். என் மகன் ‘பட்டதாரி’ யாக வந்து என்னைக் காப்பாற்றுவான் என்று என் வீடு வாசல் எல்லாவற்றையுமே விற்றுப் படிப்பித்தேன். வீடு போய்விட்டது; பணம் போய்விட்டது; மகனும் போய்விட்டான்.”

“எங்கே?”

“இறந்துவிட்டான்”

“காரணம்?”

என்மகன் மற்றப் பிள்ளைகளைப்போல் தாய் சொல்லைத் தட்டுபவனல்ல. நல்லவன் என்று எல்லோராலும் போற்றப்பட்டவன். அவன் அழகில் மயங்கி, அவனைத் திருமணம் செய்துவிட வேண்டுமென்று என்னை மாமி, மாமி என்று முறை கொண்டாடியவர்கள் எத்தனையோ பேர்.

"எல்லோருடைய விருப்பத்துக்கும் மாருக, அவன் படித்த கல்லூரியிலே அவனுக்குக் காதலி உண்டாகி விட்டாள். அவனுடன் படித்த கள்ளி ஒருத்தி அவனை மயக்கி விட்டாள்."

"அக் கல்லூரியிலே 'மாணவர் சங்கம்' ஒன்று இருந்ததாம். அச்சங்கத்திற்கு என்மகனைத் தலைவராகவும் அவளைக் காரியதரிசியாகவும் தெரிவு செய்தார்களாம். அதற்குப் பின்புதான் அவர்கள் இருவருக்கும் காதல் ஏற்பட்டதாம்" என்ருள் கிழவி. கிழவி கதையைச் சொல்லும் போதே பவானியின் முகத்தில் ஏக்கம் தோன்றி மறைந்தது.

"என் மகன் தலைவராக இருக்கும்போது அவள் சங்க அறிக்கைகளை என் மகனுக்குக் காட்டுவாளாம். என் மகன் அவற்றைத் திருப்பி எழுதிக் கொடுப்பானும். என் மகனின் திறமையைக் கண்ட அவள் ஒரு நாள் என் மகனை "அத்தான்! உங்களை எனக்குப் பிடித்துவிட்டது. உங்களை மணந்துகொள்ள என் மனம் துடிக்கிறது. நீங்கள் இல்லாமல் நான் வாழ முடியாது" என்ருளாம்.

கல்லூரியிலே 'காதல்' என்ருல் மாணவர்கள் சும்மா இருப்பார்களா? கல்லூரிச் சுவர்கள் எல்லாம் என் மகன் பெயரும் அவள் பெயரும் காட்சியளித்தன. பெயர்கள் மாத்திரமல்ல, கேலிச் சித்திரங்களும் கண்களைக் கூச வைத்தன.

"அத்தான்! உங்களையும்—என்னையும் பற்றிச் சுவர்களிலே என்னென்ன எழுதியிருக்கிருர்கள், பார்த்தீர்களா?"

"பார்த்தேன்"

"இனி நீங்கள் தான் எனக்கு உரியவர். என்னை மறந்துவிடாதீர்கள். மறந்தால் என்னை உயிருடன் காணமாட்டீர்கள்", என்று கூறிய அவளின் சொல்லை நம்பினான் என் மகன்.

"அவளே எனக்குரியவள். அவளைத்தான் நான் திருமணம் செய்வேன். அவள் இல்லாவிட்டால் நான் உயிருடன் இருக்கமாட்டேன்." என்றான் என்னிடம்.

"மகனே! உன்விருப்பம் தான் என் விருப்பம்," என்று கூறிவிட்டேன் நான். எனது விருப்பத்தைப் பெற்றவன் அவளுடன் நெருங்கிப் பழகத் தொடங்கினான். எங்கள் வீட்டிலிருந்த இதே போன்ற சிலை ஒன்றையும் அவளிடம் கொடுத்தான்," என்று கிழவி சொன்னதும் புவானியின் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் நிலத்தில் விழுந்து சிதறின.

"இருவரும் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிவதில்லை என்று 'சத்தியம்' செய்தனர். கல்லூரி வாழ்வு முடிந்ததும் இவர்களது காதல் வாழ்வும் பிரிந்தது. "பள்ளிக் காதல் படலை மட்டும்" என்பார்களே, அதேபோல் இவர்கள் இருவரது காதலையும் பிரித்து விட்டார் அப் பெண்ணின் தந்தை. கல்லூரியை விட்டதும் இருவருக்கும் சந்திக்கவே சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

"ஆண்டுகள் பல உருண்டோடின. அவளுக்குத் திருமணம் நடந்த செய்தி என் மகனுக்கு எட்டியது. "அத்தான் என்னை மன்னித்து விடுங்கள். என் அப்பாவின் வற்புறுத்தலுக்காகவும் அவர் மானத்தைக் காப்பாற்றவும் என் வாழ்வை இன்னொருவருக்கு அர்ப்பணித்து விட்டேன்" என்று அவள் எழுதிய கடிதம் அவனுக்குக் கிடைத்தது. அவ்வளவுதான்.

"ஓடினான்...என்னைப் பிரிந்து — பிறந்த மண்ணைப் பிரிந்து, வாழ்வையே துறக்கும் நோக்கமாக ஓடினான்"...

"பிறகு என்ன நடந்தது?" என்று கேட்கும்போதே பவானியின் குரல் அடைத்துவிட்டது. அவள் கண்கள் குளமாகி, கண்ணீர் ஆறுக ஓடியது. கைகள் நடுங்கின. கால்கள் பதறின.

"பிறகு ஓடியவன் ஓடியதுதான், திரும்பவேயில்லை."

"எங்கு ஓடினுர்?" என்று அவள் கேட்டதற்குக் காரணம் உண்டு. அவன் தன் காதலன் தானு? அந்த நிகழ்ச்சிகள் தன் வாழ்க்கையில் நடந்தவைதானு என்பதை அறிவதற்கு அவள் உள்ளம் அவாவியது. அவன் பெயர் என்னவென்று கேட்பதற்கு வாயெடுக்கும் போது அவள் மகன் நந்தகுமார் நித்திரைவிட்டு எழுந்து அழும் சத்தம் கேட்டு "நந்தா?" என்று கூப்பிட்டாள் பவானி.

"நந்தா! நல்ல அருமையான பெயர். எதற்காக இந்தப் பெயரை உன் மகனுக்கு வைத்திருக்கிறுய்?"

"நினைவிற்காக"

"யார் நினைவிற்காக?"

"என் அன்புக்குரிய ஒருவரின் நினைவிற்காக"

"அப்படியா?"

"நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்?"

"என் மகனின் பெயரும் நந்தகுமார்தான்"

"அப்படியானுல் அவர் படித்த கல்லூரி...?"

"மத்திய கல்லூரி."

"மாமி! உங்கள் மகனைக் காதலித்த கள்ளி நான் தான். காதலித்த நான் கல்யாணம் செய்யாமற் கைவிட்டேன். என்னுல்தான் உங்கள் மகன் உங்களை விட்டுப் பிரிந்து விட்டார். என்னை மன்னித்து விடுங்கள் மாமி...என்னைமன்னித்து விடுங்கள்" அன்னக் கிழவியின் காலில் விழுந்து கதறிக் கதறி அழுதாள் பவானி.

(7-3-1965)

# அன்பின் வழி அது!

"பிள்ளை! பிள்ளை!! உந்தக் கதவைத் திற பிள்ளை" என்று கூறிக்கொண்டே மழையில் நனைந்து வந்த கந்தசாமி வாத்தியார் கதவிலே தட்டினர். அவர் வீட்டில் இருந்து வரும்பொழுது மழை பெய்யுமென்று கனவிலும் நினைக்கவில்லை. அவர் நடந்து வரும்பொழுது பாதி வழியிலேயே மழை பெய்யத் தொடங்கிவிட்டது. கந்தசாமி வாத்தியாரோ எந்த நேரமும் குடையுடன்தான் வெளிவருவார். இன்றும் குடையுடன்தான் வந்தார். ஆனல் அவரது குடையில் பொத்தல்கள் பல இருந்த தால் மழை அவரை நனைத்துவிட்டது.

கந்தசாமி வாத்தியாரின் குரல் கேட்டதும் குசினி வேலையை விட்டுவிட்டு, ஓடி வந்து கதவைத் திறந்தாள் சரோஜா. கந்தசாமி வாத்தியார் கதவின் அருகிலே நின்ருர். அவரின் உடையெல்லாம் நனைந்திருந்தது. தலையில் இருந்தும் தண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. "ஏன் பெரியப்பு இந்தச் சோனுவாரி மழையுக்குள் வந்தனீங்கள். உடுப்பெல்லாம் நனைஞ்சு போச்சு. உதை யெல்லாம் கழட்டிப்போட்டு இந்தச் சாரத்தைக் கட்டுங்கோ" என்று சொல்லித் தனது தகப்பனுரின் சாரம் ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்தாள் சரோஜா.

கந்தசாமி வாத்தியாருக்குத் தம்பியாரின் சாரத் தைக் கட்ட ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. அவர் கட்டவா விடவா என்று யோசித்துக்கொண்டு இருந்தார்.

"என்னணை யோசிக்கிறியள். தம்பியாற்றை சாரம் தானே. மேலெல்லாம் விறைக்கப்போகுது. கெதியாக் கட்டணை" என்று சொல்லிக்கொண்டே கோப்பி தயாரிப்பதற்காகக் குசினிப்பக்கம் சரோஜா போவதற்கும் சரோஜாவின் தாயார் பூரணம் நித்திரையிலிருந்து எழும்பி வருவதற்கும் சரியாக இருந்தது.

"என்ன நாலு மணியாகவில்லை. நித்திரை கொண்டு விட்டு வாறியள் போலைக் கிடக்கு. நித்திரை எண்டா அதற்கு ஒரு அளவு கணக்கு வேண்டாமோ? தாய் மாரைப் பார்த்துத்தானே பிள்ளையளும் பழகிறது" என்ருர் கந்தசாமி வாத்தியார்.

"இண்டைக்கு மழை ஒரு மாதிரிக் கிடந்தது. நித்திரை வந்துவிட்டது" ஏன்ருள் பூரணம்.

"தம்பி எங்கே போவிட்டான்?"

"அவர் உங்கைதான் படுத்திருக்கிருர்."

"என்ன அவனும் நித்திரை கொள்ளுகிருனே? பின்னை இரண்டு பேரும் நித்திரை கொண்டனுங்கள் எண்டு சொல்லன்." குறும்பாகச் சொல்லிச் சிரித்தார் கந்தசாமி வாத்தியார். பூரணமும் அவரது குறும்புப் பேச்சு விளங்கியது போல் அவருடன் சேர்ந்து சிரித்தாள். இருவரும் விழுந்து விழுந்து வயிறு குலுங்கச் சிரிக்கும்பொழுது காப்பியைக் கொண்டுவந்து வைத்தாள் சரோஜா.

"சரோ, கொப்பரை ஒருக்கா எழுப்பிவிடு"

"ஏன் பெரியப்பு? அவர் இப்பதான் படுத்தவர்"

"அதுக்கென்ன, ஒருக்கா எழுப்பிவிடன்."

"நித்திரையாக் கிடக்கிறபோது எழுப்பினல் அடிச்சுப்போடுவார். நீங்கள்தான் போய் எழுப்புங்கோ."

"ஏனத்தான் அவரை எழுப்பிறியள். ஏதாவது சொல்ல வேணுமெண்டாச் சொல்லுங்கோவன். அவர் எழும்பினதுக்குப் பிறகு சொல்லுறன்" என்ருள் பூரணம்.

"என்னத்தைச் சொல்லுறது. சரோஜாவின் விஷயமாத்தான் கதைக்கவேணும்."

"என்ன.....என்ரை விஷயமோ!" குறுக்கிட்டாள் சரோஜா.

"ஓமடி பிள்ளை, உன்ரை விஷயமாகத்தான் கதைக்க வேணும்."

"முந்திக் கொண்டுபோய் பாண்கிணத்திலை தள்ளினது போதாதெண்டு இன்னும் கொண்டுபோய்த் தள்ளப் போறியளோ."

"சும்மா இரு பிள்ளை. உன்ரை புருஷன் மறியலுக்குப் போன பிறகு நல்லாத் திருந்திவிட்டான். அவனைத் தான் ஒற்றுமையாக்கி விடப்போறன். அவன் இப்ப கள்ளுக்கிள்ளு ஒன்றும் குடிக்கிறதில்லையாம்" என்று கந்தசாமி வாத்தியார் சொல்லிக்கொண்டே இருந்தார். அவர் கள்ளைப்பற்றிச் சொன்னதும் அவளுக்குப் பழைய சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. அந்தப் பழைய சம்பவங்களைச் சிந்திக்க அவளுக்கு அருவருப்பாக இருந்தது.

ஃ ஃ ஃ ஃ ஃ

சரோஜா அந்த ஊரைச் சேர்ந்த கதிரவேலு வாத்தியாரின் ஒரே ஒரு மகள். அவள் மிக்க அழகுடையவள். அழகிலே இலக்குமியை வென்றுவிடும் அழகிதான் சரோஜா.

சரோஜாவின் பொன்னைப் பழிக்கும் எழில் மேனியும், கண்ணைக் கவரும் கட்டழகும், மானைப் பழிக்கும் கயல் விழிகளும், மாங்கனியைப் பழிக்கும் சிவந்த

கன்னங்களும், பொன்னகையைப் பழிக்கும் புன்னகையும், அன்ன நடையைப் பழிக்கும் அழகு நடையும் காண்போரைக் கவரும் சக்தி வாய்ந்தவை. சரோஜா உண்மையிலே ஓர் அழகிதான்.

அவள் தங்கத்தால் உருக்கி வார்த்த தங்கச்சிலை.

சரோஜா கண்ணைக் கவரும் கட்டழகி மாத்திரமல்ல. படித்தவள். பண்புள்ளவள். அவள் ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் தண்ணீர் அள்ளுவதற்காக அவ்வூர் நல்ல தண்ணீர்க் கிணற்றுக்குப் போவாள். அவள் போகும்போது அவளின் அழகைக் கண்டு வாயினுள் இலையான் போவதையும் கவனிக்காமல் வாயைத் திறந்து சிரித்தபடி ரசித்துக்கொண்டு நிற்கும் இளைஞர்கள் ஏராளம்.

சரோஜா வெள்ளை வோயில் பாவாடையும் அதே சாரியும் அவற்றின் அழகைப் பளிச்செனை எடுத்துக் காட்டும் இரத்தச்சிவப்பு பிளவுசும் அணிந்து, உடுக்குப் போன்ற இடுப்பிலே தண்ணீர்க்குடம் ஒன்றை வைத்துக்கொண்டும் அன்னநடை நடந்துகொண்டும் தண்ணீர் அள்ளுவதற்காக அவ்வூர் நல்ல தண்ணீர்க் கிணற்றை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள்.

“சரோ! நானும் வாறன். கொஞ்சம் பொறுத்துக் கொள்” என்று சொல்லிக்கொண்டே, அவசர அவசரமாகத் தங்கள் வீட்டுப் படலையைத் திறந்துகொண்டு ஓடிவந்தாள் சரோஜாவின் சிநேகிதிகளுள் ஒருத்தி.

“ஏன் சரோ! இண்டைக்கு மாத்திரம் நேரஞ் சென்டு போச்சு. நீ வரும்வரையும் தான் காத்துக் கொண்டிருந்தனான். வீட்டிலே ஏதாவது.........” என்று இழுத்துக்கொண்டே நடந்தாள் கலா.

“என்னடி கலா! இண்டைக்கு ஏதோ புதுமையாகப் பேச்சை இழுத்துக்கொண்டே போகிறாய்.”

“எல்லாம் விஷயத்தோடைதான்.”

“சொல்லட்டே. சொன்ன என்ன தருவாய்?”

“..................”

“என்ன ஒண்டும் பறையாமை நிற்கிருய். எனக்கு எல்லா விஷயமும் தெரியும். மறைக்காமல் சொல்லு” என்று கலா கேட்டதும் சரோஜாவுக்கு மனதுக்குள்ளே ஒரு மாதிரித்தான் இருந்தது. இருந்தும் இருவரும் ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில் படித்ததால் தனது விஷயத்தைச் சொல்ல எத்தனித்தாள். அவளுக்கு வெட்கமாக இருந்தது.

“என்ன ஒண்டும் பறையாமை நிற்கிருய்? சிநேகிதிக்கும் சொல்லக்கூடாதோ?”

“கலா! எனக்குச் சொல்ல வெட்கமாக இருக்குதடி”

“என்ன வெட்கம். எனக்குத்தானே சொல்லப் போகிருய்?

“சரி, சொல்லுறன் கேலி செய்யாதே” என்று கேட்டுக்கொண்டே தனது கலியாணக் கதையைக் கூறி முடித்தாள் சரோஜா.

“சரோ! நீ கூறியதைப் போலவே நான் கேள்விப் பட்டேன். ஆனல், அதுபற்றிப் புத்திமதி கூறவேண்டியது உனது சிநேகிதியாகிய எனது கடமையாகும்.”

“கலா! என்ன புத்திமதியடி கூறப்போகிருய்?”

“உனக்குக் கலியாணம் பேசியிருக்கும் தியாகனைப் பற்றி எனக்கு நன்ருகத் தெரியும். அவன் ஓர் அரசாங்க உத்தியோகத்தன் - பணக்காரன் என்பதால் நீ ஆசைப் பட்டுச் சம்மதித்திருப்பாய் என்பதும் எனக்குத் தெரியும். ஆனல், அவன் ஒரு குடிகாரன் - சூதாட்டக் காரன் என்பதை அறிந்திருந்தால் திருமணத்திற்குச் சம்மதித்திருப்பாயா?

“என்ன! குடிகாரனு!”

"குடிகாரன் மாத்திரமல்ல, சூதாட்டக்காரன் என் பதையும் மறந்துவிடாதே. குடியும் சூதும் அவனின் ........" என்று பேச்சை இழுத்துக்கொண்டே கூட்டம் கூட்டமாகச் சென்று கொண்டிருந்த மாடுகளையும் துரத்தி வழி விலத்திக்கொண்டு அவசர அவசரமாக நடந்தாள் கலா. கலாவின் பின்னே சென்றுகொண் டிருந்தாள் சரோஜா.

இருவரும் கதைத்துக்கொண்டு சென்றதால் நேரம் போனது கூடத் தெரியவில்லை. மதியவேளையின் வெய் யில் சூடுதான் அவர்களுக்கு நேரத்தைக் காட்டியது. இருவரும் விறுவிறு என்று நடந்து சென்றனர்.

ஃ ஃ ஃ ஃ

சரோஜா, வீட்டு முற்றத்தில் இருந்த் சாய்வு நாற் காலியில் சாய்ந்துகொண்டு கதைப்புத்தகம் ஒன்றை வாசித்தாள். அவள் கதை வாசிக்கும்போது முதல் நாள் தண்ணீருக்குப் போகும்வேளை கலா கூறியது அவள் நினைவுக்கு வந்தது. ஒருவேளை நான் பணக் காரன் - அரசாங்க உத்தியோகத்தன் ஒருவனைக் கலி யாணம் செய்வது அவளுக்கு விருப்பமில்லைப் போலும். அதுதான் அவள் அப்படிச் சொல்லியிருக்கிறாள். அல்லது அவள் அவரைக் கலியாணம் கட்டப்போகி றாளோ!" என்று பல முறை பல மாதிரியெல்லாம் தனக் குள்ளே யோசிக்கிறாள். கடைசியாகக் கலா பொறாமைப் பட்டுத்தான் அப்படிச் சொன்னாள் எனத் தீர்மானித் துக் கொள்கிறாள்.

"பிள்ளை! கொப்பர் நிற்கிறாரே? சாமான் எல்லாம் வாங்கவேணும். எங்க போவிட்டான்? இன்னும் ஒரு கிழமை மாத்திரம்தானே கிடக்கு."

"எணை பெரியப்பு! எனக்குந்தக் கலியாணம் வேண்டாமணை"

"என்ன!.........கலியாணம் வேண்டாமோ?"

"ஏன்?"

"சரியான குடிகாரனும்"

"ஆர் சொன்னது?"

"கலாதான் சொன்னவள்"

"அவள்தான் கட்டப்போறுளாக்கும். பொடியனைப் போலக் குணசாலியைத் தேடினுலும் கிடைக்குமோ? பொடியன்ரை வீடுவாசல், அறிவு, அந்தஸ்து இவை யெல்லாம் வேறு எந்த மாப்பிள்ளையிடம் இருக்கு. ஆனுல், இந்தக் குடியொண்டுதான்......... அதையும் பெண்கள் நினைத்தால் மாற்றிவிடலாம். பெண்களின் ஆணைச்சக்கரத்துக்குள் மயங்காத ஆண்களும் எங்காகிலும் இருக்கினமோ?"

"என்னவோ எனக்குப் பயமாகத்தான் கிடக்கு"

"எடி விசரி! உன்னைக் கொண்டுபோய்ப் பாண்கிணத்துக்குள் தள்ள எனக்கு என்ன பைத்தியம் பிடிச்சிருக்கோ?"

".................."

"பொடியனுக்கு எத்தனை இடமெல்லாம் கேட்டவங்கள். அவன் உன்ரை அழகாலும் படிப்பாலும் அல்லோ உன்னைச் செய்ய விரும்பினவன்" என்று கதைத்துக்கொண்டு இருக்கும்பொழுது கதிரவேலு வாத்தியார் வந்து கதிரையில் இருந்தார்.

"என்னடா தம்பி! உன்பாட்டுக்குத் திரிகிருய். சாமான் எல்லாம் வாங்கிப் போட்டியோ?"

"சாமானுக்குத் தானணை சொல்லிப்போட்டு வாறன்."

"மேளத்துக்குக் கீளத்துக்குச் சொன்னுயோ?"

"ஓமணை. அவன் தச்சணுமூர்த்திக்கும் சின்னராசாவுக்கும் சொன்னனுனணை"

"நீ உதிலைமாத்திரம் விடமாட்டாயெண்டு எனக்குத் தெரியும்."

"என்னணை செய்கிறது. ஒரேயொரு பிள்ளைக்குச் செய்கிற நல்ல காரியத்துக்கு நல்லாத்தானே செய்ய வேணும். அதுவும் பணக்கார மாப்பிளை மருமகனாய் வரும்போது......"

"சரிசரி! நேரம்போச்சு. வீட்டை போய்விட்டு வாறன்." கதிரையில் சாத்தியிருந்த குடையையும் எடுத்துத் தோளிலே போட்டுக்கொண்டு நடந்தார் கந்தசாமி வாத்தியார்.

ஃ ஃ ஃ ஃ

சரோஜாவுக்கும் தியாகனுக்கும் வெகு கோலாகலமாகத் திருமணம் நடைபெற்றது. தியாகன் குணத்திலே தங்கமானவன். பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அரசாங்க உத்தியோகத்தன். மங்கையர் மயங்கும் அழகன். ஆனால், ஒன்றுதான் அவன் புகழைத் தடுத்துக்கொண்டிருந்தது. அந்த ஒன்று எது என்று கேட்பீர்கள். அதுதான்......குடிப்பழக்கம். அது இடையிலே தோன்றியதல்ல. அது அவன் பரம்பரையின் பழக்கம்.

அவன் ஒரு குடிகாரன் என்று கலியாணம் செய்ய முன்பே சரோஜாவுக்குத் தெரியும். தெரிந்திருந்தும் அவனது குடிப்பழக்கத்தை எப்படியாவது மாற்றிவிடலாம் என்று எவ்வளவோ பாடுபட்டாள் சரோஜா. அவளின் முயற்சிகள் யாவும் தோல்வியடைந்தனவே அல்லாமல் வெற்றி பெறவில்லை.

தினமும் அவளுக்கு அடியும் உதையும்தான் கிடைத்தது. அவனது அடியாலும் உதையாலும் அவளின் உடல் மெலிந்துவிட்டது. தினமும் காலையில்

வேலைக்குப் போவான். வேலை முடிந்ததும் சாராயத் தவறணை – கள்ளுக் கொட்டில் – சூதாட்ட மரத்தடி முதலிய இடங்களில் நேரத்தைப் போக்கிவிட்டு இரவு பதினொரு மணி, பன்னிரண்டு மணிக்குப் பின்பு வீட்டுக்கு வருவான். அவன் வீட்டுக்கு வரும்வரை அவள் காத்துக்கொண்டு இருப்பாள். அவன் வீட்டுக்கு வரும் பொழுதே படலையில் சத்தம் கேட்கத் தொடங்கிவிடும். அவனின் சத்தம் கேட்டால் போதும். சரோஜாவின் உடலெல்லாம் 'குலப்பன்' காய்ச்சல் மாதிரி நடுங்கும். பாம்பைக் கண்ட தேரை போல நடுங்கினாலும் எந்த நேரமும் அவனுக்கு உணவளித்து விட்டே நித்திரைக்குப் போவாள்.

"எடியே சரோஜா! வாடி இஞ்சை. இந்தாடி இந்தக் கள்ளைக் கொண்டுபோய் மேசையில வையடி" என்று படலையடியில் வரும்பொழுதே கூறிக்கொண்டு வருவான்.

"என்ன, இன்னும் காணையில்லை. இண்டைக்கு வர மாட்டாள் போலைகிடக்கு. வராமை விட்டியோ கொண்டு போடுவன்" என்றதும் கைகள் பதறவும், கால்கள் நடுங்கவும் ஓடிப்போய் வாங்குவாள்.

"என்னடி, சோறு காச்சிப் போட்டியோடி?"

"..................."

"என்ன கறியடி காச்சினனி. எத்தினை காசுக்கு மீன் வாங்கினனி?"

"ஒரு ரூபாவுக்கு" என்று சொல்லும் பொழுதே அவள் உதடுகள் படபடக்கும்.

"எல்லாத்தையும் திண்டுபோட்டியோ. அல்லது மிச்சம் கிச்சம் கிடக்கோ?"

"..........." அவளது கண்களில் கண்ணீர் வடியும்

"என்னடி அழுகிருய். சோத்தையும் கள்ளையும் எடுத்துக்கொண்டு வாடி."

சரோஜா சோற்றையும் கள்ளையும் அவசர அவசர மாக எடுத்துக் கொண்டுவந்து அவன் முன்னே வைப்பாள்.

"என்னடி. இதுதானேடி ஒரு ரூபாவு மீன். நான் வர முன்னமே நீ போட்டு விழுங்கிப் போட்டியோடி"

"..................."

"சரி சரி இந்தாடி. இதிலை கொஞ்சம் சாப்பிடடி. இந்தக் கள்ளிலையும் கொஞ்சம் குடிச்சுப் பாரடி. என்ன! குடிக்க வெட்கமாகக் கிடக்கோ? ஒருத்தரும் பாக்க மாட்டினம், குடியடி. ஏன்ரி நீ வெட்கப்படுகிருய். உந்தப் பிள்ளைத்தாச்சிமார் எல்லாம் குடிச்சுப் பழகி விட்டாளவையடி" என்று சொல்லி அலட்டிக்கொண்டே சாப்பிட்டுச் சாப்பிட்டுக் கள்ளையும் குடிப்பான்.

பக்கத்து வீட்டுக்காரர்கள் சரோஜாவை அவன் படுத்தும் கஷ்டங்களையெல்லாம் பார்த்து ஏசுவார்கள். அவன் ஒருவரது சொல்லையும் கேட்பதில்லை. சிலவேளை அவன் கண்டமாதிரியெல்லாம் கெட்ட வார்த்தைகளில் ஏசிவிடுவான் என்று அஞ்சியதால் தங்களுக்குள்ளே அவனின் நடத்தைகளைப் பற்றி மறைவாக கதைத்துக் கொள்வார்கள்.

அவள் அவனைத் திருத்தும் நோக்கமாக ஏதாவது எதிர்த்துக் கதைத்துவிட்டால் போதும், கையாலும் காலாலும் அடியும் உதையும் தராளமாக விழும். சில நாட்களில் சட்டி பானை எல்லாம் தாறுமாருக உடையும். கன்னத்தில் பளார் பளார் என்று மாறி மாறி அடி விழும். ஆனுல், அவள் அந்த அடிகள் எல்லாவற்றை யும் வாங்கிஞலும் 'கல்லாஞலும் கணவன், புல்லாஞ லும் புருஷன்' என நினைத்துக் கணவனையே தெய்வ மாக மதித்து நடந்தாள்.

ஒருநாள்.........

சனிக்கிழமை அவனுக்கு அரைநேர வேலை. அரைநேரத்துடன் வேலையை முடித்துக்கொண்டு கள்ளுக் கொட்டில் – சாராயத்தவறணை இரண்டையும் தரிசித்து இரண்டு மூன்றென வயிற்றுக்குள் அளந்து விட்டுக் கொண்டு சூதாட்டப் பக்கமாகச் சென்றான்.

அந்த ஊரின் மத்தியிலே ஒரு புளியமரம். புளிய மரம் என்றால் புளியமரம்தான். அந்த ஊரின் ஆதிமரம் நான்தான் எனப் பறை சாற்றுவது போல் ஓங்கிப் பரந்து வளர்ந்து அவ்வூரவர்கள் தங்கி இருந்து சூதாடுவதற்கு உதவியாக இருக்கின்றது. எந்த நடு மத்தியானத்திலும் அந்த மரத்தின் கீழ் இருந்து விளையாடலாம். அவ்வளவுக்கு அந்த மரம் பரந்த நிழலைக் கொடுத்துக்கொண்டு நிற்கின்றது.

சம்பளநாள் ஆதலால் சூதாட்டம் போட்டா போட்டியாக நடைபெறுகின்றது. தள்ளாடித் தள்ளாடி விழுந்து விழுந்து சூதாட்ட மரத்தடிக்கு வந்ததும் அவனுக்கு மனம் கேட்கவில்லை. சூதாட்டத்தில் இறங்கினான். சம்பளக்காசு முழுவதும் முடிந்துவிட்டது. மற்றவர்களைக் கடன் கேட்கிறான். மற்றவர்கள் கடன் கொடுக்க மறுக்கின்றனர். "வீட்டை போவுட்டு வாறன்" என்று சொல்லிக்கொண்டு வீட்டுக்குப் புறப்படுகிறான். வீதிவழியே தள்ளாடித் தள்ளாடிப் பாட்டுப் பாடிக் கொண்டு வீட்டுக்கு வந்தவன்,

"எடியே சரோ! காசிருந்தா எடுத்துக்கொண்டு வாடி."

"ஆருட்டைக் காசு கிடக்கு. மீன்கார மனுஷி வந்து பேசிப்போட்டுப் போறாள். இன்னும் சம்பளம் எடுக்கயில்லையோ?" அவள் கேட்கும்போது அவளது நெஞ்சு படபடத்தது. இப்படி அவள் ஒருநாளுமே வாய் திறந்து கதைத்தது கிடையாது. இன்று மாத்திரம்

அவளுக்கு எப்படித்தான் துணிவு வந்ததோ யாருக்குத் தான் தெரியும். ஒருவேளை மீன்காரி தாறுமாறுக ஏசிப் போட்டாளோ?"

"என்னடி இண்டைக்கு ஒரு மாதிரிக் கதைக்கிருய். என்னை எதிர்த்துப் பேசவும் துணிவு வந்துவிட்டுதோ? எடியே! என்னைப் பற்றி உனக்குத் தெரியுமே. என்ரை அப்பன்ரை அப்பன் எல்லாம் பரம்பரைக் குடிகாறங்கள்தானடி. நான் குடிச்சுப்போட்டு ரோட்டாலை போனேனெண்டால் இஞ்சத்தைப் பெரியவங்களெல்லாம் தலை குனிஞ்சுகொண்டு போவாங்களடி. நீ என்னடாவெண்டா என்னேடை எதிர்த்துப் பேசத் தொடங்கிவிட்டாய். கழட்டடி தாலியை."

"அத்தான்! என்னைக் கொண்டுபோட்டுப் போங்க. ஆனால், தாலியை மட்டும் கேக்காதையுங்கோ."

"என்னடி அத்தான் போடுகிருய். கழட்டடி தாலியை எண்டாக் கழட்டமாட்டியோ?"

"...................."

"என்னடி பேசாமை நிற்கிருய். கழட்டடி தாலியை." சரோஜா தாலியைக் கழட்ட மறுக்கிருள். இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்படுகின்றது. தியாகன் கண்டபடி அவளுக்குத் தாறுமாறுக அடிக்கிருன். அவனது அடியைப் பொறுக்க முடியாது அழுகிருள் சரோஜா. தியாகன் தாலியைக் கழட்டுகிருன். தாலியைக் கழட்டிய பின் சரோஜாவைத் தாய்வீட்டுக்கு ஓடும்படி கலைத்துவிடுகிருன். படலைக்கு வெளியே சரோஜாவைக் கலைத்துவிட்டுச் சூதாட்டத்துக்குப் போகிருன். அவன் சூதாட்டத்துக்குப் போகும்போது வீதிவழியே பாடிக் கொண்டும் ஆடிக்கொண்டும் போகிருன்.

சூதாட்ட மரத்தடியில் தாலி, கூறை, காப்புப் போன்ற விலையுயர்ந்த பொருட்களெல்லாம் வைத்து

ஆட்டம் வெகு மும்முரமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. தியாகனும் தான் கொண்டுபோன தாலியை வைத்து ஆட்டத்தில் ஈடுபடுகிருன். சூதாட்டம் வெகு மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, சூதாட்டக்காரருக்கிடையே வாக்குவாதம் மூண்டு சண்டையில் முடிகின்றது.

சூதாட்டத்தில் ஈடுபட்டோர் அனைவரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு ஐந்து வருடம் மறியலுக்குச் சென்றனர். தியாகனும் மறியலுக்குச் செல்கின்ருன்.

ஃ ஃ ஃ ஃ

தியாகன் எப்பொழுதாவது திருந்தித் தன்னிடம் வருவான். மீண்டும் தன்னை மனைவியாக ஏற்றுக் கொள்வானென்ற முழுநம்பிக்கையில் காலத்தைக் கழித்தாள் சரோஜா. முதல் முதல் தன்னைத் திருமணம் செய்தபோது, தியாகன் எவ்வளவு அன்பாக நடந்தானே அதேபோல இனிமேலும் வரவேண்டும் என்று கல்லுவைத்த கோயிலெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டாள். முன்பிருந்த பண்புடன் திரும்பவும் வந்தானு? .........சரோஜாவின் தவம் பலித்ததா?

"என்ன பிள்ளை சரோ! யோசித்துக்கொண்டு இருக்கிருய். தியாகன் இப்ப முந்தியைப் போல ஆளில்லை. தோற்றம், குணம் எல்லாம் மாறிவிட்டான்."

"என்ன! எல்லாம் மாறிப் போச்சா? ஆர் மாத்தினது?"

"ஆமாம் பிள்ளை. அவரை மறியல்தான் மாற்றி விட்டது" என்று சொல்லும்போது படலையில் தியாகன் வந்து நிற்பதைக் கண்ட சரோஜா பழைய நினைவுகளையெல்லாம் மறந்து அவன் நிற்குமிடத்திற்கு ஓடினுள். அவள் எங்கு ஓடுகிருள் என்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார் கந்தசாமி வாத்தியார்.

சரோஜா தியாகன் நிற்குமிடத்திற்குப் போனதும், "சரோ! என்னை மன்னிப்பாயா?" என்றான் தியாகன்.

"அத்தான்! நீங்கள் எனக்கு என்ன பிழை செய்தீர்கள். குடியல்லவா உங்களைப் பிழை செய்யத் தூண்டியது."

"சரோ! நீ சொல்வது முற்றிலும் உண்மை. குடி மனிதனை மயக்கி மிருகமாக்குகிறது. அது குடிகாரன் – கொலைகாரன் என்ற பெயரையும் வாங்கிக்கொடுக்கிறது. குடி, குடியைக் கெடுத்து, வீடுவாசலை விற்று, குணம், அந்தஸ்து முதலியவற்றை அழித்துவிடுகிறது. குடியும் சூதும் செய்த கொடுமைகளையெல்லாம் என் வாழ்க்கையில் கண்டுவிட்டேன். இனிமேல் கள்ளுக் கொட்டிலுக்கோ, சாராயத் தவறணைக்கோ, சூதாட்ட மரத்தடிக்கோ ஒரு நாளும் போகமாட்டேன். குடியும் சூதும் பொல்லாதது என்பதை இப்பொழுதுதான் உணர்கின்றேன்" என்றான் தியாகன்.

"என்னுடைய தவம் பலித்துவிட்டது" என்று கூறிக்கொண்டே தியாகனின் காலில் விழுந்தாள் சரோஜா.

தியாகன் சரோஜாவின் இரு கரங்களையும் பிடித்துத் தூக்கித் தன்னுடன் இணைத்துக்கொண்டான்.

இவற்றையெல்லாம் கண்குளிரப் பார்த்துக்கொண்டிருந்த கந்தசாமி வாத்தியார், "தம்பி! நான் ஒற்றுமையாக்கிவிட வேண்டுமென்று நினைத்தேன். நீங்களே ஒற்றுமையாகிவிட்டீர்கள். அன்பு வழி அது. ஆனால், ஒன்று "குடி, குடியைக் கெடுக்கும்" என்பதை மாத்திரம் மறந்துவிடாதே" என்று சொல்லிவிட்டு தோளிலே தொங்கிக் கொண்டிருந்த குடையை விரித்துக்கொண்டும் சுருட்டைப் பற்றவைத்துக் கொண்டும் நடந்தார் கந்தசாமி வாத்தியார். கந்தசாமி வாத்தியார் தாண்டித் தாண்டிச் செல்வதையே தியாகனும் சரோஜாவும் பார்த்துக்கொண்டு நின்றனர்.

(14-2-1965)

# கற்புக்கரசி

கொழும்பு மாநகர் - அப்பப்பா...... சொல்லவே முடியாது. மோட்டார் வண்டிகளும், பஸ் வண்டிகளும் றிக்சோ வண்டிகளும், சைக்கிள் வண்டிகளும் இடைவெளிவிடாது சங்கிலிக் கோர்வை போல் ஓடிக்கொண்டிருக்கும். வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கும்போது திடீரென ஏதாவது 'அக்சிடென்ற்' ஏற்பட்டுவிட்டால் போதும் எல்லா வண்டிகளும் அந்தந்த இடத்திலேயே நின்றுவிடும். திரும்பவும் அவை ஓடுவதென்றால் குறைந்தது அரை மணித்தியாலமாவது எடுக்கும். 'அக்சிடென்ற்' நடைபெற்றால் மாத்திரமல்ல, யாராவது 'ரேங்சையிற்'ரால் ஓடினாலும் இப்படித்தான் நிகழும். ஏன்?......... சந்திகளிலே நிற்கும் பொலிஸ்காரர் ஏதாவது ஒரு வண்டியை நிறுத்திவிட்டாலும் இப்படித்தான் நிகழும்.

பிரயாணிகளின் நன்மையைக் கருதித்தான் அந்த நகரத்தின் எல்லாச் சந்திகளிலும் 'ஓட்டமெற்றிக் லயிற்' பொருத்தியிருக்கிறார்கள். பிரயாணிகள் ஒருவித 'அக்சிடென்றுக்கும்' பலியாகாமல் தங்கள் தங்கள் சையிற்றால் போவதற்கு அந்த 'ஓட்டமெற்றிக் லயிட்டுகள்' பெரிதும் உதவி செய்கின்றன.

அந்த நகரத்திலே பஸ்ஸில் பிரயாணம் செய்வதென்றாலும் நரகவேதனையாகத்தான் இருக்கும். அங்கே

ஒவ்வொரு 'கோல்ரிங் பிளேஸ்'சிலும் நூறு நூற்றிஐம்பது பேராகுதல் 'போலினிலே' நின்றுகொண்டுதான் இருப்பார்கள். வேலைவிடும் நேரம் - அதாவது நாலு மணியென்றால்......... அங்கே படும் நரகவேதனையைப் பற்றி ஒரு முறை ாவது அநுபவித்தவர்களுக்குத்தான் தெரியும்.

சுமார் நாலு மணியிருக்கும். மதியழகனும் அவனது மனைவி மான்குட்டியும் அந்த நகரத்தின் நடைபாதை யால் நடந்துகொண்டிருந்தனர். இளங்குடும்பம் என்றால் சொல்லவா வேண்டும்? அவர்கள் இருவரும் ஒருவரோடு ஒருவர் கதைத்துச் சிரித்துக் கொண்டு சென்றனர்.

அப்போது.........

"ஹலோ! மிஸ்ரர் மதியழகன், தியேட்டருக்குத் தானே? வருகிறீர்களா?" - மதியழகன் திடுக்கிட்டுத் திரும்பினான். தனது மனைவியுடன் தியேட்டருக்குச் சென்று கொண்டிருந்த சேகர்தான் கேட்டான்.

சேகர்தான் அவனது கொழும்புச் சிநேகிதன். முதன் முதலில் மதியழகன் கொழும்புக்கு வந்தபோது சேகருடன்தான் தங்கினான். ஒரு வருடமாக ஒரே அறையில் இருவரும் காலத்தைக் கழித்தவர்கள். அன்று எதிர்பாராத விதமாகச் சிநேகிதமானவர்கள் இன்றும் சிநேகிதர்களாகவே இருக்கிறார்கள்.

"இல்லை சேகர், நாங்கள் நடராசாவிலேயே போய் விடுகிறோம்."

"ஏன்?"

"எனது மிஸ்ஸிஸ்சுக்கு இந்த இடமெல்லாம் காட்டவேணும்"

"ஓல்றையிற் நான் வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே காரை 'ஸ்ராட்' பண்ணினுன் சேகர். கார் காலி ரோட்டில் ஓடிக்கொண்டிருந்தது.

"பார்த்தாயா என் சிநேகிதனை?"

"பார்க்கவில்லையே!"

"பார்க்கவில்லையா?"

"ஏன்?"

"அவன் பெரியவன்"

"என்னத்திலை பெரியவர்"

"பல்கலைக் கழகத்திலே பேராசிரியராக இருக்கிறுன். அவன்ரை மாடிவீட்டை அண்ணுர்ந்து பார்த்தாலே தலை முறிந்துவிடும். அவன்ரை காரைப் பார்த்தனியே? என்ன சோக்கான கார். குணம் என்ருல் 'தங்கம்' என்றுதான் சொல்லவேண்டும். அப்படி இல்லாவிட்டால் எங்களைக் காரில் வரச் சொல்லுவானு?"

"அப்படியானவர் ஏன் உந்தப் பெண்ணைக் கட்டினுர்"

"அவனைப் பார்க்க முன்னமே பெண்ணைப் பாத்து விட்டியே? ஏன்? அந்தப் பெண்ணுக்கு என்ன குறை. முன் சீற்றிலேதானே கொண்டுபோகிறுன்"

"பார்த்தால் கரிமூஞ்சி மாதிரிக் கிடக்குது"

"அவனுக்கு அழகான பெண்களைப் பிடிக்காது"

"ஏன்"

"அதைப்பற்றிச் சொல்வதென்ருல் நீண்ட நேரமெடுக்கும்"

"பரவாயில்லைச் சொல்லுங்கத்தான்"

"அவன் அன்றொருநாள் யாழ்ப்பாணத்தில் ஒரு கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றினான். அப்போது அவனது உள்ளக்கோட்டைக்குள் அழகிய மாணவி ஒருத்தி புகுந்தாள். அவளை அவன் அடைய விரும்பினான். அதனால் அவன் பதவியே பறி போனது"...... என்று கதையை இழுத்துக்கொண்டே போனான் மதியழகன்.

பதவி பறிபோனது என்றதும் அவளுக்குத் தன் வாழ்க்கையில் ஏற்பட்ட பழைய சிந்தனைகள் சேகரின் காருக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்தன.

ஃ ஃ ஃ ஃ

சேகர் யாழ்ப்பாணத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். அவர் சிறு வயதிலிருந்தே கல்வி கற்பதில் மிகுந்த ஆவலுடையவராய் விளங்கினார். அவரது திறமையைக் கண்ட பாடசாலை ஆசிரியர்கள் மேற் படிப்புவரை படிப்பிக்கும்படி அவரது தந்தையாரிடம் சொன்னார்கள். தந்தையார் தன்னுடைய கஷ்டத்தை எடுத்துச் சொன்னார்.

"என்ன கஷ்டப்பட்டும் உமது மகனைப் படிப்பித்தீ ரானால் பின்னடிக்குக் கஷ்டம் ஏற்படாது"

"என்ன மாஸ்ரர் செய்கிறது. எனக்கோ பொம் பிளைப்பிள்ளையளுன்ரை கஷ்டம் அதிகமாக இருக்குது. ஒன்று இரண்டெண்டாலும் பரவாயில்லை. ஐஞ்சு பொம்பிளைப் பிள்ளையளை வைச்சுக்கொண்டு என்ன செய்கிறது? அதுவும் இந்தக் காலத்திலை சீதணம் எண்டால் இருவத்தைஞ்சு முப்பதினயிரமெண்டு கேக்கினம்"

"எப்படியெண்டா யென்ன உன்ரை மேனைப் படிப் பிச்சியெண்டா அவன் உனைச்சுக்குடுத்து விடுவான்"

"என்னவோ தெண்டிச்சுப் பாக்கிறம்" என்று கூறி விட்டுப் போன கந்தையர் இரண்டு மாதங்களின் பின் இறந்துவிட்டார்.

கந்தையா இறந்ததும் சேகரின் குடும்பம் இருந்த நிலையிலும் கீழ்நிலை அடைந்தது. சேகரையும் ஐந்து பெண்பிள்ளைகளையும் வளர்க்கமுடியாது சேகரின் தாய் பொன்னம்மா கஷ்டப்பட்டாள்.

பிள்ளைகளை வளர்க்கவேண்டுமென்ற ஆசையால் சேகரின் தாய் அப்பம் சுட்டு விற்கும் தொழிலை ஆரம்பித்தாள். கடவுளின் கருணையினாலோ என்னவோ அவளுக்கு நல்ல வருவாய் கிடைத்தது. அந்த வருவாயைக் கொண்டு மகனை வளர்த்துப் படிப்பித்தாள்.

'ஏழை' என்ற மனதுடன் வளர்ந்த சேகர், கவனமாகப் படிக்கத் தொடங்கினான். இரவு பகலாகப் படித்தான். பரீட்சைகளில் முதலாவதாகத் திகழ்ந்தான். அவனின் திறமையைக் கண்ட ஊரவர்கள் அவனை யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்க்கும்படி சொன்னார்கள்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்த சேகர், ஒரே முறையில் முதலாம் பிரிவில் பீ. ஏ. பரீட்சையில் சித்தியடைந்தான். அவனின் அறிவுத் திறமையைக் கேள்வியுற்ற கல்லூரி மனேச்சர்கள் அவனைப் பேராசிரியராய் வரும்படி அழைத்தனர். அவனுக்குப் பண்டத்தரிப்பு மகளிர் கலாசாலையில் பேராசிரியர் பதவி கிடைத்தது.

ஃ ஃ ஃ ஃ

பேராசிரியர் பதவியை ஏற்றுக்கொண்ட சேகர், முதன் முதலாக அக்கலாசாலைக்குப் போனார். போனதும் அவருக்கு வரவேற்பு விழாவும் அறிமுக விழாவும் நடைபெற்றது. அந்த அறிமுகவிழா முடிந்ததும் சேகர் எஸ். எஸ். ஸி. வகுப்புக்குப் போனார். அங்கே போனதும் எல்லோரும் எழுந்து வணக்கம் தெரிவித்துவிட்டு

அமர்ந்தனர். சேகருக்கு இதுதான் முதல்முறை என்றதால் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. அவர் அந்த வகுப்பு மாணவிகள் ஒவ்வொருவரையும் எழுப்பிப் பெயரைக் கேட்டார். மான்குட்டியின் முறை வந்ததும் மான்குட்டி எழும்பினுள்.

"உங்களுக்கு என்ன பெயர்?"

"..................."

"ம்...... உங்களைத்தான் - உங்களுக்கு என்ன பெயர்?"

"மான்குட்டி"

"என்ன! மான்குட்டியா?".

"ஆமா"

எல்லோரும் சிரித்தனர். மான்குட்டிக்கு வெட்கம் வந்துவிட்டது. வெட்கம் மாத்திரமல்ல, ஆத்திரமும் வந்துவிட்டது. ஆத்திரத்தை அடக்கமுடியாது தவித்தாள். அவளது கண்களில் இருந்து கண்ணீர் முத்துக்கள் பொல, பொலவென்று மார்பகங்களில் விழுந்து தெறித்தன.

"மான்குட்டி! எவ்வளவு அழகான பெயர்"

"ம்..............."

"உங்கள் அழகைக் கண்டுதான் உங்களுக்கு மான்குட்டி என்று பெயர் வைத்திருக்கிறுர்கள். உங்கள் விழிகள் மான்குட்டியையே வென்றுவிடும்"

"ஏன் என்னைப்பற்றிப் புகழுகிறீர்கள்"?

"புகழவில்லை. உண்மையைத்தான் சொல்லுகிறேன். பொய்யானுல் உங்கள் சகோதரிகளைக் கேட்டுப்பாருங்கள்" என்று சேகர் கூறியதும், மற்றைய மாணவிகள்

விழுந்து விழுந்து சிரிப்பதற்கும் கலாசாலை மணியடிப் பதற்கும் சரியாக இருந்தது.

ஃ ஃ ஃ ஃ

மணியடித்ததும் சேகர் கலாசாலை 'ஒவ்வீஸ்'சுக்குள் போய்விட்டார். மாணவிகள் எல்லோரும் வீட்டுக்குப் புறப்பட்டனர். சிலர் மோட்டார் வண்டிகளிலும் வேறு சிலர் பஸ் வண்டிகளிலும் இன்னும் சிலர் நடந்தும் சென்றனர்.

'மான்குட்டி' பணக்காரக் குடும்பத்திலே பிறந்தவள். அவள் ஒவ்வொரு நாளும் மோட்டார் வண்டியிலேயே வருவாள். அவளது ஊரிலே உள்ள ஏழைப்பிள்ளைக ளும் அவள் வரும் மோட்டார் வண்டியிலேயே வரு வார்கள். அந்த மோட்டார் வண்டிக்கு ஏழை - பணக் காரர் தெரியவே தெரியாது. யார் மாதம் மாதம் காசு கொடுக்கிறார்களோ அவர்களெல்லாம் அந்த மோட்டார் வண்டியிலே போகலாம்.

அந்த மோட்டார் வண்டியின் 'றைவர்' ஸ்ரீபதி மிகவும் நல்லவன். அவனை நம்பி அந்த ஊரவர்கள் எல்லோரும் தங்கள் பிள்ளைகளை எந்த இடத்துக்கும் விடுவார்கள். அவனும் அந்தப் பிள்ளைகள் எல்லோரை யும் தன் சொந்தச் சகோதரிகள் போலவே பாவித்து வந்தான்.

பாடசாலை மணியடித்ததும் மான்குட்டியும் சினே கிதிகளும் ஒன்ருகச் சேர்ந்து வந்து காரில் ஏறிக் கொண்டனர். கார் பறந்து சென்று கொண்டிருந்தது.

"என்னடி மான்குட்டி, எங்கண்டை பேராசிரியர் உன்னை வர்ணித்துக்கொண்டு போருர்?"

"..................."

"அவளுந்தை அழகைத்தான் அவருக்குப் பிடிச் சுட்டுது. நாங்கள் என்ன, பெரிய அழகிகளே?"

"எடியே! மான்குட்டி உன்ரை அழகைப் பிரயோகித்து அவரை மாத்திரம் 'இவர்' ஆக்கிப் போடதையடி"

"என்ன சொல்லுறுய்! அவரை இவர் ஆக்கப் போறேனு? இதுதானு நீங்கள் படிக்கிற படிப்பு. அந்த மாஸ்ரர் என்னைப் பார்த்துச் சொன்னதை வைச்சுக் கொண்டு ஏதோ கதை அளக்கிறியள்!"

"ஏன் உன்னை மாத்திரம் புளுகவேணும்?"

"அதுக்கு அவரைப் போய்க் கேளேன்"

"அவரை என்னடி கேக்கிறது? அவரை நீயே மயக்கிவிட்டாய்." இப்படியே அவளது சினேகிதிகள் எல்லோரும் காருக்குள்ளே இருந்துகொண்டு கேலி செய்யத் தொடங்கினர். கேலியின் விளைவு அவளைச் சிந்திக்க வைத்தது.

ஃ ஃ ஃ ஃ

மான்குட்டி பணக்காரக் குடும்பத்திலே பிறந்தாலும் பண்புள்ளவள். அவளுக்குக் காதல் என்பதே என்ன வென்று தெரியாது. அவள் ஒருவரையும் காதலித்ததே கிடையாது. அவ்வளவுக்கு அவள் கிணற்றுத் தவளை போலவே இருந்து வந்தாள்.

ஒரு நாள் —

வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. சேகர் ஒவ்வொரு மாணவிகளதும் கட்டுரைகளை வாங்கித் திருத்திக்கொண்டிருந்தார். ஒவ்வொருவரதும் கொப்பி யிலே திருத்தவேண்டிய இடங்களுக்குக் கீறு மாத்திரமே போட்டுவிடுவார். ஆனுல், மான்குட்டியின் கொப்பி யிலே திருத்தவேண்டிய இடத்துக்குத் திருத்தியேவிடு வார். அவளிலே அவருக்கு அவ்வளவு அக்கறை. அன்றும் அவளது கொப்பியை வாங்கித் திருத்தினுர்.

திருத்தம் செய்யும்போது அவளை அருகில் கூப்பிட்டுத் திருத்தம் செய்யும் முறைகளை விளக்கிக் காட்டினர். அவளைக் கூப்பிட்டதும் மாணவிகள் எல்லோரும் பேராசிரியரையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

சேகர் அவளை அருகில் நிற்கவிட்டுத் திருத்திக் காட்டினர். அவளும், அவர் தனக்காகத்தான் பாடு படுகிறர் என்று நினைத்து அவரையே பார்த்துக் கொண்டு நின்றுள்.

சேகர் ஒரு பேப்பரை எடுத்து அதில் "நான் உங்களைக் காதலிக்கிறேன். உங்களைக் கல்யாணம் செய்ய மனப்பூர்வமாக விரும்புகிறேன். உங்கள் அழகு என்னைக் கவர்ந்துவிட்டது. தயவு செய்து உங்கள் விருப்பத்தை எழுதுங்கள். நீங்கள் விரும்பாவிடில் நான் எழுதியதை மறந்து என்னைச் சகோதர ஆசிரியனுக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று எழுதி அவளது கொப்பிக்குள் வைத்துக் கொடுத்தார். அவளுக்குக் கை கால்களெல்லாம் பயத்தினுல் உதறத் தொடங்கின. மற்றவர்களுக்கும் தெரியப்போகிறதே என்று நினைத்துக் கொப்பியை மூடிவிட்டுத் தனது ஆசனத்தில் அமர்ந்தாள்.

சேகர் அவளது கொப்பிக்குள் வைத்துக் கொடுத்த கடிதத்தை மாணவிகள் கண்டும் காணுதது போல் பார்த்துக்கொண்டிருந்தனர். மான்குட்டி ஆசனத்தில் அமர்ந்ததும் மாணவிகள் கொப்பியைத் தரும்படி கேட்டனர். உடனே மான்குட்டிக்கு விளங்கிவிட்டது. எல்லோருக்கும் தெரியப்போகிறதே, தெரிந்தால் தன்னைத்தானே எல்லோரும் ஏசுவார்கள் என்று நினைத்துக் கடிதத்தை எடுத்துக்கொண்டு போய்க் கலாசாலைத் தலைவியிடம் கொடுத்தாள்.

∴ ∴ ∴ ∴ ∴

கலாசாலைத் தலைவியின் வேண்டுகோட்படி பேராசிரியர் சேகர் 'ஒவ்வீஸ்'சுக்குள் போனார். அவர் போகும் போது அவரது இருதயம் வேகமாகத் துடித்துக் கொண்டு இருந்தது.

"மாஸ்ரர்! நீங்கள் ஒரு நல்லவர் என்று நினைத்துத் தான் உங்களை இந்த மகளிர் கலாசாலைக்கு பேராசிரியராக நியமித்தார்கள். ஆனால், நீங்கள் துரோகம் செய்து விட்டீர்கள்."

"ரீச்சர்! நான் என்ன துரோகம் செய்தேன்? உண்மையில் அவளை நான் மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன். அவள்தான் என் இதயக்கோட்டையுள் இடம் பெற்றுவிட்டாள். நான் எழுதிய கடிதத்தில் ஏதாவது பிழைகள் இருக்கின்றனவா?"

"நீங்கள் எழுதியது உங்களுக்குச் சரியாக இருக்கலாம். ஆனால் கலாசாலையிலே பேராசிரியராக இருந்து கொண்டு படிப்பிக்கும் மாணவியைக் காதலிப்பது தவறானது"

"சட்டம் அப்படி இருக்கிறதா?"

"சட்டம் இல்லாமல் இருக்கலாம். இப்படியான நடத்தையுள்ள ஒருவரைப் பேராசிரியராக வைத்திருப்பது எங்கள் கலாசாலைக்கே அவமானம்"

"அப்படியென்றால்........."

"இன்றோடு உங்கள் பதவியை நீக்குகிறேன்"

ஃ ஃ ஃ ஃ

சேகரின் காதல் பேராசிரியர் பதவியையே நீக்கி விட்டது. சேகர் பதவியைத் துறந்ததும் அவருக்கு ஊரிலே இருக்க விருப்பமில்லை. உடனே கொழும்புக்குப் போனார். முன்பு வரும்படி அழைத்த கலாசாலை

கள் எல்லாம் அவரின் நடத்தைக் குறைவைக் கேள்வி யுற்று வேண்டாமென வெறுத்தன.

சேகரின் விவேகத்தையும் அறிவின் திறமையையும் கேள்வியுற்ற கொழும்புக் கதீட்ரல் கலாசாலை முகாமை யாளர் அவரைப் பேராசிரியராக நியமித்தார். சேகர் அக்கலாசாலை மாணவரின் நன்மைக்காக ஓயாது சேவை செய்தார். அவரின் சேவையினுல் மாணவர்கள் அதிக சித்தியைப் பெற்றுக் கலாசாலையின் புகழை நிலைநாட்டினர்.

சேகரின் புகழ் கொழும்பு முழுவதும் பரவியது. சேகருக்குக் கொழும்பிலே 'ரியூசன்' அதிகமாகக் கிடைத்தது. அவர் பெறும் சம்பளத்திலும் பார்க்க இருமடங்கு சம்பளம் ரியூசன் சொல்லிக் கொடுப்பதில் கிடைத்தது.

சேகர் தனது விடாமுயற்சியால் அதிக பணத்தைச் சம்பாதித்து தனது சகோதரிகள் எல்லோரையும் ஒவ் வொருவராகக் கரை சேர்த்து வைத்தார்.

ஊரவர்கள் எல்லோரும் சேகரின் சாதனையைப் போற்றிப் புகழ்ந்தனர். அவ்வூரவர்கள் எல்லோரும் சேகருக்குப் பெண் கொடுக்க முன் வந்தனர். சேக ருக்கு ஐம்பதினுயிரம் அறுபதினுயிரம் என்று சீதனம் ஏறிக்கொண்டே போனது.

சேகரின் புகழ் ஏறிக்கொண்டு போய்ப் பல்கலைக் கழகப் பேராசிரியராக ஆக்கியது. சேகர் பல்கலைக் கழகப் பேராசிரியரானுர்.

ஃ ஃ ஃ ஃ

"மான்குட்டி! என்ன ஒரேயடியாக எதையோ சிந் தித்துக்கொண்டு வருகிருய்?" என்று தியாகன் கேட்ட

தும் மான்குட்டி சிந்தனையில் இருந்து விடுபட்டாள். இருந்தும் அவர் யார்? என்பதை அறிந்துவிடவேண்டும் என்ற ஆசை அவளது உள்ளத்தை உறுத்திக் கொண்டே இருந்தது.

"அத்தான்! அதோ! அந்தக் காரில் போகும் தங்கள் நண்பரின் பெயரென்ன?"

"ஓ! அதைச்சொல்ல மறந்து விட்டேனா? அவன் பெயர் சேகர்."

"என்ன! அவரா இவர்?..." ஆச்சரியத்துடன் கேட்டாள் மான்குட்டி.

"உனக்கு அவனைத் தெரியுமா?"

"அத்தான்! அவரது பதவியை நீக்கிய பாவி நான்தானத்தான்."

"அப்படியா?"

"அப்படியானால், என்னைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"'கற்புக்கரசி' என்றுதான் நினைக்கிறேன்."

— பங்குனி 1965.

# உங்களுக்குத்தான் சொந்தம்

சுந்தரம் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு புதினப் பத்திரிகை வாசிப்பதில் கவனம் செலுத்தினர். அவரின் கண்களுக்குப் புதினப் பத்திரிகையின் எழுத்துக்கள் அவ்வளவு நன்ருகத் தெரியவில்லை. அதனுல் மடியுக்குள் இருந்த மூக்குக் கண்ணுடியை எடுத்துப் போட்டுக்கொண்டு ஒவ்வொரு எழுத்துக்களாக அவதானித்து வாசிக்கத் தொடங்கினர்.

அப்போது —

"இந்தாருங்கள், பிள்ளைக்கு வயதும் முப்பதுக்கு மேலாகி விட்டது. இன்னும் வீட்டோடு வைத்துக் கட்டிக் காத்துக்கொண்டு இருக்கப் போறீங்களே?"— சுந்தரம் இருந்த இடத்துக்கு வந்துகொண்டே சொன்னுள் கண்மணி.

"ஏன் இப்ப அவசரப்படுகிருய்? அவன் மணி உத்தியோகமாகட்டுக்கேன்"

"அவர் உத்தியோகம் ஆகும்வரை வீட்டோடை வைச்சுக்கொண்டு இருக்கப்போறியளே?"

"பின்னை என்னப்பா செய்யச் சொல்லுறியள்?"

" இந்தக் காலத்திலே பீ. ஏ. படித்தாலும் இடமெடுக்கிறது கஷ்டமாம். மனேச்சரைப் பிடிச்சுக் கிடிச்சுக் கேட்டுப்பாருங்கோவன் "

" மனேச்சரைப் பிடிச்சாப்போலே என்ன ? மனேச்சருக்கு இரண்டாயிரம் குடுத்தாத்தான் சரிவரும்."

" அதுக்கென்ன, இரண்டாயிர மெண்டாயென்ன குடுத்துச் சேத்துவிடுங்கோவன் "

" அப்பிடியெண்டா மணியையும் தகப்பனையும் வரச்சொல்லி, சொல்லி அனுப்பு".

" ஆரிட்டைச் சொல்லி அனுப்பிறது ? "

" நீ போய்ச் சொல்லிப்போட்டு வாவன் " என்ருர் சுந்தரம். சுந்தரம் சொன்னதும் மகளுக்குக் கலியாணம் செய்து வைக்க வேண்டுமென்ற ஆவலால் போட்ட வெற்றிலையையும் துப்பிவிட்டு, அடுக்கு அடுக்காக அடுக்கிவைத்திருந்த சேலைகளில் , ஒன்றை எடுத்துக் கட்டிக்கொண்டு முப்பது வயதுக் கன்னிப் பெண்ணைப் போலக் காரிலே ஏறினுள் கண்மணி.

கண்மணி காரிலே ஏறியதும் கார் காற்ருகப் பறந்து சென்று கந்தவனம் வீட்டுப் படலையில் நின்றது.

படலையடியில் கார் நின்ற சத்தம் கேட்டு ஓடி வந்தார் கந்தவனம்.

" அண்ணை, உங்களையும் மணியையும் ஒருக்கா வந்து விட்டுப் போகட்டாம் "

" ஏன் பிள்ளை ?ஏதாவது அவசியமான காரியமே ? "

"உங்கண்டை மகன்ரை விஷயமாகத்தான் கதைக்கவாம்"

"அவன்தானே பிள்ளை பெரிய பிழையாகக்கிடக்கு. இந்தியாவுக்குப் போக வேணுமெண்டு பிடியாய்ப் பிடிச்சான். ஏதோ அங்கினை இங்கினை எண்டு மாறிச் சாறி இந்தியாவுக்கு விட்டுப் படிப்பிச்சன். இந்தியாவிலை இருந்து வந்து நாலு வருசமாச்சுது. இன்னும் தான்......"

"அதுக்குத்தான் மனேச்சரிட்டைக் கூட்டிக் கொண்டு போகப்போருராம்."

"ஐயோ பிள்ளை உந்த வேலை மாத்திரம் எனக்கு வேண்டாம். படிப்பிச்ச காசு இன்னும் குடுத்து முடியவில்லை. அதுக்குள்ளை மனேச்சருக்கும் குடுக்க நான் ஆரிட்டைப்போறது?"

"நீங்கள் வாருங்கோவன் எல்லாத்தையும் வீட்டிலை கதைப்பம்"

"இஞ்சார், பிள்ளைக்குக் கோப்பி கொண்டு வந்து குடணை"

"இப்பதான் அண்ணை கோப்பி குடிச்சுவிட்டு வாறன்"

"நீங்கள் எங்களிட்டைக் குடிக்கிறியளே?"

"பின்னைக் கொண்டுவாருங்கோ" என்றதும் அவசர அவசரமாக ஓடிப்போய்க் கோப்பியைப் போட்டுக் கொண்டு வந்து கொடுத்தாள் பூமணி.

கண்மணி கோப்பியைக் குடித்து விட்டு எழும்புவதற்கும் மணி ஊரைச் சுற்றி விட்டு வீட்டுக்கு வருவதற்கும் சரியாக இருந்தது.

"அண்ணை மருமேனும் வந்து விட்டார். வாருங்கோவன் கையோடை காரிலை போவம்" என்ருள்

கண்மணி. கண்மணியின் விருப்பத்திற்கு இணங்கக் கந்தவனமும் மணியும் காரிலே சென்றனர்.

கார் கண்மணியின் வீட்டுக்குள் சென்றதும் "வள் வள்" என்று அல்சேசன் நாய் குரைக்கத்தொடங்கியது.

"ஜோன்! சத்தம் போடாமை நில். அம்மாதான் வாரு" என்ருர் சுந்தரம். சுந்தரம் சொன்னதும் ஜோன் வாலை ஒருக்கால் ஆட்டிவிட்டு ஓடிப்போய்த் தன் இருப்பிடத்தில் இருந்தது.

கந்தவனமும் மணியும் காரிலிருந்து இறங்கிக் கண்மணிக்குப் பின்னே சென்றனர்.

"வாங்க வாங்க உங்களைத்தான் தேடிக்கொண்டு இருந்தனுன்" என்று சொல்லிக் கதிரைகளைக் காட்டிஞர் சுந்தரம்.

சுந்தரத்தின் சைகைகளைக் கண்ட கந்தவனமும் மணியும் கதிரையில் அமர்ந்தனர். கண்மணியும் அருகில் இருந்த கதிரையில் இருந்தாள்.

"என்ன கதைக்காமல் இருக்கிறியள். விஷயத்தைக் கதையுங்கோவன்?" என்ருள் கண்மணி. கண்மணி கூறியதும் சுந்தரம் பேசத்தொடங்கிஞர்.

"மச்சான் உங்களோடை ஒரு முக்கியமான விஷயம் கதைக்க வேணும்."

"அதுக்காகத்தானே வந்திருக்கிறன். நல்லாக் கதையுங்கோ."

"பிள்ளைக்கு முப்பது வயதாச்சு, நெடுக வைச்சுக் கொண்டு இருக்கமுடியாது. அதுதான் ...... ."

"அதுக்கு என்ன செய்யச் சொல்லுறியள்? மணிக்கு உத்தியோகம் கிடைச்ச பிறகுதான் கலியாணம் செய்யிறது."

" அதுக்காகத்தான் மனேச்சரோடை கதைக்கலா மெண்டு நினைக்கிறன்."

" காசுக்கு ஆரிட்டை போறது ? "

"அது நானெல்லே குடுக்கிறன். நீங்கள் வாருங்கோ" என்று சொல்லிக் கந்தவனத்தையும் மணியையும் மனேசரிடம் கூட்டிக்கொண்டு போனுர் சுந்தரம்.

சுந்தரம் மனேச்சருக்கு இரண்டாயிரம் ரூபா கட்டி யதும் மணிக்கு ஆசிரியர் உத்தியோகம் கிடைத்தது. மணிக்கு ஆசிரியர் உத்தியோகம் கிடைத்ததும் மணிக்கும் சுந்தரிக்கும் வெகு கோலாகலமாகத் திரு மணம் நடைபெற்றது. சுந்தரம் அவ்வூரிலே பணக் காரச் சீமான் " என்ற பட்டத்தைப் பெற்றவர். அவர் சின்ன வயதிலேயே சிங்கப்பூருக்குப் போய்ப் பணத் தைச் சம்பாதித்ததாலேயே அவருக்கு அந்தப் பெயர் கிடைத்தது.

அந்த ஊரின் ஒரே ஒரு சிங்கப்பூர் பென்சனிய ரான அவரிடம் நிறையப் பணமிருந்தும் பணக்கார மாப்பிளே அவருக்குக் கிடைக்காமல் விட்டது ஆச்சரி யத்துக்குரியதுதான்.

பணக்காரச் சீமானுன சுந்தரம் அவர்களுக்குப் பணக்கார மாப்பிள்ளே கிடைக்காமற் போனதற்குக் காரணமுமில்லாமலில்லே. அவரின் மகள் அதிகம் படித்ததே காரணம்.

மணி சுந்தரியைத் திருமணம் செய்துகொண்டு நாலு மாதங்களாக சுந்தரி வீட்டிலேயே தங்கி இருந் தான். சுந்தரி பணக்காரக் குடும்பத்திலே பிறந்ததால் மணிக்குப் பணத்தைப் பற்றிய அக்கறை அவ்வளவு இருக்கவில்லே.

மணி தினமும் கல்லூரிக்குப் போவான். கல்லூரி யில் இருந்து வந்ததும் நண்பர்களுடன் சேர்ந்து சீட்

டடிப்பான். மணி தினமும் சீட்டடிப்பதால் மணின் சம்பளப் பணத்தில் மூன்றில் இரண்டு பங்கு சீட்டடிப் பதிலேயே சென்றது.

ஒரு நாள் :-

"எடே மச்சான், மாமியார் வீட்டுச்சோறு பழகப் பழகப் புளிச்சுப் போகுமடா."

"இம்... இம்... என்ரை மாமி அப்பிடியானவ இல்லை."

"எல்லாற்றை மாமியாரும் முதலிலை உப்பிடித்தான் இருக்கிறவை. கொஞ்ச நாள் போன பிறகுதான்... !"

"பாப்பம் என்ன நடக்குதெண்டு."

"அது நடக்குமுன்பே வழி கோலிப் போடவேணு மடா. ஏன்? உனக்குச் சொந்த வீடு இருக்குதுதானே? அந்த வீட்டிலைபோய் இருந்தாலென்ன ?"

"என்ரை மனைவி ..."

"உன்ரை மனைவிக்கு விருப்பமில்லையே? நீ பின்னை உன்ரை மனைவியின்ரை விருப்பத்துக்கே கட்டுப்பட்டு நடக்கப்போருய் ?"

"என்ன இருந்தாலும் அவளின்ரை அந்தஸ்துக்கு எங்கடை வீடு..."

"அந்தஸ்துக் கூடியவை ஏன் உன்னைக் கலியா ணம் செய்தவை ?"

"............... "

"ஏனப்பா மௌனம் சாதிக்கிருய் ? பெற்ற தாய் தகப்பன்ரை வீட்டுக்குப் போகாமைப் பெண்சாதி வீட் டிலை இருந்தால் உன்ரை தாய் தகப்பன் என்ன நினைப் பினம். வாயை வயித்தைக் கட்டிக் கூழைக் கஞ்சியைக் குடிச்செல்லே அதுகள் உன்னைப் படிப்பிச்சதுகள் "

"ஓமடாப்பா, நீ சொல்லுறது சரிதான்; அப்பிடி யெண்டால் என்ன செய்யச் சொல்லுருய்?"

"உடனே உன்ரை பெண்சாதியைக் கூட்டிக் கொண்டு உங்கண்டை வீட்டுக்குப் போ"

"அவள் வரமாட்டவெண்டால் ..."

"புரிசன்ரை சொல்லைக் கேளாதவளை உனக்கேன்"

மணிக்கும் குணத்துக்குமிடையே பெரிய வாக்கு வாதம் நடந்தது. குணம் சொன்னது யாவும் சரியென மணி கருதினுன். எப்படியும் தனது மனைவியைக் கூட்டிக்கொண்டு போகவேண்டுமென நினைத்து விறு விறு என்று வீட்டுக்குப் போனுன்.

"என்ன இப்பதானுக்கும் சீட்டாட்டம் முடிந்தது. என்ரை அப்பா இரண்டாயிரம் ரூபா கட்டி உத்தியோ கம் எடுக்காவிட்டால் உப்பிடியெல்லாம் சோக்குப் பண் ணிக்கொண்டு திரிய முடியுமே?"

"உன்ரை கொப்பர் ஆருக்காக ரண்டாயிரம் ரூவா கட்டினவர் எனக்காகவே?"

"பின்னை ஆருக்காக"

"உனக்குக் கெதியிலை கலியாணம் செய்யவேணு மெண்டத்துக்காக வல்லவோ கட்டினவர்" என்ருன் மணி.

மணிக்கும் சுந்தரிக்கும் இடையே நடந்த வாக்கு வாதம் பெரும் குழப்பத்தில் முடிந்தது.

மணி தன் நண்பர்கள் சொன்னது சரிதானென உணர்ந்தான். மனைவி வீட்டிலோ — மாமியார் வீட் டிலோ அதிக நாட்களாக இருந்து குடித்தனம் நடத்து வது சரியல்ல என்று அவனுக்குத் தோன்றியது.

உடனே, "சுந்தரி! இவ்வளவு காலமும் உங்களுடைய வீட்டிலே இருந்தது போதும். இனி எங்கண்டை வீட்டுக்குப் போவோம் வா''

" ஏன் ? "

" இன்னும் கொஞ்ச நாளைக்கு உங்கண்டை வீட்டிலே இருந்தால் நீ என்னை மதிக்கமாட்டாய்."

" யார் சொன்னது ? "

" இப்ப நீ பேசியதிலிருந்து தெரிகிறது."

" என்னத்தைப் பேசினனான் உங்கண்டை கொட்டிலுக்கு வந்து பட்டினி கிடக்கச் சொல்லுறியளே ? "

" ஏன் ? நான் உழைச்சுத் தரமாட்டேனா ? எனக்குக் கை கால் இல்லையா ? இவ்வளவு காலமும் சாப்பிட்டது யாருடையது ? "

" இவ்வளவு காலமும் என்ரை அப்பன் வீட்டுச் சாப்பாட்டைத்தான் சாப்பிட்டனான். உங்கண்டை உழைப்பு உங்களுக்கே போதாது. "

" என்ன ! அவ்வளவுக்கு வந்துவிட்டாயா ? இப்ப வாறியா ? வரவில்லையா? "

" வரமுடியாது ? "

" முடியாதா ? "

" முடியாது, முடியாது, முடியாது." என்றதும் மணிக்குக் கோபம் வந்துவிட்டது. கண்கள் கோபத்தால் கொவ்வைப் பழம் போன்று சிவந்தன. சொண்டுகள் படபடவெனத் துடித்தன. கைகள் பதறின. 'பளார்—பளார்' என இரண்டு மூன்று முறை அவளது கன்னத்தில் அடித்துவிட்டு, வீட்டை விட்டு வெளியேறினான் மணி.

மணி தன் சொந்த வீட்டுக்குப் போனதும் சுந்தரியின் தகப்பன் சுந்தரம் எடுத்துக் கொடுத்த ஆசிரியர் வேலையை 'இராஜினுமா' செய்துவிட்டுப் பிரபல பத்திரிகை ஒன்றிற்கு ஆசிரியராஞன்.

ஃ ஃ ஃ ஃ

சுந்தரிக்கு மணியிடம் கொள்ளை ஆசை. அவள் கொஞ்சநேரமாகுதல் மணியைப் பிரிந்திருக்கமாட்டாள். மணிக்கும் சுந்தரிமேல் ஆசைதான். அவனுலும் அவளைப் பிரிந்திருக்க முடியாதுதான். ஆனுல் அவர்களைப் பிரித்தது - யாதோ ?

மணியும் சுந்தரியும் பிரிந்து இரண்டு ஆண்டுகள் முடிந்து விட்டன. வெகுவிரைவில் வருவார். வந்து தன்னுடன் இருப்பார் என்றுதான் நினைத்து நினைத்து பொறுத்திருந்தாள். மணி இதுவரை தன்னை எட்டியும் பார்க்காதது அவளுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்ததோடு, அவளைச் சிந்திக்கவும், வைத்தது.

சுந்தரி தான்செய்த தவறுகளை எல்லாம் உணர்ந்தாள். தன் கணவனை கண்டபடி ஏசியதால்தான் தன்னை மறந்துபோய் விட்டார் என்று கருதிய சுந்தரி, தன் கணவனுக்குத் தான் செய்த தவறுகளை எல்லாம் எடுத்துக்காட்டித் தன்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளும்படி கடிதம் ஒன்று எழுதினுள்.

சுந்தரியின் கடிதம் மணிக்குக் கிடைத்தது. சுந்தரியின் கடிதத்தைக் கண்டதும் மணிக்கு மகிழ்ச்சி வந்துவிட்டது. சுந்தரி தான் செய்த தவறுகளையெல்லாம் உணர்ந்து திருந்தி விட்டாள். இனி அவளைக் கூட்டிக் கொண்டு வரவேண்டுமெனத் தீர்மானித்தான். தான் வந்து கூட்டிக்கொண்டு வருவதாகவும் அவளுக்குக் கடிதம் எழுதினுன்.

மணி சென்ற கார் சுந்தரியின் வீட்டுப்படலையடியில் நின்றது. மணி இறங்கிச் சுந்தரியின் வீட்டுக்குள் சென்றான். அவன் போகும்போதே "சுந்தரி! சுந்தரி!" என்று கூப்பிட்டுக்கொண்டே போனான். அவனைக் கண்டதும் ஓடோடி வந்த சுந்தரி 'அத்தான்' என்று அழைத்துக்கொண்டே கட்டித் தழுவினாள்.

இரண்டு ஆண்டுகளாகப் பிரிந்திருந்த மணிக்குச் சுந்தரியின் தழுவல் இதமாகவும் உணர்ச்சியை ஊட்டுவதாகவும், இருந்தது. 'பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா?' என்பார்கள். அதேபோலச் சுந்தரியின் அன்புத் தழுவல் மணியின் கடந்த கால நிகழ்ச்சிகளை மறக்கச், செய்துவிட்டது.

"சுந்தரி' நேரமாச்சு வா போவோம். மாமா மாமி எங்கே?" என்றான் மணி.

"இதோ! வந்துவிட்டோம் தம்பி!" என்றுகூறிக் கொண்டே சுந்தரமும் கண்மணியும் வந்தனர்.

"'மாமா' நான் சுந்தரியைக் கூட்டிக்கொண்டு போகிறேன்."

"ஓ தாராளமாகக் கூட்டிக்கொண்டு போ தம்பி. உங்களைக் காணமல் இவ்வளவு காலமும் சுந்தரிபட்ட பாடு......"

"அப்ப பின்னை நீங்கள் குறை நினைக்கமாட்டியள் தானே."

"எங்களுக்கென்ன குறை தம்பி. எங்கண்டை பிள்ளையை உங்களுக்குக் கட்டித் தந்து விட்டோம். இனி அது உங்களுக்குத் தான் சொந்தம். அதிலை நாங்கள் தலையிடுவது தப்பு."

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள் ?"

"ஆமா தம்பி, உங்கண்டை குடும்பத்திலே நாங்கள் தலையிட்டதாலேதான் இப்படி நேர்ந்தது. எங்களை மன்னித்து விடுங்க...."

"உங்களை என்னத்துக்கு மன்னிக்கிறது, நாங்கள் போயிட்டு வாறம்."

"சந்தோஷமாகப் போயிட்டு வாருங்க" என்று சொல்லித் சுந்தரமும் கண்மணியும் வழியனுப்பி வைத்தனர்.

மணியும் சுந்தரியும் கைகோர்த்தபடி சிரித்துக் கொண்டே காரில் ஏறினர். கார் மணியின் வீட்டை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது.

# கன்னிப் பெண்

"தேவன்! தேவன்!! கோவிலுக்கு வரவில்லையே? இந்த முறை ஆரும் திருவிழாவுக்கு நல்ல நல்ல மேளமெல்லாம் பிடித்திருக்கிறார்களாம்."

" ஆர் சொன்னது ? "

" நீ ஆரும் திருவிழா நோட்டீசு பார்க்கவில்லையே? இஞ்சை பார் எத்தனை கூட்டமேளம், எத்தனை கூட்டஞ் சின்ன மேளமெண்டு " — தேவனிடம் நோட்டீசைக் கொடுத்தான். தெண்டாயுதம். தெண்டாயுதம் கொடுத்த ஆரும் திருவிழா நோட்டீசை வாங்கிப் பார்த்தான் தேவன். அந்த நோட்டீஸ் பார்ப்பதற்கு நல்ல அழகாக இருந்ததோடு ஏழு கூட்ட மேளமும் இரண்டு கூட்டஞ் சின்னமேளமும் என்று அதில் அச்சடிக்கப்பட்டிருந்தது.

தேவனுக்கு மேளக்கச்சேரி, சதுர்க்கச்சேரி பார்ப்பதென்றால் மிகவும் ஆசை. அவன் இந்தக் கச்சேரிகள் பார்ப்பதென்றால் எந்த வேலையையும் பின்போட்டு விட்டுத் திருவிழா முடியும்வரை நின்று பார்த்துவிட்டுத்தான் வருவான். ஏன்? பதினைந்து இருபது மைல்களுக்கப்பால் உள்ள சுட்டிபுரத்துக்கே நண்பர்களுடன்

சேர்ந்து போய்ப் பார்க்கிறவன் என்ருல் அவனது திருவிழா ரசனையைச் சொல்லவும் வேண்டுமா ?

“தெண்டாயுதம் ! தெண்டாயுதம் ! ! நான் வேட்டி கட்டிக்கொண்டு வாறன். நீ உந்தக் கடையிலே நிக்கிறியே ?”

“அதுக்கென்ன, கெதியா வா மச்சான்” என்று சொல்லிவிட்டுச் சின்னராசாவின் ‘பொன்மலர்’ ஸ்ரோசில் நின்ருன் தெண்டாயுதம்.

தேவன் அவசர அவசரமாக வேட்டியைக் கட்டிக் கொண்டு ஓடோடி வந்ததும் தேவனும் தெண்டாயுத மும் கோவிலுக்குப் போனுர்கள்.

கோவிலிலே ஆரும் திருவிழா வெகு மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. ‘டுமீல், டுமீல்’ என்று மத்தாப்புக்கள் வெடித்துக்கொண்டிருந்தன.

தேவனும், தெண்டாயுதமும் நூற்றுக்கணக்காகச் செலவு செய்து கட்டப்பட்ட மணிப்பந்தலின் ஒரு பக்கத்திலே இருந்து மேளக்கச்சேரியைப் பார்த்தும் கேட்டும் கொண்டிருந்தனர்.

அப்போது,

“மாஸ்ரர் ! உங்கடை ஏழாம் திருவிழா நாளைக்கு எப்படி ? இந்தத் திருவிழாவைத் தட்டுமோ ?” என்று கேட்டுக்கொண்டே அருகில் வந்து இருந்தான் அமுதன். இந்தமுறை ஆரும் திருவிழாவை ஏழாம் திருவிழாவால் வெல்ல முடியாது என்பது அமுதனின் எண்ணம். அதனுல், அமுதன் தன்னுடைய ஆரும் திருவிழா வைப் பற்றிப் புளுகிக்கொண்டே இருந்தான்.

தேவனுக்கு அமுதன் புளுகுவது ஆத்திரத்தை உண்டாக்கியது. பரம்பரை பரம்பரையாக எல்லாத்

திருவிழாவிலும் பார்க்க நன்றாக நடந்துவந்த ஏழாம் திருவிழா இம்முறை நடைபெருது எனத்தெரிந்துதானே அமுதன் அப்படிப் புளுகுகிருன் என்பது தேவனுக்குத் தெரியும்.

தேவனும் திருவிழா விஷயத்திலே மிகவும் ரோஷக்காரன். எந்தத் திருவிழாவும் தங்கள் திருவிழாவை வெற்றி பெறுவதற்கு விடமாட்டான். ஆசிரியனுக இருந்துகொண்டு எத்தனையோ தடவை வீடு வளவையே ஈடு வைத்துத் திருவிழாச் செய்திருக்கிருன். அத்தகைய ரோஷக்காரனுக்கு அமுதன் கூறியது எரிகிற விளக்கில் எண்ணெய் விட்டதுபோல ஆத்திரத்தை மிகப்படுத்தியது. பார்த்துக்கொண்டிருந்த மேளக்கச்சேரியையும் இடையிலே விட்டு விட்டு வீட்டுக்குப் போனுன்.

## 2

"டொக் டொக்" — தேவன் கதவில் தட்டினுன்.

"தேவி! தேவி!!"

"யாரது?"

"அது நான்தான் கதவைத் திற."

"என்னத்தான், திருவிழாப் பார்க்கவெண்டு போனியள். திருவிழாப் பார்க்கவில்லையோ?"

"பார்த்துக்கொண்டுதான் வாறன்."

"ஏன் நேரத்தோடை முடிஞ்சது. திருவிழா நல்லாயில்லையோ?"

"இந்தமுறை ஆரும் திருவிழா மிச்சம் எழுப்பம். அதை முடியும்வரை பார்க்கலாமெண்டால் வாறவன் போறவன் எல்லாரும் ஏழாந் திருவிழா எப்படி? ஏழாந் திருவிழா எப்படி? என்று வந்து வந்து என்னைக்

கேட்கிறுங்கள். எனக்கெண்டாலோ ஆத்திரமாக எரிந்தது. பார் ஏழாம் திருவிழாவைச் செய்து காட்டுறன் என்று சொல்லிப்போட்டு வந்துவிட்டேன்.''

"ஏனத்தான் உங்களுக்கு உந்தவேலே. போனவருஷம் திருவிழாவுக்கெண்டு ஈடுவைச்ச காணி இன்னும் மீளவில்லே. இந்த வருஷம் என்ன செய்யப்போறியள்?''

"அதுதான் எனக்கும் யோசினேயாக்கிடக்கு.''

"யோசினேயென்ன, வீட்டிலே ஒரு சதமெண்டாலும் இருந்தாலல்லோ யோசிக்கலாம்.''

"இந்த வருஷம்தான் உன்னே ஒண்டு கேட்கப்போகிறன். நீ சம்மதித்தாயெண்டால் ஆரும் திருவிழாவை இந்த வருஷமும் ஏழாந் திருவிழா ஒதுக்கி வைத்துப் போடும். கேக்கட்டோ ?''

"ஓ! தாராளமாகக் கேளுங்கோ. உங்களுக்கில்லாததை எனக்கென்னத்துக்கு. உங்களுக்குத் தெரியாமல் காசைக் கீசைப் பதுக்கி வைத்திருக்கிறேனே ?''

"தேவி! இந்தமுறை திருவிழாச் செய்கிறதுக்கு உனது தாலிக்கொடியைக் கழற்றித் தருவயோ ?''

"என்ன, தாலியைக் கழற்றித் தாறதோ ? காசைக் கொட்டி ஆடம்பரத் திருவிழாச்செய்கிறதுக்காக என்ரை உயிருக்குயிரான தாலியைக் கழற்றித் தரச் சொல்லுறியளே ?''

"பார்த்தியோ என்னிலும் பார்க்க உந்தத் தாலி தானே உனக்குப் பெரிதாகப் போய் விட்டது.''

"என்னுயிரைக் கேட்டாலும் கேளுங்கோ தந்துவிடுகிறேன். ஆனல், தாலியை மாத்திரம் கேளாதீர்கள். தாலிதான் பெண்ணுக்கு 'வேலி'. அந்த வேலியை எடுத்துவிட்டால் எந்த ஒரு ஆடவனும் அந்தப் பெண்ணே

விரும்பத்தான் செய்வான். ஒரு பெண் அதிகாலையிலே எழுந்து கணவனை உள்ளத்திலே நினைத்து தினந்தோறும் வணங்குவதற்குத் தாலிதானே உதவி புரிகிறது? தாலி கட்டாதவளை தாலி அறுத்தவள் என்று ஊரவர்கள் கூறிக்கொள்வது உங்களுக்குத் தெரியாதா ? ஏன்? தாலி கட்டினவனே கண் கண்ட தெய்வம் என்பதை ஞாபகப்படுத்திக்கொண்டிருப்பது இந்தத் தாலிதானே? கன்னிப்பெண்ணல்ல, கலியாணம் செய்தவள் என்று மற்றவர்களுக்கெல்லாம் பறை சாற்றிக்கொண்டிருப்பதும் இந்தத் தாலிதானே? நீங்கள் உயிருடன் இருக்கும்வரை இந்தத் தாலியை என்னுடைய கழுத்திலே இருந்து கழற்றமாட்டேன். கழற்றவும் விடமாட்டேன். இதை யாராலும் கழற்ற முடியாது." இவ்வாறு பலவிதமாகத் தேவி கூறியதும் தேவனுக்குத் தாலியினால் சம்பவித்த கடந்த காலச் சம்பவம் ஒன்று ஞாபகத்துக்கு வந்தது.

## 3

"தேவன்! தேவன்!! வாவன் கோப்பாய்க்குப் போவிட்டு வருவோம்?"

"அங்கே என்னத்துக்கப்பா, நீ மாத்திரம் உன்ரை மிசிசைப் பார்க்கப் போகிறாய்; நான் வந்து என்ன செய்யிறது ?"

"நீ அங்கை வந்து பாரனப்பா. என்னென்னவிதமான ரீச்சர்மாரெல்லாம் இருக்கினமெண்டு."

"எனக்குத் தெரியாத ரீச்சர்மாரோ ? பத்துப் பதினைந்து பிள்ளையள் பெத்தவைதான் இருப்பினம்."

"எட மச்சான், நீ உப்பிடி நினைச்சுத்தானே அண்டைக்கும் வரமாட்டனெண்டனி. அங்கே இருக்கிற ரீச்சர்மாரில் தொண்ணூறு வீதம் கல்யாணம் செய்யாதவையப்பா."

"கல்யாணம் செய்யாத ரீச்சர்மார் இருந்தாப் போலே என்ன? பலாலியிலே இருக்கிற ரீச்சர்மாரைப் பார்க்கப் பத்தாயிரம் கண் வேணுமப்பா."

"ஏன்? அவை இங்கிலீசு படிக்கினம் என்றுற் போல அவையிலே உனக்குப் பெரிய எண்ணமே? நீயும் ஒரு தமிழ்ச்சட்டம்பிதானே?"

"அவை இங்கிலீசு படிக்கிறதுக்காகச் சொல்லே யில்லே. அந்த ரீச்சர்மார் 'கூலிங் கிளாஸ்' அடிச்சுக் கொண்டு ஒயிலாக நடந்து போனதை எப்பவாலும் பார்த்தனியே? உண்மையிலே அவளவைதானப்பா அழகியள்."

"ஓகோ!... நீ உந்தப் பகட்டிலே மயங்கிப் பேர் ணய் போல கிடக்கு. அவையின்ரை வீட்டுக்கு ஒரு நாளைக்குப் போய் உண்மையான இயற்கை அழகை ஒருக்காப் பாத்துவிட்டுச் சொல்லு. அவையின்ரை அழகு எப்படி எண்டு. சும்மா பவுடரையும் லிப்ஸ்ரிக் கையும் போட்டுச் செயற்கை அழகு செய்துகொண்டு வந்தாப்போல, அவை பெரிய அழகிகள் எண்டு நினைச் சுட்டியே?"

"ஏனப்பா, உனக்குப் பலாலியைப் பற்றிப் புகழ்ந் தாப்போலே கோவம் வருகுது?"

"எனக்கேன் கோவம் வருகுது? உண்மையைத் தான் சொல்லுறன்."

"சரி சரி, நீ புகழும் கோப்பாயையும் ஒருக்கா வந்து பாப்போமே."

— கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலே 'டோ மெற்றி'யினுள் நின்று, அவசர அவசரமாக வேட்டி யைக் கட்டிக்கொண்டு வரதனுடன் புறப்பட்டுப் போ ஞன் தேவன்.

தேவனும் வரதனும் ஒருவரோடு ஒருவர் எத்தனை எத்தனையோ கதைகள் எல்லாம் கதைத்துக்கொண்டு கோப்பாய் மகளிர் கலாசாலைக்குப் போய்ச் சேர்ந்தனர்.

## 4

கோப்பாய் மகளிர் கலாசாலைக்குப் போனதும் அங்கேயுள்ள 'விசிற்றேஸ் றூமில்' தேவனை இருக்கும்படி சொல்லிவிட்டுக் கிளாக்கரின் காரியாலத்திற்குள் நுழைந்தான் வரதன். "மாஸ்ரர்! என்ன மாஸ்ரர்!! மலர்விழியைச் சும்மா இருக்க விடமாட்டியளோ மாஸ்ரர்?" என்று குறும்பாகச் சிரித்துக் கொண்டே வரதனைக் கேட்டாள் அந்தக் கிளாக். அந்தப் பெண் கிளாக்குக்கு வரதன் போனதும் அவன் யாரைத் தேடி வந்திருக்கிறன் என்பது நன்றாகத் தெரியும். அடிக்கடி போனல் யாருக்குத்தான் பழக்கம் இல்லாமற்போகும்.

"என்ன பாருங்க ஒரு மாதிரிக் கேலி செய்யிறியள். கல்யாணம் செய்தவைக்குத்தான் அதன் அருமை தெரியும். உங்களுக்கு ..." என்று இழுத்துக்கொண்டே வரதன் கூறியது அவளைக் கேலி செய்வதுபோல் அவளுக்குத் தோன்றியது. அவளும் வரதனுக்கு விட்டுக் கொடுக்காது கேலி செய்துகொண்டே இருந்தாள்.

"சரி சரி, மலர்விழியை ஒருக்கா வரச் சொல்லுங்க" என்று வரதன் சொன்னதும் மலர்விழியைக் கூட்டிக் கொண்டு வந்தாள் அந்தக் கிளாக்.

மலர்விழி வரதனைக் காண வரும்போது தன் சிநேகிதி பொன்முடியோடுதான் வருவாள். அவள் எங்கு போனலும் தன் சிநேகிதி பொன்முடியைக் கூட்டிக்கொண்டு போகத் தவறமாட்டாள். அந்தக் கலாசாலையிலே மலர்விழியையும் பொன்முடியையும்போல உயிருக்குயிரான சிநேகிதிகள் ஒருவரேனும் இல்லை என்றே சொல்லலாம்,

மலர்விழி தன் கணவன் சந்திக்க வந்திருப்பதை அறிந்ததும் தன் சிநேகிதியோடு 'விசிற்றேஸ் றூ'முக்கு வந்துகொண்டே "என்னத்தான்! இன்றைக்குத் துணை யோடே வந்திருக்கிறியள்? என்ன விசேஷம்?" என்ருள்.

"ஒன்றுமில்லை மலர்விழி, உங்களுக்கு 'ரீச்சிங் பிறைக்ரீசு'க்கு உபகரணங்கள் தேவை என்று சொன்னியள். அதுதான் கொண்டுவந்தனுங்கள்" என்று சொல்லிக்கொண்டே உபகரணங்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்ருக எடுத்தெடுத்துக் காட்டினுன் வரதன்.

அவன் காட்டிய உபகரணங்களைப் பார்த்ததும் அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"அத்தான்! இந்தப்படம் ஆர் அத்தான் கீறினது?"

"இதோ இருக்கிருரே இந்தக் கலைஞர்தான்" என்று சொல்லித் தேவனைக் காட்டினுன் வரதன். அந்த அழகான உபகரணங்களை எல்லாம் தேவன்தான் செய்தான் என்று வரதன் சொன்னதைக் கேட்டுக்கொண்டு அருகில் நின்ற பொன்முடி "என்ன! இந்த உபகரணங்களை இவரா செய்தார்?" என்று கேட்டாள் ஆச்சரியத்தோடு.

"... ... ..."

"மாஸ்ரர்! எனக்கும் கொஞ்ச உபகரணங்கள் செய்து கொண்டுவந்து தாறியளே?" என்று தேவனைக் கேட்டாள் பொன்முடி. பொன்முடி கேட்கும்போது அவளது வாயிலிருந்து தேன் சொட்டுவதுபோல் இருந்தது. பெண்கள் ஒன்றை விரும்பிக் கேட்டால் எந்த ஆண்தான் மறுப்பான். 'பெண் என்ருல் பேயும் இரங்கும்' என்று சொல்வார்களே! தேவனும் பொன்முடியின் வேண்டுகோளுக்கு இசைந்தான்.

## 5

வரதனேடு போய்ப்பொன்முடியோடு கதைக்கத்தொடங்கிய தேவன் பொன்முடியின் வேண்டுகோட்படி அதிக பணத்தைச் செலவு செய்து உபகரணங்கள் எல்லாம் செய்து கொண்டுபோய்ப் பொன்முடிக்குக் கொடுத்தான். பொன்முடி அவனது கலைத்திறனைப் பாராட்டியது அவனுக்கு என்னவோபோல இருந்தது. அவனும் அவளது பாராட்டைப் பெறுவதற்காகத் தன்னுல் இயன்ற நல்ல நல்ல உபகரணங்களை எல்லாம் செய்துகொண்டு போய்க் கொடுத்தான்.

தேவனுக்குப் பொன்முடி பாராட்டப் பாராட்ட அவள் மேல் காதல் பிறந்தது. பொன்முடி — பொன்முடியின் இயற்கை அழகும் பிடி நடையும் குயிலினும் இனிய குரலும் பெண்களுக்கு அதிக அழகைக் கொடுக்கும். கருவண்டை ஒத்த நீளமான பின்னல்களும் யாரைத்தான் காதலிக்கச் செய்யாது? தேவனும் அவளது அழகில் மயங்கினுன்.

நாட்கள் செல்லச்செல்ல அவனுக்குப் பொன்முடியின் மேல் காதல் அதிகரித்துக்கொண்டே வந்தது. அவன் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் அவளைச் சந்தித்துக் கதைத்து வந்தான்.

வாரத்தில் ஒரு நாளாவது அவளைச் சந்தித்துக் கதைக்காவிட்டால் அவனுக்கு மண்டை வெடித்துவிடும் போலிருக்கும்.

ஒருநாள் —

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் பொன்முடியைச் சந்திப்பதற்காகக் காத்து நின்ருன் தேவன்.

கோப்பாயில் இருந்துவரும் ஒவ்வொரு பஸ்ஸையும் அடிக்கடி ஓடி ஓடிப் போய்ப் பார்த்தான். அவளைக்

காணவில்லை. அவனுக்கு ஆத்திரம் வந்துவிட்டது. ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு அவளின் வரவை எதிர் பார்த்து நின்ருன். பொன்முடி கடைசியாக வந்த பஸ்ஸில் இருந்து இறங்கி நடந்துவந்தாள். அவளைக்கண்ட பிறகுதான் அவனுக்கு உச்சி குளிர்ந்தது.

இருவரும் சந்தித்துக் கதைக்கும் மரத்துக்குக் கீழே நின்று கதைத்தார்கள். இருவரும் ஒருவரோடு ஒருவர் கதைத்துக்கொண்டு நிற்கும்போது பொன்முடியின்கழுத்திலே தாலிக்கொடி தொங்கிக்கொண்டிருப்பது தேவனுடைய கண்ணுக்குத் தெரிந்தது. இவ்வளவு காலமும் கன்னியென நினைத்து அவளைக் காதலித்த தேவனுக்கு மயக்கம் வருவதுபோல இருந்தது. எதிர்பாராத விஷயம் ஒன்று திடீரென நடந்துவிட்டால் யாருக்குத்தான் அதிர்ச்சி ஏற்படாது?

"பொன்முடி! நீ கல்யாணம் செய்துவிட்டாயா? எப்பொழுது செய்தாய்?"

"உங்களுக்குத் தெரியாதா?"

"எப்படி எனக்குத் தெரியும்? நீ கல்யாணம் செய்தபொழுது சொன்னுயா?" என்று தேவன் கேட்டபோது பொன்முடி சிரித்தாள். அவள் சிரிப்பது தேவனுக்கு ஆத்திரமாக இருந்தது.

"ஏன் சிரிக்கிருய்?" ஆத்திரத்துடன் கேட்டான்.

"நான் கல்யாணம் செய்து இரண்டு வருடத்துக்கு மேலாகிறதே? எப்படி உங்களுக்குச் சொல்லியிருக்க முடியும்?"

"என்ன, நீ கல்யாணம் செய்து இரண்டு வருடங்களாகிறதா? அப்படியானல் நீ ஏன் தாலிக் கொடி கட்டாமல் இருந்தாய்?"

" அது ... "

" என்னை ஏமாற்றுவதற்காகவா ? "

" என்ன ! உங்களை ஏமாற்றுவதற்காகவா ? நான் உங்களை விரும்புவதாக எப்பொழுதாவது சொன்னேனு ? அல்லது நீங்கள் எனக்குச் சொன்னீர்களா ? "

" ...... "

" மாஸ்ரர் ! நான் தாலிக்கொடி கட்டாமல் இருந்ததைக்கண்டு கன்னியென நினைத்துக் காதலித்திருக்கிறீர்கள்போலத் தெரிகிறது. எனக்குச் சொல்லாமல் நீங்கள் என்னைக் காதலித்தது உங்கள் தப்பு. கலியாணம் செய்தும் தாலிக்கொடி கட்டாமல் இருந்தது எனது தப்பு. ஆனுல், நான் தாலிக்கொடி கட்டாமல் இருந்ததற்கும் காரணத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள் " என்று சொல்லித் தன் கணவன் வறுமையின் காரணமாகவும் தனது படிப்புச் செலவுக்காக அடைவு வைத்ததாகவும் தற்பொழுது அந்தத் தாலிக்கொடியை அடைவிலிருந்து எடுத்ததாகவும் சொன்னுள் பொன்முடி.

இப்படியே பொன்முடி சொன்னதும் தேவனின் முகமெல்லாம் எண்ணெய் படர்ந்ததுபோல மாறிவிட்டது.

பொன்முடி என்ன செய்யமுடியும்? அவள், அவனைக் காதலிக்கவில்லைத்தானே ! அவன்தானே அவளைக் காதலித்தான். அவன் அவளைக் காதலிக்கும்போது அவளைப்பற்றித் தீரவிசாரித்து விட்டல்லவா காதலித்திருக்க வேண்டும் ? அவளைப்பற்றி ஒன்றுமே தெரியாது ஒருதலையாகக் காதலித்துவிட்டுக் காதல் நிறைவேறவில்லை என்ருல் ' தற்கொலை ' செய்யலாமா ?

" தாலிகட்டாமல் இருந்ததால்தானே அவள் ' கன்னிப்பெண் ', என நினைத்து அவளைக் காதலித்தேன். பெண்கள் தாலிகட்டாமல் இருக்கவே கூடாது " என்று

தனக்குள்ளே நினைத்துக்கொண்டு அவளைத் திரும்பியும் பார்க்காமல் ஓடினன் தேவன்.

## 6

"அத்தான்! என்னத்தான்!! நான் சொல்வதில் ஏதாவது தவறு இருக்கிறதா? ஒவ்வொரு பெண்களுக்கும் தாலி மிகமிக முக்கியம் என்பதை நீங்கள் கேள்விப்படவில்லையா?" என்று தேவி கேட்டதும் கடந்த கால நினைவை அப்படியே அறுத்துவிட்டு, "தேவி! நீ சொல்வது முற்றிலும் உண்மை. தாலி பெண்களுக்கு வேலிதான். அந்த வேலியை நான் ஒரு நாளும் அழிக்கமாட்டேன்" என்று சொல்லித் தாலியின் மகிமையை உணர்ந்தவன்போல் தாலியை வாங்கி அடைவு வைக்க விருப்பமில்லாது மீண்டும் திருவிழாப் பார்க்க ஓடினன் தேவன்.

4-4-1965

# தமிழ்ச் சட்டம்பி

"வதனி! வதனி!! இஞ்சை ஒருக்கா ஓடியா"

"ஏனணை அம்மா கூப்பிடுகிறியள்?"

"உன்ரை கொத்தானெல்லே பெண்சாதியோடை போருர். ஓடியந்து பாரன்"

"உண்ணணைப் போருர்?"

"உண்ணணைப் போருர் பிள்ளை" என்று பார்வதி சத்தியம் செய்து கூறியதும் வீட்டு விருந்தையைக் கூட்டிக்கொண்டு நின்ற வதனி, கூட்டுமாற்றையும் அப்படியே விட்டு விட்டு ஓடினுள் தெருப்படலையடிக்கு.

"பாத்தியே உன்ரை கொத்தானை. எங்கண்டை வீட்டுக்கே வராமல் போருர். அவருக்கு நாங்கள் என்ன செய்தனுங்கள்?"

"என்ன செய்தனீங்களோ? அவருக்கு நீங்கள் செய்ததை எல்லாம் நினைத்தால்......"

"என்னத்தைச் செய்தனுங்கள்? நாங்கள் சொன்ன மாதிரிப் படிச்சிருந்தால் ஏன்? இப்படியெல்லாம் வருகுது"

"நீங்கள் சொன்ன மாதிரிப் படிச்சாப்போலை ஏதோ பெரிய மனிசனு விடுவாரே? இப்ப மாத்திரம் ஏதோ குறைவே?"

"இப்ப குறைவில்லைத்தான். இருந்தாலும்......"

"என்ன? என்ன இருந்தாலும் என்று இழுத்துப் பேசிறியள். இப்பதானுமே அவருக்குச் சரியான சம்பளம். வேலையும் சொந்த ஊரிலையாம். அவருக்கு இன்னும் சம்பளம் ஏறப் போகுதாம்".

"ஆர் சொன்னது?"

"பேப்பர்தான் சொல்லுது. சுயபாஷைக்காரருக்கு இன்னும் சம்பளத்தைக் கூட்டப் போறுங்களாம்".

"உண்ணுணை எண்டு சொல்லு"

"உண்ணுணை"

"நாங்களெல்லே கொத்தான்ரை சம்பளம் பிச்சைக்காரச் சம்பளம், குடும்பத்தைக் கொண்டு நடத்த முடியாதெண்டெல்லே நினைச்சு உன்னை......"

"என்னை அவருக்குச் செய்து கொடுக்காமை விட்டாப்போலை அவர் குறைஞ்சு போனுரே? என்னைக் கலியாணம் செய்ய வேணுமெண்டு அவர் பட்ட பாடு. பாவம்" என்று வதனி சொன்னதும் கடந்த காலச் சம்பவங்கள் யாவும் பார்வதியின் நினைவுக்கு வந்தன.

ஃ ஃ ஃ ஃ

ஆனந்தன் பார்வதியின் அண்ணன் மகன். அவன் பிறந்து ஐந்து ஆண்டுகளால் தகப்பன் இறந்துவிட்டார். சின்னஞ் சிறு வயதிலே தகப்பனை இழந்த ஆனந்தன் அவ்வூர்த் தமிழ்ப் பாடசாலை ஒன்றில் படித்தான். ஆனந்தன் படிக்கும் காலத்தில் ஆங்கிலத்திற்கு நல்ல மதிப்பு இருந்தது. ஆங்கிலம் படித்தவர்களுக்கே அரசாங்கத்தில் உத்தியோகங்கள் கிடைத்தன. உத்தியோகத்திற்காக ஆங்கிலத்தில் மோகங்கொண்ட தமிழர்கள் பலர் தமிழை வெறுத்து ஆங்கிலக் கல்லூரிகளில் ஆங்கிலம் படிக்கத் தொடங்கினர்.

ஒரு நாள் —

"தம்பி ஆனந்தன்! இந்தக் காலத்திலை இங்கிலீசு படிக்காமை ஒண்டும் செய்ய முடியாது. நீயும் இங்கிலீசுப் பள்ளிக்கூடத்திலை போய்ப் படியன்".

"எனக்கேன் இங்கிலீசை? எங்கண்டை தமிழ் இருக்கையுக்கை தமிழை விட்டுவிட்டு இங்கிலீசு படிக்கிறதே?"

"பின்னை உனக்கு உத்தியோகம் வேண்டாமே?"

"உத்தியோகத்துக்காகத் தாய்மொழியை விடச் சொல்லுறியளே? தமிழ் படிச்சவை உத்தியோகம் பாக்கயில்லையே? பண்டைத் தமிழர்கள் எல்லாம் உத்தியோகம் பாத்தவையே?"

"தமிழ் படிச்சவைக்கு என்ன உத்தியோகம் கிடக்குது; ஆக அந்த வாத்தி வேலைதான் கிடக்குது. அதுவும் பிச்சைக்காரச் சம்பளம்".

"அந்தக் காலத்து வாத்திமாரெல்லாம் சம்பளத்துக்காகவே படிப்பிச்சவை. என்ன இருந்தாலும் நான் தமிழ்தான் படிக்கப் போறன். தமிழிலை இருக்கிற இலக்கண இலக்கியம் வேறை எந்த மொழியிலை இருக்குது?"

"ஆர் சொன்னது உப்பிடி? நானும் தமிழ் படிச்சனுன்தான்!"

"ஓ! நீங்களும் தமிழ் படிச்சிருக்கலாம். ஆனால், அங்கினை ஒண்டையும் இங்கினை ஒண்டையும் படிச்சிருப்பியள். முற்றும் ஆராய்ந்து படித்தவனுக்குத்தான் அதன் பெருமையும் சிறப்பும் தெரியும்!"

"சரி சரி, உன்னோடை கதைச்சு வேலையில்லை. உன்ரை கொம்மாவை ஒருக்கா வந்துவிட்டுப் போகச்

சொல்லு" என்று பார்வதி சொன்னதும் ஆனந்தன் சிரித்துக்கொண்டே எழுந்து வீட்டுக்குப் போனான்.

ஃ ஃ ஃ ஃ

"வதனி! மச்சாள் இருக்கிருவே?"

"என்ன மாமி! அம்மாவையே கேக்கிறியள்? அவ கோலுக்கை இருக்கிரு. வாருங்கோவன் உள்ளுக்கு!" என்று கூறித் துள்ளிக் குதித்துக்கொண்டு மான் போல் ஓடி மறைந்தாள் வதனி. வதனியைப் பின்தொடர்ந்து சென்ருள் பாக்கியம்.

"உதார் எங்கண்டை பாக்கிய மச்சாளே? வா மச்சாள் வா".

"வரச்சொல்லிச் சொல்லி அனுப்பினனீங்களாம். அதுதான் வந்தனுன்".

"ஏனணை மச்சாள் நிண்டுகொண்டு கதைக்கிறியள்? உதிலை இரன். உன்ரை மேனைப் பற்றித்தான் கதைக்க வேணும்" என்று பார்வதி சொன்னதும் சேலைத் தலைப்பைச் சரி செய்துகொண்டே நாற்காலியில் அமர்ந்தாள் பாக்கியம்.

"நேற்றைக்கு மேன் என்ன சொன்னவர்?"

"அவன் எல்லா விஷயமும் சொன்னவன்தான். என்ன இருந்தாலும் தமிழ்தானும் படிக்கப் போறுன். வருங்காலத்திலை தமிழுக்குத்தானும் மதிப்பு வரும்".

"உந்த எம். பி. மார் சும்மா சொல்லுவாங்கள். பிறகு என்ன நடக்குதெண்டு பாருங்கோவன்".

"மச்சாள்! என்னை என்னணை செய்யச் சொல்லுருய்?"

"மேனை இங்கிலீசு படிக்கச் சொல்லு. கண்டவன் நிண்டவனெல்லாம் இங்கிலீசு படிக்கையுக்கை இவர் மாத்திரம் தமிழ் படிக்கப் போருராமே?"

"அவன் தமிழ்தான் படிக்கப் போறேனெண்டு ஒற்றைக் காலிலை நிற்கிருன்".

"அப்பிடியெண்டா உன்ரை மேனுக்கும் என்ரை மேளுக்கும் ஒத்துவராது. அவளை நாங்கள் இங்கிலீசு படிப்பிக்கப் போறம்".

"நான் என்ன செய்யிறது? நீங்கள் என்னத்தை எண்டாயென்ன செய்யுங்கோ" என்று சொல்லிக் கொண்டே நழுவியிருந்த முந்தானைச் சேலையைச் சொருகிக்கொண்டு போனுள் பாக்கியம்.

ஃ ஃ ஃ ஃ

ஐந்து வருடங்களுக்குப் பின்:

"என்ன மச்சாள்! இண்டைக்கு உறவினர்களோடு வந்திருக்கிருய்? என்ன விஷேசம்?"

"ஒண்டுமில்லை, என்ரை மேன்ரை விஷயமாகத்தான் வந்தனுங்கள்".

"என்ன விஷயம்?"

"கலியாண விஷயமாகத்தான்".

"ஆருக்குச் செய்ய?"

"என்ரை ஆனந்தனுக்கும் வதனிக்கும்......"

"என்ன!...... நான்தானே படிக்கையுக்கை சொன்னனுன்"......

"போனதை விடு மச்சாள். அவன்தானே இப்ப உத்தியோகமாகி விட்டான்".

"என்ன உத்தியோகம்? தமிழ்ச் சட்டம்பிதானே?"

"ஓமணை மச்சாள்".

"அது ஒத்துவராது. வேறை யாரையும் பார்த்துச் செய்யுங்கோ".

"உருத்துக்காகவோ உத்தியோகத்துக்காகவோ கலியாணம் செய்யப் போறியள்?"

"எல்லாற்றை பெட்டையளும் காற்சட்டை போட்டவங்களோடை இங்கிலீசு பேசிக்கொண்டு போக, என்ரை பெட்டையை மாத்திரம் வேட்டி உடுத்தவரோடை தமிழ் பேசிக்கொண்டு போகச் சொல்லுறியளே?"

"ஏன் தமிழ்ச் சட்டம்பி உத்தியோகம் சரியில்லையே?"

"சரியெண்டு வை. சம்பளம் என்ன தெரியுமே?"

"இஞ்சை பார் மச்சாள்! சம்பளம் குறைஞ்சாப் போலை தமிழ்ச் சட்டம்பியைத் தள்ளி வைக்காதையுங்கோ. ஒரு காலத்திலை தமிழ்ச் சட்டம்பிமாருக்கும் நல்ல காலம் வரும்".

"அது வந்த காலத்திலே பாப்பம். இனிமேல் இதைப் பற்றிக் கதைக்காமல் உன்ரை மேனுக்கு எங்கையாலும் பார்த்துக் கலியாணத்தைக் கட்டி வை"

"அது எனக்குத் தெரியும். இனிமேல் இந்த விஷயமாக உன்ரை வீட்டுக்கு வந்தால் உன்ரை காலுச் செருப்பாலை அடி" என்று சொல்லிக்கொண்டே விறுவிறென்று நடந்தாள் பாக்கியம்.

ஆனந்தனுக்கும் அவ்வூரைச் சேர்ந்த பிரபல விவசாயி ஒருவரின் மகள் ரோகினிக்கும் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. ரோகினி வறுமைப்பட்டவள்.

அதிகம் படிக்காதவள். ஆனல் பண்புள்ளவள். ரோகினியின் சிறந்த பண்பு ஆனந்தனைக் கவர்ந்தது. ஆனந்தன் ரோகினியை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டதையிட்டுப் பெருமைப்பட்டான்.

ஃ ஃ ஃ ஃ

"என்ன பார்வதி! ரேட்டையே பார்த்துக் கொண்டு நிக்கிறியள்? என்ன விஷேசம்?" என்று அந்த வீதியால் வந்த தம்பித்துரை மாஸ்ரர் கேட்டதும் பார்வதி சுய நினைவுக்கு வந்தாள்.

"ஒண்டுமில்லை மாஸ்ரர். எங்கண்டை மருமேனும் பெண்சாதியும் போகினம். அதுதான் என்ரை மேளுக்குக் காட்டினனுன்".

"இப்ப காட்டினுப் போலை என்ன. அந்தப் பொடியன் கேட்ட நேரம் செய்து கொடுத்திருந்தா உன்ரை மேள் ஏன் உப்பிடி இருக்குது".

"அதுக்கென்ன மாஸ்ரர் செய்யிறது. மருமேனுக்குப் பேசியிருந்ததெண்டெல்லே ஒருத்தரும் மாட்டெண்ணுருங்கள்".

"பார்வதி! இப்பவெல்லே மருமேனுக்குச் சம்பளம் கூட்டிப் போட்டாங்கள். அவன்ரை சம்பளத்துக்கும் மதிப்புக்கும் ஆரும் கிட்ட நிக்க முடியுமே?"

"நானென்ன செய்யிறது. காலம் செய்யிற வேலை மாஸ்ரர். அல்லாட்டித் தமிழ்ச் சட்டம்பியை வேண்டாமெண்டு தள்ளியிருப்பேனே? தமிழை வேம்பென வெறுத்துவிட்டு இங்கிலீசைக் கரும்பென நினைத்தது என் தவறுதான். அதுக்கினி என்ன செய்யிறது?"

4-10-1964

# மானம்

"கனகம், வாறியோ கோயிலுக்குப் போவம்?"

"எந்தக் கோயிலுக்கு?"

"மடுமாதா கோயிலுக்குத் தான்".

"என்னணை அக்கா! எங்கள் ஊருச் சனங்களெல்லாம் உந்தக் கோயிலுக் கெண்டுதான் பெட்டி படுக்கைகளோடை போகுதுகள். அவ்வளவுக்கு மடுமாதா கோயில் புகழ்பெற்றதோ?"

"ஓமடி தங்கச்சி! எந்தக் கோயிலுக்குப் போகாவிட்டாலும் மடுமாதா கோவிலுக்குப் போனு எல்லாக்குறையும் நீங்கிப்போகும்".

"பின்னே, எல்லா ஊரிலை இருந்தும் சனங்கள் வருமே?"

"வேறேயென்ன, சாதி சமய பாகுபாடின்றி எல்லாச் சமயத்தவர்களும் எல்லாச் சாதியினரும் பெருந்தொகையாகப் பங்கு பற்றும் ஒரே ஒரு கோயில் மடுமாதா கோயில்தான் என்று உனக்குத் தெரியாதே?"

"நானெண்டால் இதுவரையும் கேள்விப்படவில்லை."

"அப்பப்பா! அந்தக் கோயிலுக்கு வரும் சனம் நீக்குப் போக்கில்லாமல் தான் இருக்கும். அவ்வளவுக்குப் பெருவாரியான சனம் வரும்".

"அப்பிடியென்றால் எல்லாச் சனமும் எங்கே தங்கிறது?"

"கோயில் காட்டுக்குள்ளே தான் இருக்குது. அதனுலே சனமெல்லாம் தாங்கள் விரும்பின மாதிரிக் கூடாரங் ரங்கள் அமைத்தும் மரங்களுக்குக்கீழும் தங்குவார்கள். அவர்கள் கூட்டம் கூட்டமாக இருந்து சமைப்பதைப் பார்த்தால் மறக்கவே முடியாது."

"நீங்கள் பின்னே, போகிறியளோ"

"போகாமலே உன்னை வரச் சொல்லுறன்"

"இப்ப வாறத்துக்கு வசதியில்லை"

"அதுக்கெல்லாம் நான் இருக்கிறன் நீவாவன்"

"உங்களுக்கு என்னை கூட்டிக்கொண்டுபோக விருப் பமாக இருக்கும். ஆனுல் உங்கள் கணவருக்கு..."

"இஞ்சார் கனகம், முற்றவையுந்தை புருசன்மார் மாதிரி என்ரை புருசனையும் நினைக்கிறியோ? என்ரை புருசன் தங்கமானவர். அவரோடை ஆலோசித்துப் போட்டுத்தான் உன்னைக்கேக்க வந்தனுன்."

"எணையக்கா என்ரை மகன் சரியான துடினக் காரனனை"

"அதுக்கெல்லாம் நானெல்லோ இருக்கிறன்".

"அப்ப பின்னை வாறனக்கா".

"சரி சரி உடுப்பெல்லாத்தையும் கட்டிக் கொண்டு எங்கள் படலையடிக்கு வாவன். கார்க்காரன் பேசப் போகிருன். நானும் போய்ச் சாமான் சக்கட்டுகள் எடுத்து ஒழுங்குபடுத்த வேணும்" வந்த காரியத்தை இவ்வாறு பேசி முடித்துக் கொண்டு அடுத்த வீட்டுக் கோகிலம் போய்விட்டாள்.

## 2

"இஞ்சாருங்கோ இந்த மரத்துக்குக் கீழே இருந்து கொள்ளுங்கோ. சமைக்கிறத்துக்கு இடம் பார்த்துக் கொண்டு வாறன்" என்று சொல்லி விட்டு இடம்பார்ப் பதற்காகக் கோவில் வீதிவழியே சென்றுர் கோகிலத் தின் புருசன் நந்தி.

"கனகம், கோயிலடியைப் பார்த்தியோ? எவ்வளவு சனம்".

"ஓமக்கா! உப்பிடிச்சனத்தை நான் சீவியத்திலும் காணமாட்டேன்"

"கனகம்! அதோபார் அந்த மரத்தடியிலை பெடியங் களும் பெட்டையளுமாய் கூடிச் சமைக்கிறதை"

"எல்லாம் கலியாணம் கட்டாததுகளோ?"

"பின்னையென்ன, கல்லூரிக் காதலர்கள் மாதா கோயில்லை வந்து சந்தித்துத்தான் புருசன் பெண்சாதி மாதிரிச் சமைத்துச் சாப்பிட்டுவிட்டுப் போறவை".

கோகிலம் சொன்னதும் கனகம் அந்தக் காதலர் களை உற்றுப் பார்த்தாள். அங்கு மூன்று கன்னிப் பெண்களுடன் சேர்ந்து சமைப்பவனைக் கண்கொட்டா மல் உற்று நோக்கினுள். அவனைக்கண்டதும் அவ ளுக்கு ஒரே ஆச்சரியமாகிவிட்டது. அவளது கடந்த கால நிகழ்ச்சிகளை அது நினைவுபடுத்தியது. இவ்வளவு காலமும் அடக்கிவைத்திருந்த சம்பவங்கள் யாவும் சக் கரம் போல் சுழலத் தொடங்கின...

ஃ ஃ ஃ ஃ

குமாரும் கனகமும் ஒரே வகுப்பு மாணவர்கள். அவர்கள் இருவரும் நாலாம் வகுப்புத்தொடக்கம் ஏச். எஸ். ஸி. வகுப்புவரை ஒன்ருகவே படித்து வந்த

னர். அவர்கள் இருவரும் ஒன்ருகப்படித்ததினலோ என்னவோ இருபேரின் உள்ளங்களும் ஒன்ருேடொன்று இணைந்து வந்தன.

அவள் கல்லூரிக்கு வராவிட்டால் அவனுக்கு ஆத்திரமாக இருக்கும். அவன் கல்லூரிக்கு வராது போனல் அவளுக்கு ஆத்திரமாக இருக்கும். இதனல் இருவருமே கல்லூரிக்குத் தவருது சமூகம் கொடுத்து வந்தனர். இப்படியே இருவரும் தவருது சமூகம்கொடுத்துக் கல்லூரியின் ஆண்டுவிழாவிலே தங்கப் பதக்கம் பெறுவதற்குக் காரணமாக ஏதோ ஒன்று இருந்திருக்க வேண்டும். அதுதான் ... காதலோ?

கல்லூரி விடுவதற்கு அரைமணித்தியாலத்திற்கு முன் கல்லூரியின் பக்கம் போனல் எத்தனை எத்தனையோ காட்சிகளையெல்லாம் காணலாம். பிள்ளைகளை ஏற்றவந்த மாட்டுவண்டிகள் ஒருபக்கமும், மோட்டார் வண்டிகள் இன்னெரு பக்கமும், நாற்றிசைக்கும் புறப்படுவதற்கு ஆயத்தமாக நிற்கும் 'பஸ்' வண்டிகள் வேருெரு பக்கமுமாக அலங்கரித்துக்கொண்டு நிற்கும் காட்சிகள் காண்போரைக் களிப்பூட்டவல்ல கண்கொள்ளாக்காட்சியாக இருக்கும்.

நாலுமணிக்குக் கல்லூரியின் கடைசிமணி டாங்...டாங்... என்று அடித்ததும் நாலா பக்கத்திலுமிருந்து மாணவ மாணவியர் ஓடிஓடிச் சென்று தங்கள் தங்கள் வாகனங்களில் ஏறி மறைந்துவிடுவார்கள்.

வெளிமாணவர்கள் சென்றதும் அவர்களுக்குப் பின் 'போடிங்'கிலே தங்கும் மாணவ மாணவியர் தேநீர் அருந்திவிட்டு உலாவுவதற்காகக் கல்லூரிக்கு வெளியே வரும்வரை கல்லுண்டாய் வீதியிலே காதலர்கள் காத்துக்கொண்டு நிற்பர். குமாரும், கனகம் வரும்வரை காத்து நிற்பான்.

கனகம் வந்ததும் மிக்க மகிழ்ச்சியுடன் அழைத்துக் கொண்டு கல்லுண்டாய் வீதியால் நடப்பான். இருவரும் ஒருவரை ஒருவர் கட்டுண்ட நிலையில் காதல் கதைகள் பேசிக்கொண்டு நடப்பர். சூரியன் கடலுள் மறையும் வரை கல்லுண்டாய் வீதியில் குமாரையும் கனகத்தையும் காணலாம்.

ஒருநாள் —

"கனகம் எங்கள் இருவரதும் காதல் இப்படி கல்லுண்டாய் வீதியிலே நடந்துகொண்டிருந்தால் என்னுவது?" என்று குமார் பேச்செடுத்தான்.

"குமார்! எப்படி முடிவடைய வேண்டுமென்று விரும்புகிறீர்கள்?"

"கல்யாணத்தில் முடிய வேண்டுமென்றுதான் விரும்புகிறேன்."

"அப்படியா?" ஆச்சரியத்துடன் கனகம் கேட்டாள்.

"ஏன்? ஆச்சரியப்படுகிருய். இதோ இன்றைக்கே உன்னை மனைவியாக்கி விடுகிறேன்." அவளது பூங்கொடிபோன்ற கரங்களை வருடியவாறு அவளைத்தன் பக்கத்தில் இழுத்துக்கொண்டே சொன்னுன்.

குமார் !ஏன் அவசரப்படுகிறீர்கள்? காலம் வரும் போது கல்யாணம் செய்து கொள்வோம்" — என்ருள் கனகம். அவளுக்குக் கூச்சம்.

"காலம் வரும்வரை காத்துக் கொண்டு இருக்கச் சொல்கிருயா கனகம்?" — அவளது சின்ன இடையைப் பற்றி அணைத்தான் குமார்.

"வேறு என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?"

"கனியை வைத்துக்கொண்டு பசிக்க இருக்கச் சொல்கிருயா?"

"குமார்! உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பசியை நீங்கள் தீர்த்துக்கொள்ளலாம், பிறகு என் கதி?"

"உனக்கென்ன வந்துவிடப் போகுது. நான்தான் உன்னை என்மனைவியாக்கிக் கொள்ளப் போகிறேன். நானிருக்க நீயேன் கவலைப்படுகிறாய், வா"...

ஃ ஃ ஃ ஃ

இரண்டு மாதங்களின் பின் ஒரு நாள்—

"அத்தான்! நாளைக்கு நான் வரமாட்டேன்"

"ஏன் உடம்புக்குச் சுகமில்லையா?"

"ஊம்...ஊம்... சொல்லமாட்டேன்" விஷயத்தைச் சொல்ல வேண்டும், சொல்லவேண்டுமென்று யோசித்துக் கொண்டிருந்த கனகம் வெட்கத்தினால் சொல்லத் தயங்கினாள்.

"என்னைப்போல் வேறு யாரையும்..."

"என்ன!... உங்களைப்போல் வேறு ஒருவரையும் காதலிக்கிறேனா? என்ன அநியாயம்" — அழுதாள். கண்டோர் மயங்கும் கட்டழகியான கனகம் ஏக்கத்தால் வாடி நின்றாள்; அவளது கண்களிலிருந்து கண்ணீர் கரைந்தது.

"ஏன் அழுகிறாய்? உண்மையைச் சொல்லு"

"உங்களுக்குத் தெரிய வேண்டுமே"

"என்ன கனகம் சொல்கிறாய்?"

"நான் ஒருபிள்ளைக்குத் தாயாகிவிட்டேன் அத்தான்."

"என்ன, தாயாகிவிட்டாயா?"

"ஆம் அத்தான்! என் அப்பா கேள்விப்பட்டால்... ஐயோ! என்னைக் கொன்றுவிடுவாரே" அவளது உதடுகள் நடுங்கின.

"கனகம்! சும்மா அழுகையை விட்டிட்டு உண்மையைச் சொல்லேன்?"

"உண்மைதான் அத்தான்."

"உண்மையாகவா?"

"பின்னே..."

"இதுக்காகவா அழுது கொட்டினுய்? பைத்தியம் இது ஒரு சின்ன விஷயம்."

"என்ன இது ஒரு சின்ன விஷயமா?"

"அத்தான் ஆண்களுக்கு இது ஒரு சின்ன விஷயமாக இருக்கலாம். ஆனுல் ... பெண்களுக்கு..."

"பெண்களுக்கு மாத்திரம் என்னவாக்கும்."

"கல்யாணம் செய்ய முன்பு கருத்தரித்ததை ஊரவர்கள் அறிந்தால் என்ன செய்வார்கள்? பாதகி, பழிகாரி, வேசை என்றெல்லவா தூற்றுவார்கள். இப்படி நடந்த பின்பு ஏறுநடையுடன் நடக்க முடியுமா?"

"ஏன் நடக்க முடியாது?"

"ஆண்களை இந்த உலகம் எப்படியும் நடக்க அனுமதிக்கும். ஆண்கள் சேறு கண்ட இடத்தில் மிதித்துத் தண்ணீர் கண்ட இடத்திலே கழுவுவார்கள் என்றல்லவா கூறி அவனை ஏற்றுக்கொண்டு மீண்டும் மீண்டும் எத்தனை தடவையும் வரவேற்று அவனை வாழ வைக்கிறது. ஆனுல் பெண்களையோ ஒரே ஒரு தடவைக்கு மேல் ஒதுக்கித் தள்ளி விடுகிறது. இந்தப் பாழ்பட்ட சமூகத்திலிருந்து நான் தப்புவதற்கு வழி......?"

"கனகம் உன்னைத்தப்ப வைக்க வழி தெரியாமலா இதில் ஈடுபட்டேன்."

"எப்படி அத்தான் என்னைத் தப்ப வைக்கப் போகிறீர்கள்? கல்யாணம் செய்தா?"

"என்ன!... கல்யாணமா? யாருக்கு? நான் படிக்கிறேன். நீயும் படிக்கிருய். எப்படிக் கல்யாணம் செய்வது?"

"ஏன்?... கல்யாணம் செய்யக் கூடாதா?"

"கல்யாணம் செய்தால் தொடர்ந்து படிக்க முடியுமா? தொடர்ந்து படிக்காவிட்டால் உத்தியோகம் எடுக்க முடியுமா? உத்தியோகமாகும்வரை கல்யாணத்தைப் பற்றிப் பேச்செடுக்காதே."

"அத்தான்! என்னத்தான் சொல்லுகிறீர்கள்? இதுக்காகத் தான் காலம் வரும்போது கல்யாணம் செய்வோம் என்று சொன்னேன். என் சொல்லைக் கேளாமல் 'பெண் புத்தி பின்புத்தி' என்று சொல்லிவிட்டு..."

"இதனுலென்ன குடியா முழுகிப் போய்விடும். இதையிட்டு நீ ஏன் கவலைப்படுகிருய்?"

"அத்தான் கற்பிலே வழுக்கி விழுந்த நான் கவலைப் படாமல் என்ன செய்ய முடியும்?"

"நான் சொல்வதைக் கேட்கப் போகிருயா...? இல்லையா...?"

"நீங்கள் சொல்வதை எப்போதாவது மறுத்திருக்கிறேனு?"

"கனகம்! அன்று எனக்கிருந்த தாபத்தைத் தீர்ப்பதற்காக என்னென்னவோ எல்லாம் சொல்லி அப்படி நடந்துகொண்டேனே ஒழிய இப்படி நேருமென்று நான் கனவிலும் கருதவில்லை."

"அத்தான்! சொல்வதை மறைத்துக்கொண்டு ஏதேதோ அலட்டுகிறீர்கள்."

"கனகம் நீ தாயானதையும் நான் தகப்பனானதையும் உன் பெற்றோரும் என் பெற்றோரும் அறிந்தால் என்ன நடக்கும் தெரியுமா?"

"என்ன நடக்கும்?"

"எங்கள் இருவரது சந்திப்பையும் நிறுத்திவிடு வார்கள். திருமணமும் தடைப்பட்டு விடும். திருமணம் செய்து சிறப்பாக இருக்கவேண்டுமானால் நான் சொல் வது போல் நடக்கவேண்டும்."

"அதைத்தான் மறைக்காமல் என்னிடம் சொல் லுங்களேன்?"

"கனகம் உன் வயிற்றிலே வளர்ந்துவரும் சிசுவை அழிக்கவேண்டும்."

"ஆ...! ஐயோ! என்ன கொடுமை! என் வயிற் றிலே வளர்ந்து வரும் கருவை அழிக்கச் சொல் கிறீர்களா?"

"ஆம்!"

"அத்தான்! பிள்ளை பெறுவதற்குக் கொடுத்து வைக்க வேண்டும். எல்லோருக்கும் பிள்ளைச் செல்வம் சுலபமாகக் கிடைக்காதத்தான். ஒரு பிள்ளையாகுதல் பெற்று 'மலடி' என்ற பெயரை மாற்றுவதற்காக எத் தனை எத்தனை பெண்களெல்லாம் நேர்த்திக்கடன் செய்கிறார்கள் தெரியுமா? பிள்ளை இல்லாததால் எத்தனை பேர் மறுமணம் செய்திருக்கிறார்கள் தெரியுமா? அப் படி இருக்கக் கிடைத்த செல்வத்தை அழிக்கச் சொல் வதற்கு உங்கள் மனம் எப்படித்தான் இசைந்தது?"

"கனகம் எப்படியும் அழித்துத்தான் ஆகவேண்டும்."

"அத்தான் கருவை அழிக்கச் சொல்வதிலும் பார்க்க என் உயிரை மாய்க்கச் சொல்லுங்கள் செய்கிறேன்."

"கனகம்! கருவை அழித்து விட்டால் அன்றுபோல் என்றுமே நாம் இருவரும் இன்பத்தை அனுபவிக்கலாம்."

"இன்பத்தை அனுபவிப்பதற்காகக் கருவை அழிப்பதா? நான் இறந்தாலும் கருவை அழிக்கமாட்டேன். என் வயிற்றிலே வளர்ந்துவரும் இரண்டு மாதக் கரு உயிர் உள்ளது. அந்த உயிர்க்கொலையை நான் ஒரு நாளும் செய்யேன்."

"எது உயிர்க் கொலை?"

"சிசுக்கருவை அழிப்பதுதான்."

"கனகம்! கல்லூரிக் காதலர்களுக்காகத்தானே கர்ப்பத்தடை மருந்தைக் கண்டு பிடித்திருக்கிருர்கள். கர்ப்பத்தடை மருந்து இல்லாவிட்டால் வழுக்கி விழுந்த மாணவிகள் எல்லாம் வளமான வாழ்க்கை நடத்த முடிந்திருக்குமா? கர்ப்பத்தடை மருந்திஞற்தானே தப்பித்துச் செல்கின்றனர்."

"கற்பைத் தூசாக மதிப்பவர்கள்தான் கர்ப்பத் தடையை மேற்கொண்டு வேறு கணவரைத் தெரிந்தெடுக்கின்றனர். எல்லோரும் கற்பைத் தூசாக மதிப்பவர்கள் என்று நினைக்காதீர்கள். நான் கற்பைக் காப்பவள்......"

"கடைசியாக உன் முடிவு?"

"என் முடிவு என்ன, பிள்ளையைப் பெற்று வளர்ப்பதுதான்."

"கனகம்! பிள்ளையைப் பெற்று வளர்க்கத்தான் போகிருயா?"

"என் உயிர் இருக்கும்வரை பிள்ளையைப் பெற்று வளர்க்கத்தான் போகிறேன்".

"ஆ! இவ்வளவு பிடிவாதமா?"

"................."

"அப்படியானுல் நீயே உன் பாதையை வகுத்துக் கொள்."

"நீயே என் உயிர். நீயில்லாமல் நான் உயிருடன் இருக்க மாட்டேன் என்று கூறியதெல்லாம்......"

"என்னிடத்திலே மூண்ட உணர்ச்சி வேகத்தைத் தீர்ப்பதற்கென்று வைத்துக்கொள். இனிமேல் என் கண் முன்னே நில்லாதே போ......." குமார் இவ்வாறு பேசியபோது அவனைப் பார்த்த கனகம் குமாரின் கண்கள் இரத்தம் போல் சிவந்து தன்னைச் சுட்டெரிப்பதை உணர்ந்தாள்.

"அத்தான்! என்னைக் கல்யாணம் செய்ய மாட்டீர்களா?"

"என் சொல்லை மீறினுல் கல்யாணம் செய்ய மாட்டேன்."

"உண்மையாகச் சொல்கிறீர்களா?" என்று கேட்ட போது அவளது கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்கள் நிலத்தில் விழுந்து சிதறின.

"ஆம்! உண்மையாகத்தான் சொல்கிறேன்".

"அப்படியானுல் நான் தனிமையாகத்தான் வாழ வேண்டுமா?"

"தனிமையாக வாழ்ந்தாலென்ன, செத்துத் தொலைந்தாலென்ன, இனிமேல் என் கண் முன்னே வராதே" என்று ஆத்திரத்துடன் கூறிவிட்டு நகர்ந்தான் குமார்.

ஆண்கள் மிகவும் பொல்லாதவர்கள். ஆசையைக் காட்டி மோசம் செய்பவர்கள். ஆசையைத் தீர்ப்பதற்காக அன்பே, ஆரமுதே, கரும்பே, கற்கண்டே, தேனே, திரவியமே ...... என்றெல்லாம் அழைப்பார்கள்.

ஆசை தீர்ந்ததும் பேயே, பிசாசே என்று ஏசுவார்கள். இப்படியான ஆண்களுடன் பழகும்போது பெண்கள் கவனமாகப் பழகவேண்டும்" என்று தனக்குள்ளே நினைத்துக் குமார் போன திசையை நோக்கி நடந்தாள் கனகம். அவள் கால்கள் நடக்க மறுத்தன. கண்கள் தாரை தாரையாகக் கண்ணீர் வடித்தன. தள்ளாடித் தள்ளாடிக் கல்லூரியை அடைந்தாள்.

இருவரது காதலும் முறிந்து இரண்டு நாட்களின் பின் கல்லூரியின் தவணை விடுமுறை விடப்பட்டது. ஒரு தவணைக்கும் இல்லாதது போல் இந்தத் தவணை லீவுக்கு மாத்திரம் எல்லாப் புத்தகங்களையும் பெட்டி படுக்கைகளையும் எடுத்துக்கொண்டு தன் சொந்த ஊருக்குப் புறப்பட்டாள். புறப்படும்போது—

"என்னடி கனகம்! இந்த முறை மாத்திரம் எல்லாச் சாமான்களையும் கொண்டு போகிறுய். ஏதாவது கல்யாணப் பேச்சுக்கீச்சு நடக்குதோ?" என்று கேலி செய்தாள் சிநேகிதிகளுள் ஒருத்தியான ராஜேஸ்.

"போடி ராஜேஸ்! உனக்கு எந்த நேரமும் கேலிதான்."

"என்னடி கனகம்! ஒவ்வொரு தவணையும் வந்து வழியனுப்புகிற உன்ரை அவரைக் காணயில்லை. இரண்டு பேருக்கும் ஏதாவது கசந்து போச்சோ?"

"சரி சரி, 'பஸ்' வந்துவிட்டுது. எல்லாம் பிற்பாடு பேசுவோம். போய் வருகிறேன். வணக்கம்."

"வணக்கம்."

ஃ ஃ ஃ ஃ

கந்தையா அந்த ஊரிலே படித்தவர். கட்டட வேலை செய்பவர். வயதிலும் முதியவர். அந்த ஊரிலே தாடி வைத்திருப்பவர் என்றால் அவர்தான். இதனால் அவரை

எந்தப் பையன்கள் கண்டாலும் 'தாடியப்பா' என்று தான் அழைப்பார்கள். அவர் பையன்களைக் கண்டால் சும்மா விடமாட்டார். பையன்களைப் பிடித்து நுள்ளு நுள்ளென்று நுள்ளிவிட்டுத்தான் போவார். இதனல் அவரை 'நுள்ளித்தின்னி' அல்லது 'நுள்ளியப்பா' என் றும் கேலியாகக் கூப்பிடுவார்கள்.

அந்த ஊரிலே 'பகிடி'க்காரன் என்ருல் அவர்தான். அவர் வேலைக்குப் போய்விட்டு வீடு வரும்பொழுது அவரைக் கேலி செய்வதற்குப் பையன்கள் எல்லாம் சந்திவழியே நிற்பார்கள். அவர் வருவதை அவரது கிழட்டுச் சயிக்கிளின் மணிச் சத்தம் அப்படியே காட்டி விடும். ருங்!......ருங்......!! என்று அவரது கறள் பிடித்த மணிச் சத்தம் கேட்டதும் 'தாடியப்பா வாருர்', 'தாடி யப்பா வாருர்' என்றும், 'நுள்ளித்தின்னி வாருர்' 'நுள் ளித்தின்னி வாருர்' என்றும் சொல்லிக் கேலி செய்து விட்டு ஓடுவதில் அவர்களுக்கு அலாதிப்பிரியம்.

பையன்கள் கேலி செய்துவிட்டு ஓடுவதைக் கண்ட தும் தன்னுடைய கிழட்டுச் சைக்கிளை நிறுத்திவிட்டுப் பையன்களைக் கலைத்துக்கொண்டு ஓடாவிட்டால் அவ ருக்கு நிம்மதி இருக்காது. இது அந்த ஊர் வைரவ கோயிலடியில் தினமும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சி.

பையன்களைக் கலைத்துக்கொண்டு திரிந்த களைப் புடன் வீடு வந்து சேர்ந்தார் கந்தையா.

"பிள்ளை! என்ன இண்டைக்கு ஒரு மாதிரி இருக்கிருய்?"

"ஒன்றுமில்லை அப்பா!"

"என்ன ஒன்றுமில்லை என்கிருய். நானும்தான் கொஞ்ச நாளாக உன்னைப் பாத்துக்கொண்டு வாறன். உண்மையைச் சொல்லு என்ன நடந்ததென்று"

"................."

"எனக்குத் தெரியும் என்ன நடந்ததென்று. ஊரவர்கள் அறிந்தால்......... சீச்சீ! எடி மானங்கெட்டவளே! உன்னை ஏமாற்றியவன் யார் எண்டு சொல்லடி. அவனைப் பிடித்து உனக்குக் கட்டி வைக்கிறன். இல்லாவிட்டால் கிடாய் வெட்டின மாதிரி வெட்டிச் சரிச்சு விடுகிறன்" — ஆக்திரம் கனலாகக் கக்க உறுமினார் கந்தையா.

கந்தையா மிகவும் நல்லவர். ஆனால் கோபம் வந்தால்......... ஒருவராலுமே அடக்க முடியாது. அவருக்குச் சொல்லிவிட்டால் உடனே கல்லூரிக்குப் போய்க் கொலை செய்துவிடுவார் என்று ஏங்கிய கனகம் சொல்வதற்குத் தயங்கினாள்.

"சொல்லடி மானங்கெட்டவளே.........! இல்லாவிட்டால் என்னைப் பிணமாகத்தான் காண்பாய்" என்று கூறிவிட்டு அங்கு நிற்காமலே ஓடினார்.

கந்தையா ஒருநாளும் இல்லாத மாதிரி வேகமாகச் சைக்கிளிலே ஓடுவதைக் கண்ட சிறுவர் வழக்கம் போலக் கூப்பாடு போட்டுப் பரிகாசம் செய்தனர்.

ஃ ஃ ஃ ஃ

"எடியே மச்சாள்! என்னடி இண்டைக்கு ஒருநாளுமில்லாத மாதிரிச் சனமெல்லாம் புளியடியிலை நிக்குதுகள்"

"கோதாரியிலை போன கதையை உனக்குத் தெரியாதே?"

"என்னடியாத்தை? என்னெண்டு சொல்லேன்ரி"

"எங்கண்டை கந்தையா வெல்லோ புளியிலை தூங்குது"

"என்ன?...... கழுத்திலை கயிறு போட்டுத் தற்கொலை செய்து போட்டாரே?"

"ஓமடியாத்தை உனக்கு விளக்கமாகச் சொன்னுத் தான் விளங்கும்" என்ருள் தையல்முத்து.

"ஏனும் செத்தவர்?"

"மேளோடை ஏதோ சண்டையாம்".

"அந்தப் பெட்டை நல்ல குணமான பெட்டை...."

"தாலியைக்கட்டு, உனக்கிந்தப் புதினம் இன்னும் தெரியாதோ? அதுதானே இப்ப ஊரெல்லாம் கதையாக் கிடக்குது".

"உண்ணுணேயடி மச்சாள் எனக்குந்தக் கதை ஒண்டும் தெரியாது".

"கந்தையற்றை மேள் பள்ளிக்கூடத்திலை இருந்து வாறபோது வயித்தில் சிசுகர்ப்பமாம்".

"என்னடியாத்தை சொல்ருய். அவர் கந்தையற்றை பெட்டை நல்ல தங்கமான பெட்டையெல்லே. அது எங்கேயோ கட்டுக்கதையாக இருக்க வேணும்" என்ருள் நாகமுத்து.

"சும்மா போணையாத்தை. அவன் சிற்றம்பலத் தின்ரை பெட்டையும் உப்பிடியெல்லோ போய்ப் படிச்சு விட்டு வயித்திலை பிள்ளையோடை வந்தவள். அவள் ஏதோ குணத்திலை குறைஞ்சவளே?"

"ஓமெண்ணுது, படிக்கவெண்டு போருளவை. பிறகு பிள்ளையும் தாயுமாய் வாருளவை. இவளவைக்கு என்னத்துக்குப் படிப்பு?"

"ஏன்? ஒருத்தியும் படிச்சுப் பட்டம் பெற யில்லையோ? சில சனியன்கள்தான் பெடியளுந்தை பேச்சிலை மயங்கி வாழ்க்கையிலை தடக்கி விழுந்து

விடுகுதுகள். இதனாலே மற்றப் பெட்டையளுக்கும் மானக்கேடென்று நினைத்துப் பாத்தாத்தானே".

"காவாலிப் பெடியளைப் பள்ளிக்கூடங்களிலை சேர்க்கிறதாலை வாற பிழைதான் இதெல்லாம்".

"ஏன் பெடியளிலை குறை சொல்லுவான். இவளவைக்கு என்ன எண்ணம். அவங்கள் கேட்டாப் போலை இவளவையும் எடுபட்டுவிடுகிறதோ? அவங்கள் தான் சேறு கண்ட இடத்திலை உழக்கிப்போட்டுத் தண்ணி கண்ட இடத்திலை கழுவுவாங்கள். இவளவையும் அப்பிடி இருக்க முடியுமே?"

"ஓமடியாத்தை நீ சொல்றதும் சரிதான். ஏன் அவையிவையுந்தை கதை எங்களுக்கு. வா நாங்கள் போவம்".

ஃ ஃ ஃ ஃ

தகப்பன் இறந்ததும் கனகமும் இறந்திருப்பாள். ஆனால், தான் தன் காதலனுக்குச் சொல்லியதுபோல் தன் பிள்ளையைப் பெற்று வளர்த்து, தன் மானத்தைக் காப்பாற்ற வேண்டுமென்பதால் இறக்கவில்லை.

நாட்கள் மாதங்களாகி, மாதங்கள் ஒன்பது முடிந்ததும் கனகம் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தை தகப்பனைப் போல மிக அழகாக இருந்தது. அக்குழந்தையின் அழகைக் கண்டு துக்கத்தில் ஆழ்ந்திருந்த கனகம் சந்தோஷமடைந்தாள்.

"டக்......டக்......" என்று கதவில் தட்டிவிட்டு அறையின் உள்ளே நுழைந்த நர்ஸ் "இந்தப் பிள்ளைக்கு என்ன பெயர் வைக்கிறது?" என்றாள்.

"பாலா என்று வையுங்கள்".

"தகப்பன் பெயர் என்ன?"

"தகப்பன் பெயர் குமார்"

"தாய் பெயர்......?"

"கனகம்"

"தகப்பனின் உத்தியோகம் என்ன?" என்று அந்த நர்ஸ்கேட்டதும் அவளது தக்காளிப்பழம் போன்ற சிவந்த கன்னங்கள் கறுத்துவிட்டன. என்ன உத்தியோகம் என்று சொல்லலாம் எனத் தனக்குள்ளே யோசித்தாள்.

"என்ன யோசிக்கிறீர்கள்? உண்மையான உத்தி யோகத்தைச் சொல்லுங்கள்?"

"உத்தியோகம் ஒன்றுமில்லை" என்று சொல்லும் போது அவளது குரல் கரகரத்தது. கண்கள் கண்ணீ ரைக் கொட்டின.

"ஏன்? உத்தியோகம் இல்லையெண்டு சொல்லு றியள். உத்தியோகத்தை விட்டிட்டு வந்துவிட்டாரோ?"

எப்பொழுது இவளிடமிருந்து தப்பலாமென்று நினைத்துக் கொண்டிருந்த கனகத்தை அவளின் அடுக் கடுக்கான கேள்விகள் ஊசலாட வைத்தன. இருந்தும் கேள்விகளுக்குப் பதில் சொல்லாவிட்டால் வித்தியாச மாக நினைப்பாளே என்று மனத்துக்குள்ளே நினைத்த படி "ஆம் நர்ஸ். உத்தியோகத்தை விட்டிட்டு வந்து விட்டார்" என்றுள்.

"கனகம்! நான் கேட்டதையிட்டுக் குறை நினைக்கா தீர்கள். இது எங்கள் கடமைகளுள் ஒன்று. எத் தனையோ பெண்கள் எல்லாம் இங்கு வந்து பிள்ளையைப் பெறுகிருர்கள். தகப்பன் பெயர் என்ன என்றுல் விழித்துவிட்டுத் தகப்பன் இல்லையென்று சொல்கிருர்கள். தகப்பன் பெயர் தெரியாமல் பிறக்கும் குழந்தைகள் இக்காலத்தில் ஏராளம்" என்றுள் நர்ஸ்.

"நர்ஸ்! இன்னும் எத்தனை நாட்களால் வீட்டுக்குப் போகலாம்"

"தாய் தகப்பன் இல்லாத நீங்கள் ஏன் வீட்டுக்குப் போக அவசரப்படுகிறீர்கள்? உடம்பை நன்ருகத் திருத்திக்கொண்டு இன்னும் இரண்டு மூன்று நாட்கள் போங்களேன்".

"நர்ஸ்! நீங்கள் செய்த உதவிகளுக்கு நான் கடமைப்பட்டவள்".

"கனகம்! நீங்கள் எதைக் கருதிச் சொல்கிறீர்கள்? நாங்கள் இங்கே இருப்பது நோயாளர்களுக்குத் தொண்டு செய்வதற்குத்தான் - நோயாளர் வருத்தப் படுவதைக் கவனிக்காது கண்ட கண்ட கதைகளை யெல்லாம் கதைத்துக்கொண்டு இருப்பதற்கல்ல. நோயாளருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுப்பது தான் எங்கள் தொழில்".

"நர்ஸ் எல்லோருமே உங்களைப்போல் இருந்துவிட்டால்......... எந்த நோயாளருக்குமே கஷ்டமிருக்காது".

"சரி கனகம், எனக்கு நேரமாச்சு. பிறகு வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே டொக்....டொக்.... என்று 'பூட்ஸ்' சத்தம் ஒலிக்க நகர்ந்தாள் நர்ஸ்.

## 3

மரத்துக்குக் கீழே இருந்து சமைக்கும் கன்னிகளையும் கனவானையும் கோகிலம் காட்டியதும் கனகத்தின் கடந்தகால நினைவுகள் சக்கரம் சுழல்வதுபோல் சுழலத் தொடங்கின. அந்த நினைவுகளில் கனகம் மெய்மறந்திருந்தாள். அப்போது.........

"கனகம்! என்ன ஒரேயடியாக எதையோ யோசித்துக்கொண்டிருக்கிருய்" என்று அவள் முன்னே வந்து நின்ற குமார் கேட்டான். கேட்கும்போது அவனது குரல் கரகரத்தது.

கடந்தகால நினைவுச் சக்கரத்தை நிறுத்திவிட்டுச் சுய நினைவுக்கு வந்த கனகம் "அத்தான்! நீங்களா...?" என்று அவன் காலில் வீழ்ந்தாள்.

"கனகம்! என்னை மன்னிப்பாயா?"

"யார் யாரை அத்தான் மன்னிப்பது? நீங்கள் என்னை மன்னிப்பதா? நான் உங்களை மன்னிப்பதா?" என்றவள் "இதோ உங்கள் குழந்தை" என்று அருகில் நின்ற பாலாவைக் காட்டினுள், ஆனந்தத்துடன்.

குமார் பாலாவைத் தூக்கி "என்ரை ராசா, எங்களைச் சேர்க்க வந்த கண்ணு" என்று சொல்லிச் சொல்லி முத்தமிடுவதைப் பார்த்துக்கொண்டு அருகில் நின்ற கோகிலத்தின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன.

20-9-1964

# ஆத்திரக்காரனுக்கு...

பத்மநாதன் மாஸ்ரர் பாடசாலையில் இருந்து மத்தியானச் சாப்பாட்டுக்காக வீட்டுக்கு வந்தார். அவர் வீட்டுக்கு வந்ததும் வராததுமாகத் தனது நாசனலுக்குள்ளே இருந்த காசைப்பற்றி மாலினியோடு கதைக்கத் தொடங்கினர்.

"மாலினி! என்னுடைய நாசனலுக்குள்ளே இருந்த காசு இரண்டு ரூபாவைக் காணவில்லை. நீங்கள் எடுத்தனீங்களா?"

"நான் எடுக்கவில்லை."

"உண்மையைச் சொல்லுங்க"

"சத்தியமாக நான் எடுக்கவில்லை."

"காலையிலே யாராவது இங்கு வந்தார்களா?"

"இல்லையே".

"ஒருவரும் வரவில்லையென்றல் வேறு யார் எடுத்தது?"

"எனக்குத் தெரியுமே?"

"மாலினி! ஏன் பொய் சொல்லுகிருய்? உன்னுடைய தம்பிக்கு நீதான் எடுத்துக் கொடுத்திருப்பாய்." என்று ஆத்திரத்தோடு கூறினர் பத்மநாதன் மாஸ்ரர்.

"என்ன! என்னுடைய தம்பிக்கு நான் எடுத்துக் கொடுத்தேனு? யார் சொன்னது?"

"மாலினி! ஏன் எனக்கு மற்றவர்கள் சொல்ல வேண்டும்?"

"அத்தான்! என்னிடத்திலே உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கையில்லையா?"

"ஒரு காலத்தில் அது இருந்தது. இப்பொழுது....'

"இப்பொழுது...?"

"நீ கள்ளியாக மாறிவிட்டாய்" என்று பத்மநாதன் மாஸ்ரர் கூறியது மாலினிக்கு உயிரையே எடுத்து விடுவது போல இருந்தது. பத்மநாதன் மாஸ்ரர் மாலினியை 'நீ' என்று கதைக்கத் தொடங்கியது இது தான் முதல் முறை.

"என்ன! நான் கள்ளியாக மாறிவிட்டேனு? நான் களவெடுத்துத்தானு உங்களுக்குச் சாப்பாடு போடுகிறேன்?"

"நீ களவெடுத்து எனக்குச் சாப்பாடு போடவில்லை. உன் பெற்ருேருக்குத்தான் சாப்பாடு போடுகிருய்."

"ஐயோ! கடவுளே! நீதான் இதைக் கேட்க வேண்டும்."

"என்னடி களவெடுத்துப் போட்டுக் கள்ள நேர்த் திக்கடன் போடுகிருய்?" என்றதும் மாலினிக்கு ஆத் திரம் வந்து விட்டது. மாலினி இதுவரை பத்மநாதன் மாஸ்ரரோடு எதிர்த்துக் கதைத்தது கிடைக்காது. பத்ம நாதன் மாஸ்ரர் இன்று அவளைத் தாறுமாருக ஏசியதால் அவளும் எதிர்த்துக் கதைக்கத் தொடங்கிஞள். பொறு மையும் ஒரு அளவுக்கல்லவா இருக்கும். அளவுக்கு மிஞ்சிஞல்.........

"அத்தான்! 'எடி பிடி' என்று மாத்திரம் பேசாதீர்கள். என்னுடைய தகப்பனர் என்னை நிலத்திலே விடாமல் வளர்த்தவர். என்ரை காலம் எனக்கு இப்படி வந்து நேர்ந்து விட்டது."

"எடியெடியே, நீ வளர்ந்த வளர்ப்பு எனக்குத் தெரியுமடி."

"அந்தக் கோதாரிவருவான் உன்னிட்டைத் தள்ளி விடாவிட்டால்......" – மாலினியும் ஆத்திரத்துடன் கதைக்கத் தொடங்கிவிட்டாள்.

"என்னிட்டைத் தள்ளாவிட்டால் நீ இப்ப மகாராணியாகவெல்லே இருப்பாய்..."

"ஓ! அப்பிடித்தான் இருப்பன்."

"என்னடி வாய்க்கு வாய் காட்டுகிறுய்."

"ஓ! இனி வாய்க்கு வாய்தான் காட்டுவன்."

"எங்கை காட்டடி பாப்பம்" என்று சொல்லிக் காலாலும் கையாலும் மாறி மாறி அடித்தார் பத்மநாதன் மாஸ்ரர்.

பத்மநாதன் மாஸ்ரர் ஒரு காலமும் மாலினிக்கு அடித்தது இல்லை. இன்று மாத்திரம் ஆத்திரத்தால் அடித்து விட்டார்.

இதற்கு முன்னெல்லாம் நாசனலுக்குள்ளே காசு வைத்து விட்டுப் போனல் மாலினி எடுப்பது வழக்கமாகவே இருந்தது. மாலினி காசு எடுத்தாலும் அவர் கேட்டவுடனே எடுத்ததாகச் சொல்லிவிடுவாள். அவரும் அவள் தேவைக்குத் தானே எடுத்திருப்பாள் என்று நினைத்து ஒன்றும் கதைக்காமல் விட்டுவிடுவார். ஆனல், இன்று அவர் ஏசியதற்குக் காரணம் அவள் பொய் சொல்லி விட்டாள் என்பதும் கடையிலே சுருட்டு வாங்கி விட்டுக் காசு கொடுப்பதற்குக் காசை நாசனலுக்

குள்ளே பார்த்தபோது காசு இல்லாமல், அவர் கடைக் காரரிடம் வெட்கப்பட்டதும்தான் காரணம்.

எவராகுதல் எவரையேனும் கேட்காமல் சட்டைப் பையினுள்ளோ காசுப் பையினுள்ளோ இருந்து காசு எடுப்பது தவருகும். இப்படி எடுப்பதால் அவர்கள் போக்குவரவு செய்யும் நேரத்திலே எவ்வளவு கஷ்டப் படுகிருர்கள் என்பதை எவர்தான் அறியப்போகி ருர்கள்.........?

பத்மநாதன் மாஸ்ரர் மாலினிக்கு அடித்து விட்டுப் பாடசாலைக்குப் போகப் புறப்பட்டார். மாலினி அவர் அடித்ததையும் பொருட்படுத்தாமல் சாப்பிட்டுவிட்டுப் போகும்படி கேட்டாள். அவர் தனக்குச் சாப்பாடு தேவை யில்லை என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

உடனே மாலினி அவருக்கு முன்னே ஓடிச் சென்று,

"அத்தான்! சாப்பிட்டு விட்டுப் போங்கோ அத்தான். சாப்பிடாமல் போக நான் விடமாட்டேன்."

"எனக்குச் சாப்பாடு வேண்டாம். நீயே அந்தச் சாப்பாடு எல்லாவற்றையும் சாப்பிடு."

"அத்தான்! நீங்கள் காலையிலும் அதிகம் சாப்பிட வில்லை. இப்பொழுதும் சாப்பிடாவிட்டால் உடம்பு என் னத்துக்குக் கூடும்" என்று திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டே பத்மநாதன் மாஸ்ரரின் காலில் விழுந்து அழுதாள் மாலினி. பத்மநாதன் மாஸ்ரர் அவள் பிடித்த பிடியையும் உதறித் தள்ளிவிட்டு விறு விறு என நடந்து போனுர் பாடசாலைக்கு. அவருடைய நடையிலே ஆத் திரத்தின் கேவம் அப்படியே பிரதிபலித்துக் கொண் டிருந்தது.

பத்மநாதன் மாஸ்ரர் பாடசாலைக்குப் போனதும் மாலினியும் சாப்பிடாமல் பட்டினி கிடந்தாள்.

மாலினிக்குத் தன் கணவன் மீது மிகுந்த ஆசை. அவர் ஒரு நேரம் சாப்பிடாவிட்டால் அவளுக்கு உயிரே போய்விடுவது போலத்தான் இருக்கும். அவள் தன் கணவனைக் கண்கண்ட தெய்வமாகவே கருதி அவருடன் பண்போடு பழகினுள். கணவன் சாப்பிட்டாலும் சாப்பிடாவிட்டாலும் எங்களுக்கென்ன என்று நினைத்துக் கணவனுக்குத் தெரியாமலே சாப்பிட்டு 'மாடு மாதிரி' உடம்பை வளர்க்கும் மற்றைய பெண்களைப் போன்றவளல்ல மாலினி. மாலினி படித்தவள் - பண்புள்ளவள்.

பத்மநாதன் மாஸ்ரருக்கும் மாலினி மீது ஆசை தான். அவர், மாலினியை ஒரு நேரமாகுதல் சாப்பிடாமல் இருக்க விடமாட்டார். அவர் தான் சாப்பிடும் போது மாலினியையும் தன்னுடன் சேர்த்தே சாப்பிடுவார். கல்யாணம் செய்து இரண்டு வருடங்களாகியும் இரண்டுபேரும் ஒரே பாத்திரத்தில் ஒன்ருகவே சாப்பிடுகிருர்கள். என்ருல் அவர்களின் அன்பைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

ஆனுல், இன்று மாத்திரம் அந்த அன்பு எங்கே? இரண்டு ஆண்டுகளாக வைத்திருந்த அந்த அன்பை அவசர புத்தியால் வந்த ஆத்திரம் அழித்துவிட்டது.

அவசரபுத்தியும் ஆத்திரமும் எத்தனையோ கொடுமைகளையெல்லாம் எதிர்பாராத விதமாகச் செய்துவிடுகின்றன. இதனுலோ என்னவோ 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்று சொல்லிக்கொள்கிருர்கள். ஆத்திரத்தை அடக்க வேண்டும். அதை அடக்காதவனை 'மிருகம்' என்றே சொல்லலாம்.

பத்மநாதன் மாஸ்ரர் பாடசாலைக்குப் போனதும் அவரால் படிப்பிக்க முடியவில்லை. அவர் வீட்டுவேலை செய்து கொண்டுவராத மாணவர்களை எல்லாம் ஒரு நாளுமில்லாத மாதிரி அடித்து விட்டார். அவரின் முகம்

கறுத்திருப்பதைக் கண்ட மாணவர்கள் "இண்டைக்கு மாஸ்ரர் பெண்சாதியோடை சண்டையாக்கும்" என்று தங்களுக்குள்ளே கதைத்துக்கொண்டனர்.

ஆசிரியர்கள் வீட்டிலே எப்படியும் சண்டைபிடிக்கலாம். ஆனால், வீட்டுக் கோபத்தை மனதிலே வைத்து மாணவர்களுக்கு அடிப்பது — ஆசிரியத் தொழிலுக்கே அவமானமாகும்.

அவர் வீட்டு வேலைகளைச் செய்யும்படி மாணவர்களுக்குச் சொல்லிவிட்டுக் கதிரையில் அமர்ந்தார். அவருக்கு வீட்டு நினைவே முன்னுக்கு வந்தது. அவர் தான் செய்த செலவுகள் எல்லாவற்றையும் கூட்டிப் பார்த்தார். இருந்த காசும் செலவு செய்த காசும் சரியாகவே இருந்தது.

காசு களவு போகவில்லை என்பதைத் தெரிந்துகொண்டதும், தான் அவசரப்பட்டு அவளோடு நடந்துகொண்டவைகளைச் சிந்தித்துப் பார்த்தார். அவருக்கு வெட்கமாகவும் துக்கமாகவும் இருந்தது.

அவர், தான் தவறாக நடந்துகொண்டதால் தன் மனைவி சாப்பிடாமல் பட்டினி கிடக்கப் போகிறாளே என நினைத்துச் சொற்பநேர லீவுக்குக் கடிதம் எழுதினார்.

அப்போது —

"மாஸ்ரர்! 'பிறின்சிப்பல்' உங்களை ஒருக்கா வந்துவிட்டுப் போகட்டாம்" என்று ஒரு மாணவன் கூறியதும் பிறின்சிப்பலின் காரியாலயத்துக்குப் போனார் பத்மநாதன் மாஸ்ரர்.

"மாஸ்ரர் உங்களுக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது மாஸ்ரர்" என்று தந்தியைக் கொடுத்தார் 'பிறின்சிப்பல்.'

பத்மநாதன் மாஸ்ரர், தந்தியை வாங்கி வாசித்தார். அதில் - "உங்கள் மனைவியாருக்குச் சுகமில்லை. ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகிறோம். உடனே வரவும்" என்று இருந்தது. தந்தியை வாசித்ததும் அவரது கைகள் இரண்டும் நடுங்கின. சொற்பநேர லீவுக் கடிதத்தை அதிபரிடம் கொடுத்து விட்டு ஆஸ்பத்திரிக்குப் போனார்.

ஆஸ்பத்திரிக்குப் போனதும் டாக்ரரை விசாரித்தார். டாக்ரர் மாலினியின் பிள்ளை இறந்துவிட்டதாகச் சொன்னார்.

"டாக்ரர், எதற்காக டாக்ரர் பிள்ளை இறந்தது?" என்று பத்மநாதன் மாஸ்ரர் கவலையோடு கேட்டார்.

"மாஸ்ரர்! ஒன்பது மாதக் கர்ப்பவதிக்கு மாடு குத்தினால் சும்மா இருக்குமா?"

"என்ன டாக்ரர்! மாடு குத்தியதா?" ஆச்சரியத்தோடு கேட்டார் மாஸ்ரர்.

"ஆமாம் மாஸ்ரர், உங்கள் மனைவியார்தான் இன்று தனக்கு மாடு குத்திவிட்டதாகப் பொலிசுக்குச் சொன்னா. மாஸ்ரர், இனிமேலாகுதல் கர்ப்பவதியாக இருக்கும் போது கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். கர்ப்பவதியாக இருக்கும்போது சின்னஞ் சிறு குழந்தை தட்டினாலும் அது கெடுதியாகத்தான் முடியும்" என்றார் டாக்ரர்.

அப்பொழுதுதான் பத்மநாதன் மாஸ்ரருக்குத்தான் செய்த தப்பிதங்கள் எல்லாம் தெரிய வந்தது. அவசர புத்தியால் இல்லாத ஒன்றிற்காகத் தான் செய்த தவறினாலேயே தன்பிள்ளை இறந்து விட்டது என்று வருந்தினார். தான் பெற்ற பிள்ளை இறந்தும் தன்னைக்காப் பாற்றவே பொலிஸ் பகுதியினருக்கு மாலினி மாடு

குத்தியதாகச் சொல்லியிருக்கிருள் என்று நினைத்து அவள்து அன்பின் பெருமையைப் போற்றிஞர் பத்ம நாதன் மாஸ்ரர். பதிபக்திக்காகப் பிள்ளைப் பாசத்தையே மறந்து அவள் சொன்னதை நினைக்க நினைக்கப் பத்ம நாதன் மாஸ்ரருக்கு......... அவள் மேல் அன்பு மேலும் வளர்ந்தது. அவர் தான் தன்மனைவியோடு புகல் நடந்து கொண்டதை நினைத்துப் பார்த்தார்.

"மாஸ்ரர், என்ன மாஸ்ரர் ஏதோ யோசனையில் இருக்கிறீர்கள்? இறைவன் பிள்ளையைத் தருகிருன். பின்பு பறித்துக் கொண்டு போகின்ருன். இது இயற் கையின் நியதி. இதையிட்டு வருந்துவதில் அர்த்த மில்லை" என்ருர் டாக்ரர்.

"டாக்ரர், நான்தான் டாக்ரர் என் பிள்ளையைக் கொன்றேன். என்ஞல்தான் டாக்ரர் என் பிள்ளை இறந் தது" என்று மாஸ்ரர் சொல்லும் போது மாஸ்ரரின் கண்களில் இருந்து கண்ணீர் முத்துக்கள் நிலத்தில் விழுந்து சிதறித் தெறித்தன.

"என்ன! நீங்கள் கொன்றீர்களா? யார் சொன் னது?"

"டாக்ரர், நான்தான் டாக்ரர் கொன்றேன். என் பதற்கு இதோ விளக்கம் தருகிறேன்" என்று சொல்லி நடந்தவற்றைச் சொன்ஞர் பத்மநாதன் மாஸ்ரர்.

பத்மநாதன் மாஸ்ரர் நடந்தவற்றை எல்லாம் சொன் னதும் டாக்ரருக்கு மாலினி மாடு குத்தியதாகச் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. மாலினி எவ்வளவு பண்புள்ளவள். தன் கணவனைக் காப்பாற்ற வேண்டு மென்றும் தன் கணவனின் ஆத்திரச் செயலை மற்றவர் கள் அறிந்தால் தூற்றுவார்கள் என்றும் நினைத்து மாடு குத்தியதாகச் சொல்லிவிட்டாளே! "இதுவல்லவா

'பதிபக்தி'" என்று தனக்குள்ளே நினைத்துக் கொண்டு பத்மநாதன் மாஸ்ரருக்குப் புத்திமதி கூறத் தொடங்கினர் டாக்ரர் கனகராஜன்.

"மாஸ்ரர், நீங்கள் படித்தவர்கள். வருங்காலத்து அரசியல் ஞானிகளையும் பெரிய பெரிய விஞ்ஞானிகளையும் பண்டித வித்துவான்களையும் உற்பத்தியாக்கி, நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவுபவர்கள். நாட்டின் முன்னேற்றத்திற்கு முதற் காரணகர்த்தாவாக இருப்பவர்கள் ஆசிரியர்கள்தான். இதனாலேயே ஆசிரியர்களைக் குருவாகக் கருதுகிருர்கள். இத்தகைய பெருமை பெற்ற நீங்கள் ஒரு பெண்ணுக்கு அடிப்பதென்ருல் ...... அதுவும் கர்ப்பவதியான ஒரு பெண்ணுக்கு அடிப்பதென்ருல் உங்களை எப்படிக் கூறுவதென்றே தெரியவில்லை. நீங்கள் சுகாதாரம் நன்ருகப் படித்தவர்கள். சின்னஞ்சிறு குழந்தைகளுக்கெல்லாம் சுகாதாரம் படிப்பிப்பவர்கள். அத்தகைய நீங்களே மிருகத்தனமான கொடிய செயலைச் செய்தால் குழந்தைகள் என்ன செய்வார்கள்? உங்களைப் பின்பற்றியல்லவா? அவர்களும் நடப்பார்கள். அவர்களும் உங்களைப் பின்பற்றி நடந்தால் உலகம் என்னுவது? நீங்கள்தான் உங்கள் வாழ்க்கையிலே நல்லனவற்றையெல்லாம் செயல் மூலம் காட்டி, மாணவர்கள் பின்பற்றி நடக்க வழிகாட்டியாக இருக்கவேண்டும். மாஸ்ரர் நான் கூறியவற்றில் ஏதாவது பிழைகள் இருந்தால் என்னை மன்னித்து விடுங்கள் மாஸ்ரர்."

"டாக்ரர், நீங்கள் கூறியவை யாவும் உண்மைதான் டாக்ரர். நான்தான் டாக்ரர் அவசரப் பட்டு ஒரு நாளும் செய்யாத கேவலமான செயலைச் செய்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள் டாக்ரர்" என்ருர் பத்மநாதன் மாஸ்ரர்.

"மாஸ்ரர், நீங்கள் இன்றைக்கே உங்கள் மனைவியாரை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போகலாம்.

ஆனால் ஒன்று, இனிமேலாகுதல் மிருகத்தனமாக நடக்காது கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு 'டொக் டொக்' என்ற 'பூட்ஸ்' சத்தத்துடன் நகர்ந்தார் டாக்டர் கனகராஜன்.

டாக்ரர் போனதும் பத்மநாதன் மாஸ்ரர் மாலினி இருந்த அறைக்குப் போனார்.

''மாலினி! அவசர புத்தியால் மிருகத்தனமாக நடந்து கொண்ட என்னை மன்னித்து விடு மாலினி.''

''அத்தான்! யார் யாரை அத்தான் மன்னிப்பது? நீங்கள் ஆத்திரத்தோடு ஏசுகிறீர்களே என்று தெரிந்து கொண்டும் உங்களோடு எதிர்த்து வாய்க்கு வாய் காட்டிய என்னைத்தான் அத்தான் நீங்கள் முதலில் மன்னிக்க வேண்டும்'' என்று சொல்லிப் பத்மநாதன் மாஸ்ரரின் காலில் விழுந்தாள் மாலினி.

காலில் விழுந்த மாலினியை இரண்டு கைகளாலும் தூக்கி, அவளுக்கு ஆறுதல் மொழிகள் பல கூறி அவளைத் தேற்றிக் கொண்டு அரவணைத்தபடி வெளியே அழைத்துச் சென்றார் பத்மநாதன் மாஸ்ரர்.

9-5-1965

# உண்மை ஒளி

அமரன் காரியாலயத்திலிருந்து வீட்டுக்கு வரும் போது தன் மகள் வவியனுக்கு மிட்டாஸ் வாங்கி வருவது வழக்கம். அமரன் எப்பொழுதாவது மிட்டாஸ் வாங்கிவராவிட்டால் அன்று முழுவதும் வவியன் அழுதுகொண்டே இருப்பாள். சின்னஞ்சிறு பிள்ளை களுக்கு இப்படியானவற்றை வாங்கிக் கொடுக்கக் கூடாது. வாங்கிக் கொடுத்துப் பழக்கிவிட்டால் பின் னர் அதிலிருந்து தப்பவே முடியாது.

அமரனின் வருகையை எதிர்பார்த்துக் கொண் டிருந்தாள் வவியன். வவியன் வீட்டுப்படலையில் காத்துக்கொண்டு நிற்பதைத் தூரத்தில் இருந்துவந்த அமரன் கண்டு அவளின் கண்ணுக்கு எத்துப்படாமல் வீட்டுக்குள் போய்விட வேண்டுமென எண்ணினுன். எப் படி மறைந்து மறைந்து போனுலும் வவியனிடமிருந்து தப்ப முடியாதென்பது அமரனுக்கு நன்ருகத் தெரியும். அதனுல் நேராகவே வீட்டுப்படலையை நோக்கி நடந்தான்.

"டடீ! டடீ! மிட்டாஸ் கொண்டுவந்தனீங்களா டடீ?" என்று கூறிக்கொண்டே அமரனின் காலில் பிடித்துத் துள்ளினுள் வவியன்.

"இல்லை. வாங்கிக்கொண்டு வர மறந்து போனன். பிள்ளைக்கு நாளைக்கு வாங்கிக் கொண்டுவந்து தாரனே."

"இம்!......" கண்களை கசக்கிக்கொண்டு அழுதாள் வவியன்.

"என்ரை குட்டியல்லோ. பிள்ளைக்கு மிட்டாஸ் வாங்கிக்கொண்டு வராமல் வீட்டுக்கு வருவேனே?" என்று சொல்லி மகள் வவியனைத் தூக்கிக் கொஞ்சிக் கொண்டு போனன் அமரன்.

"வவியன்! இண்டைக்குப் பள்ளிக்கூடத்துக்குப் போனியா?"

"ஓம், போனனான்."

"பள்ளிக்கூடத்திலை என்ன படிச்சனி?"

"பள்ளியிலை என்ன படிக்கிறது? ஆனா, ஆவன்னாத் தான் படிக்கிறது. அதுதான் படிச்சனான்."

"ஆர் வவியன் படிச்சுக் கொடுத்தாங்கள்?"

"எங்கடை ரீச்சர்தான்."

"அவ உங்களுக்கு அடிக்கிறதில்லையோ?"

"ஊம்...... ஊம் எங்கண்டை ரீச்சர் சோக்கான ரீச்சர். எங்களுக்கு அடிக்கிறதேயில்லை. மணியண்ணை யின்ரை மாஸ்டர் எண்டால் மணியண்ணையவைக்கு மாடு மாதிரி வெளுவெளென்று வெளுக்கிறவர்."

"நீங்கள் பின்னைக் குழப்படி செய்யிறதில்லை யாக்கும்."

"குழப்படி செய்தாலும் எங்கடை ரீச்சர் அடிக்க மாட்டா" என்று வவியன் சொல்வதற்கும் வவியனின் தாய் பகவதி தேனீர் கொண்டு வருவதற்கும் சரியாக இருந்தது.

"அத்தான்! உங்களை ரீச்சர் நாளைக்கு வரச் சொல்லிச் சொன்னதாம்."

"ஆர் சொன்னது?"

"வவியன்தான் சொன்னது. நாளைக்கொருக்காப் போவிட்டு வாருங்கோவன்."

"நாளைக்கு எனக்கு நேரமில்லை. நீதான் போவிட்டு வா."

"சரி சரி. நேரமாச்சு சாப்பிடுங்கோ."

## 2

அடுத்த நாள் —

பகவதி வவியனைக் கூட்டிக்கொண்டு பாடசாலைக்குப் போனுள்.

"பகவதி! பாடசாலைக்குப் போனனீங்களா? ரீச்சர் என்ன சொன்ன?"

"ரீச்சர் என்னத்தைச் சொல்லுறது. உங்கண்டை மேளைப்பற்றித்தான் அடிச்சுப் புளுகிரு."

"என்னத்தைப் பற்றிப் புளுகினவ."

"படிப்பிலை வலு கெட்டிக்காரியாம். வீட்டிலை கவனமாகப் படிப்பிக்கட்டாம்."

"ரீச்சர் எப்பிடி? நல்ல குணமான மனுஷியோ?"

"ரீச்சர்மாரெண்டால் உப்பிடித்தான் இருக்க வேணும். எவ்வளவு அன்பாகப் பேசினு. அவவின்ரை பண்பைப் பற்றி வந்தவை எல்லாம்தானே புகழ்ந்து கொண்டு போகினம்."

"கலியாணம் செய்த மனுஷியோ?"

"இல்லை"

"அதுதான் பிள்ளைகளிலே கவனமெடுக்கிரு. கலியாணம் செய்த பிறகு பாரேன். புரியனைப் பற்றியும் பிள்ளையைப் பற்றியும்தான் பள்ளிக்கூடத்திலை கதைச்சுக்கொண்டு இருப்பினம்."

"சும்மா போங்கோ, எல்லா ரீச்சர்மாரும் வீட்டுக் கதைதானே கதைச்சுக்கொண்டு இருக்கிறவை. சில ரீச்சர்மார் கதைத்கிறதுக்காக எல்லா ரீச்சர்மாரிலேயும் பழிசுமத்துகிறதோ......? அந்த ரீச்சர் பாவம். கலியாணம் செய்யாமையெல்லோ சேவை செய்யுது."

"ஏதோ காதலிலே தோல்வியாக்கும். அதுதான்..."

"உதுகுமொரு கண்டறியாத கதைதான். உங்களுக்கு உந்தக் குறட்டைக் கதை விட்டுப் போகாது. நீங்கள் என்ன சொன்னாலும் எனக்கந்த ரீச்சரைப் பிடிச்சுப் போச்சு."

"பிடிச்சா என்ன செய்யப் போகிருய்?"

"தீபாவளிக்கு ஒரு சாரி வாங்கிக் கொடுக்கலாமெண்டு நினைக்கிறன்."

"அதுக்கென்ன, வவியனுடைய தீபாவளிப் பரிசாக வாங்கிக் கொடுப்பம்."

## 3

அமரன், வவியனுடைய தீபாவளிப் பரிசாகச் சாரி ஒன்றை வாங்கிக்கொண்டு பாடசாலைக்குப் போனன். அவன் பாடசாலைக்கு உள்ளே சென்றதும் பாடசாலை நடைபெறுகிறதோ இல்லையோ என்ற சந்தேகம் அவனுக்குத் தோன்றியது. ஊசி விழுந்தால் சத்தம் கேட்கும். அவ்வளவுக்கு அந்தப் பாடசாலை மாணவர்கள் அமைதியாக இருந்தனர்.

அமரன் ஒரு வழியாக வவியனின் வகுப்பைக் கண்டு பிடித்துக்கொண்டு வகுப்பு வாசலில் போய்

நிற்கிறுன். அமரா மேஜை மீது சாய்ந்து கொண்டு ஆற அமர மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

"ரீச்சர்! ரீச்சர்!! ஆரோ வந்து நிற்கினம் ரீச்சர்" என்று ஒரு மாணவி சொன்னதைக் கேட்டதும்......

"உள்ளே வாருங்கள்" என்று அமரா குரல் கொடுத்ததும் வகுப்புக்குள்ளே போனுன் அமரன்.

"என்ன நீங்களா?"

"யார் அமராவா?" ஆச்சரியத்துடன் கேட்டான் அமரன். அமரனின் குரல் கரகரத்தது. அமராவைக் கண்டதும் அமரனுக்குப் பழைய சம்பவங்கள் யாவும் ஒன்றன் பின் ஒன்ருக நினைவுக்கு வந்தன.

## 4

அமரன் பருத்தித்துறை ஆசிரிய கலாசாலையிலும் அமரா திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையிலும் ஆசிரியப் பயிற்சி பெற்றனர்.

அமரன் வெள்ளிக்கிழமைகள் தோறும் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்குப் போவது வழக்கம். அதே போல அமராவும் போய் வந்தாள். இவர்கள் இருவரும் மாத்திரம் போகவில்லை. பருத்தித்துறை ஆசிரிய கலாசாலையைச் சேர்ந்த இந்து மாணவர்களும் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையைச் சேர்ந்த இந்து மாணவிகளும் வெள்ளிக்கிழமைகளில் தவருது போய் வந்தனர்.

ஒருநாள் —

நல்லூர்க் கந்தசுவாமியார் கோவிலிலே நீக்குப் போக்கில்லாத அளவுக்கு அதிகப்படியான சனம். அந்தச் சன நெருக்கடியைப் பாராது அமரன் நிலத்தில் விழுந்து கும்பிட்டுக் கொண்டிருந்தான். அப்போது

சனநெருக்கத்தால் தள்ளுப்பட்டுக் கொண்டு வந்த அமரா அமரனின் காலில் மிதித்துவிட்டாள். உடனே அமரன் எழுந்துவிட்டான்.

''மன்னிக்கவும்'' மொட்டவிழ்ந்த முல்லை மலரிலிருந்து தேன் சொட்டுவதுபோல் கூறினுள் அமரா.

''பரவாயில்லை.''

அன்று தொட்டு அமரன் அமராவைக் கண்டதும் சிரிப்பான். அமராவும் அமரனைக் கண்டதும் சிரிப்பாள். இருவரும் ஒருவரை ஒருவர் காணும்போது சிரித்தனர். சிரிப்பு வளர்ந்துகொண்டே சென்றது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அமரனும் அமராவும் சந்தித்தனர். தொடர்ச்சியாகச் சந்தித்த சந்திப்புக் காதலாக மாறியது.

ஒருநாள் —

அமரா கும்பிட்டுக்கொண்டு நின்ருள். அமரனும் அவளுக்கு அருகில் நின்று கும்பிட்டான். அவளுடன் எப்படிக் கதைப்பதென்றே அவனுக்குத் தெரியவில்லை. தாஞகக் கதைத்தால் அவள் தன்னைக் குறைவாக நினைப்பாளே என்ற எண்ணம் அவனைக் கதைக்க விடாது தடுத்தது. அவளுக்கும் அப்படியே. இருவரும் ஒரு கருத்துடனேதான் பேசாமல் நின்றனர்.

ஆண்களின் மனம் அந்தரம் பிடித்தது என்பார்கள். அதேபோல அமரனும் அமராவுடன் கதைக்க அந்தரப் பட்டான். கதைத்தும் விட்டான்.

''உங்களோடே ஒன்று கதைக்கவேணும்; கதைக்கலாமோ?''

''ஓ தாராளமாகக் கதைக்கலாம்.''

''உங்கள் பெயர்?......''

''என் பெயர் அமரா. உங்கள் பெயர்......?''

"என் பெயர் அமரன். இருவரின் பெயர்களும் பொருத்தமாகவே இருக்கின்றன" சிரித்துக்கொண்டே சொன்னான் அமரன்.

அமராவின் மாம்பழக் கன்னங்கள் மகிழ்ச்சியால் சிவந்தன. அவளின் முகத்தில் புன்னகை தோன்றியது. காலின் பெருவிரல் நிலத்தைத் தோண்டியது. அமரா, அமரனை மயக்கும் அழகு மிகு எழிலரசியாகத் தோன்றினாள். இவற்றையெல்லாம் கடைக்கண்ணால் கவனித்துக் கொண்டு நின்ற அமரன், அமராவைப் பின் வீதிக்கு வரும்படி கேட்டான். அமராவும் அமரனின் அழைப்புக் கிணங்கப் பின் வீதியில் ஓங்கி வளர்ந்து நிழலைப் பரப்பி நிற்கும் ஆலமரத்தடிக்குச் சென்றாள்.

அமரனும் அமராவும் கோவிலின் பின் வீதியில் நிற்கும் ஆலமரத்தடியில் இருந்தனர். தங்களை மற்றைய மாணவர்கள் கவனிக்கிறார்களா என்பதையும் கவனிக்கத் தவறவில்லை.

"அமரா! நான் ஒன்று கேட்கவேண்டும்; கேட்கட்டுமா?"

"ஒன்றென்ன ஒன்பதும் கேளுங்கள்."

"நீங்கள் விரும்பினால் உங்களைக் கல்யாணம் செய்ய......"

"என்ன! என்னைக் கல்யாணம் செய்யப் போகிறீர்களா? உண்மையாகவா?"

"உண்மையாகத்தான் கேட்கிறேன். நீங்கள் விரும்பினால், கல்யாணம் செய்யத் தீர்மானித்துவிட்டேன்."

"உங்கள் தீர்மானம் மாறாதா? அது நிறைவேறுமா?"

"நீங்கள் எனக்கு உறுதியளித்தால் அது நிறைவேறும்."

"என்ன உறுதி?"

"என்ன கஷ்டம் ஏற்பட்டாலும் நான் உங்களைக் கல்யாணம் செய்வேன் என்று."

"ஓ! அதுவா? அலைகடல் வற்றினலும், மேகம் இடிந்து வீழ்ந்தாலும், கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதித்தாலும் நான் உங்களைக் கல்யாணம் செய்வேன். இது சத்தியம்" என்று அமரா, அமரனின் கையைப் பிடித்துச் சத்தியம் செய்தாள். அமரனும் அமராவின் கையைப் பிடித்து அன்புடன் அணைத்தான்.

காதல் வளர வளர அவர்களது சந்திப்பும் கூடிக் கொண்டே வந்தது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அமரனையும் அமராவையும் நல்லூர்க் கந்தசுவாமியார் கோவிலிலே காணலாம்.

நாட்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகி இரு வருடங்களை விழுங்கிக் கொண்டதும் அவர்கள் இருவரும் பயிற்சியை முடித்துக்கொண்டு அமரன் பதுளை மகா வித்தியாலயத்துக்கும் அமரா கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் சென்றனர்.

காதலர்கள் இருவரும் கண்ணுக்கெட்டாத தூரத் துக்கு மாறிப் போவதென்ருல் அவர்களுக்கு எப்படி இருக்கும்? கடைசியாக இருவரும் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலிலே சந்தித்தனர். என்ன கஷ்டம் ஏற்பட்டா லும் இருவரும் கல்யாணம் செய்வதெனச் சத்தியம் செய்தனர்.

அவர்கள் இருவரும் சத்தியம் செய்துவிட்டு ஒரு வரை ஒருவர் பார்த்தனர். இருவர் கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகியது. மற்றவர்கள் தங்களைக் கண்டு விடுவார்களே என்ற பயத்தினல் அமரன் அமராவின் கண்ணீரைத் துடைத்தான். அவ்வளவுதான்,

"என்னை மறந்துவிடாதீர்கள்; நான் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சேலைத்தலைப்பினுல் பெருகி வரும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே நின்றதும், நிற்காமல் விறு விறு என்று நடந்தாள் அமரா. அமரனும் தன் கண்களிலுள்ள கண்ணீரைத் துடைத்துக்கொண்டு நகர்ந்தான்.

## 5

இரண்டு ஆண்டுகளுக்குப் பின், அமரனுக்கும் அமராவுக்குமிடையே வளர்ந்துவரும் காதலைப்பற்றி அமரனின் பெற்ருேர் அறிந்து கொண்டனர். வெகு விரைவில் அமரனுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினர். ஆனல் அமரன் மறுத்துவிடுவானே என்ற பயமும் அவனது பெற்ருேருக்கு இல்லாமலில்லை.

"அமரன்! நீ இவ்வளவு வயது வந்தும் கல்யாணம் செய்யாமல் இருப்பதை நாங்கள் விரும்பவில்லை. உனக்குக் கல்யாணம்......"

"என்ன! எனக்கா கலியாணம் செய்யப் போகிறீர்கள்? ஏன் இவ்வளவு அவசரம்?"

"உன்ரை மாமியின்ரை பெட்டைக்கும் வயது வந்து விட்டுது. அதுதான்......"

"யாரை? மாமியினுடைய மகளையா?"

"ஓமப்பா அவள்தானே உன்ரை சொந்த மச்சாள்" என்ருர் தகப்பன்.

"எந்த மச்சாளாக இருந்தாலும் எனக்கிப்ப அவசரமில்லை" என்று தட்டிக் கழித்தான் அமரன். அமரன் எதற்காகத் தட்டிக்கழிக்கிருன் என்பது அமரனின் பெற்ருேருக்கும் மாமன் மாமிக்கும் பரிபூரண

மாகத் தெரியும். எப்படியும் அமரனின் மனத்தை மாற்றிவிட வேண்டுமென்பது அவர்களது திட்டம்.

ஃ ஃ ஃ ஃ

"அண்ணே! நான் சொல்வது போலச் செய்தால் நிச்சயமாக அமரனின் மனம் மாறும்" என்ருள் செல்லமுத்து.

"செல்லம்! நீ என்னத்தைச் சொல்லப் போகிருய்? எங்கே சொல்லன் பார்ப்போம்?"

"அமரன் காதலித்திருக்கும் பெட்டைக்குத் திரு மணம் நடைபெறுவதுபோல் திருமண அழைப்பிதழ் ஒன்று அடித்து அமரனுக்கு அனுப்பினுல் என்ன?"

"ஓமடி தங்கச்சி. நீ சொன்னதுபோலே செய்தால் நிச்சயமாக அமரனின் மனம் மாறும்."

திருமண அழைப்பிதழ் அச்சடிக்கப்பட்டது. அமரா அனுப்புவதுபோல் அமரனுக்குத் திருமண அழைப் பிதழ் அனுப்பப்பட்டது.

திருமண அழைப்பிதழைக் கண்டதும் அமரனின் கண்கள் குளமாயின. "மேகம் இடிந்து விழுந்தாலும் - அலைகடல் வற்றினுலும் - கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதித்தாலும் உங்களை மறவேன். இது சத் தியம்" என்று அமரா சத்தியம் செய்துகொடுத்த காட்சி அமரனின் நினைவுக்கு வந்தது. "சீ, அமரா ஒரு ஏமாற்றக்காரி. பெண்களை என்றுமே நம்பக் கூடாது" என்று அவன் வாய் முணுமுணுத்தது. அமரனின் மனமும் மாறிவிட்டது.

அமரனுக்கும் அவனது சொந்த மச்சாள் பகவதிக் கும் வெகு கோலாகலமாகத் திருமணம் நடைபெற்றது.

## 6

"அமரன்! என்ன ஒரேயடியாக எதையோ சிந்தித்துக்கொண்டு நிற்கிறீர்கள்? எதிர்பாராத விதமாக என்னைச் சந்தித்து விட்டீர்களென்ரு? அல்லது எனக்குச் செய்த துரோகத்தைப் பற்றியா? எதைப் பற்றிச் சிந்திக்கிறீர்கள்?"

"அமரா! நான் உனக்குத் துரோகம் செய்தேனு? யார் சொன்னது?"

"ஏன் மற்றவர்கள் சொல்லவேண்டும்? என்னை நம்புங்கள். என் உயிர் போனுலும் உங்களைக் கல்யாணம் செய்வேன் என்று நான் சத்தியம் செய்திருந்தும் என்னை விட்டுவிட்டு நீங்கள்........."

"அமரா! நீ நினைப்பது தவறு"

"ஏன்?"

"நீதானே உனக்குத் திருமணமென்று அழைப்பிதழ் அனுப்பினுய்"

"ஏன் பொய் சொல்கிறீர்கள்?"

"அமரா! நானுக உன்னை வெறுக்கவில்லை. உனக்குத் திருமணமென்று அச்சடித்த திருமண அழைப்பிதழ் ஒன்று எனது விலாசத்திற்கு வந்தது. அதில் அமரா—அகிலன் இருவருக்கும் திருமணம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதைக் கண்டதும் மிக்க வேதனைப்பட்ட நான், என் சொந்த மச்சாளைத் திருமணம் செய்து கொண்டேன். இது எனது தப்பா?"

"நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள்."

"அப்படியாயின் எனக்கு நீங்கள் திருமண அழைப் பிதழ் அனுப்பவில்லையா?"

"இல்லை"

"அப்படியானால் அதை அனுப்பியது யார்?"

"யார் அனுப்பியதென்று யாருக்குத் தெரியும். அப்படியானால் அந்தத் திருமண அழைப்பிதழைக் காட்ட முடியுமா?"

"ஓ!...... நீங்கள் தீபாவளிக்கு எங்கள் வீட்டுக்கு வாருங்கள். அதை நான் காட்டுகிறேன்."

அவள் கண்களில் மின்னிய உண்மையின் ஒளி யைப் பார்க்கவே கூசினான் அமரன்.

"சரி. அப்படியே செய்கிறேன்."

"இந்தாருங்கள், இது என் மகள் வவியனின் தீபா வளிப் பரிசு. இதை ஏற்றுக் கொள்ளுங்கள்."

"என்ன! வவியன் உங்களுடைய மகளா?" ஆச்சரி யத்துடன் கேட்டாள் அமரா.

"ஆம் அமரா" என்று சொல்லிப் பரிசைக் கொடுத்துவிட்டு வீட்டை நோக்கி நடந்தான் அமரன்.

1-11-1964

# தண்டனை

"அத்தான்! உங்களைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. எப்பொழுது வருவீர்கள்?"

"அத்தான்! உங்களுக்கு ஒரு மகன் பிறக்கப் போகிருன். திருமணமாகி ஐந்து மாதங்களாகின்றன. உங்களுக்கு என்னைப்பார்க்க ஆசை இல்லையா?"

"அத்தான்! நான் கடிதம் எழுதிக்கொண்டே இருக்கிறேன். நீங்களும் பதில் எழுதிக் கொண்டே இருக்கிறீர்கள். ஒரு முறையாவது என்னை வந்து பார்க்கக் கூடாதா? சண்டை தொடர்ந்து நடந்தால் லீவுதர மாட்டார்களா?"

"அத்தான்! உங்கள் திருமுகத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தாலே எனக்குப் பசிக்காது. இனிமேல் உங்கள் திருமுகத்தைப் பார்க்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்காதா?"

இவ்வாறெல்லாம் தனது மனைவி வசந்தி எழுதிய கடிதக் கட்டுகளை எடுத்து ஒவ்வொன்ருகத் திருப்பித் திருப்பி வாசித்துக்கொண்டிருந்தான் சொக்கன். எப்போது தன் மனைவியின் முன்னுல் போய்த் திடீரெனக் குதித்து அவளைத் திகைப்பில் ஆழ்த்தலாம் என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருந்த அவனது உள்ளத்தை "உங்களுக்கு ஒரு மகன் பிறக்கப்போகிருன்"

என்ற தடித்த எழுத்துச் சொற்கள் மேலும் உணர்ச்சியைத் தட்டி எழுப்பின. " அத்தான் ! இனிமேல் உங்கள் அன்பு முகத்தைப் பார்க்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்காதா ? " அவனை வாட்டி வதைத்துக் கொண்டிருந்த இச்சொற்கள்.

அப்போது, " உனது மனைவிக்குச் சுகமில்லை. மூளாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார் " என்ற தந்தி அவனது கைக்குக் கிடைத்தது. எல்லாவற்றையும் பொறுத்திருந்த அவனுக்குத் தன் மனைவி சுகவீனமாக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளாள் என்றதை மாத்திரம் பொறுக்கமுடியவில்லை. தந்தியை எடுத்துக் கொண்டு தன் தலைவனிடம் ஓடினான். தலைவனே லீவு கொடுக்க மறுத்துவிட்டான்.

" சேர் ! எனது மனைவிக்கு ' சீரியஸ் ' கட்டாயம் எனக்கு ' லீவு ' தரவேண்டும்."

" சமாதானம் ஏற்படும்வரை ஒருவருக்குமே ' லீவு ' தரமாட்டேன். ' கெட்டவுட் !' "

"சேர்!...... "

"பிளீஸ் கெட்டவுட்"

" சேர் ! என்னுடைய ஐந்து வருட ஒப்பந்தமும் இன்றுடன் முடிவடைகிறது. இனிமேல் நான் தொடர்ந்து வேலைசெய்ய விரும்பவில்லை. இன்றுடன் எனது பதவியைவிட்டு விலகுகிறேன்."

இராஜினமாக் கடிதத்தை எழுதிக்கொடுத்துவிட்டுப் பூஞ்சணம் பிடித்திருந்த தனது புதிய சூட்கேசையும் எடுத்துக் கொண்டு யாழ்தேவியில் புறப்பட்டான் சொக்கன். சரியாக இரண்டு மணிக்கு ' யாழ்ப்பாண ஸ்ரேச 'னில் யாழ்தேவி நின்றது.

யாழ்ப்பாண பஸ்ராண்டில் அடுக்கப்பட்டிருந்த பஸ்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்ருகப் பார்த்துவிட்டு, வட்டு — சித்தன்கேணி பஸ்ஸில் ஏறினன்.

பஸ் ஒருக்கால் உறுமிவிட்டு ஓடத்தொடங்கியது. கல்லுண்டாய் வீதியால் ஓடி அராலியூர் 'மொட்டைப் புளியடி'யை பஸ் அண்மியதும் "டாங்கு டுக்குடு... டாங்கு டுக்குடு" என்ற பறையோசை அவன் காதுக்கு இலேசாகக் கேட்டது. தனது மனேவியைக் கண்டு அவளுக்குத் தனது ஆசை முத்தங்களை அவளது மாம் பழக் கன்னங்களில் கொடுக்கவேண்டுமென்ற ஆவ லால் அவன் தனது ஊரான மொட்டைப் புளியடியில் இறங்கவில்லை. பஸ் மேலேபோய் வட்டுக்கோட்டைச் சந்தியில் நின்றது.

வட்டுக்கோட்டையிலும் கிறிஸ்தவர்கள் நிறைய இருக்கிருர்கள் என்பதை எடுத்துக் காட்டுவது யாழ்ப் பாணக் கல்லூரி. இக்கல்லூரிதான் யாழ்ப்பாணத்தில் முதன்முதல் ஆரம்பமானது. இலங்கையில் உள்ள தமி ழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர், ஆங்கிலேயர் அனைவரும் ஒன்று சேர்ந்து படிக்கும் ஒரே ஒரு உயர் தரக் கல்லூரி இதுதான். இக்கல்லூரியின் வானளாவ உயர்ந்த கட்டடங்கள் — கட்டடங்களுக்கருகே ஓங்கி வளர்ந்த அழகிய மரங்கள் — மரங்களுக்கு அடியிலே உல்லாசமாக உரையாடிக் கொண்டிருக்கும் மாணவச் சிருர் — அத்தனையும் மனத்தைக் கவரும் காட்சிகள். கல்லூரி மணி அடித்ததும் மாணவ மாணவியர் திரள் திரளாக ஓடிவந்து பஸ்ஸில் ஏறிக்கொண்டார்கள். சீறி விட்டு ஓடத்தொடங்கியது பஸ்.

வட்டுக்கோட்டையிலிருந்து சித்தன்கேணியை நோக்கி ஓடிக்கொண்டிருந்த பஸ் ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டு மாவடிக் கடையில் நின்றது. 'மா வடிக்கடை' என்ருல் எல்லோருக்கும் தெரியும். ஆனல், 'மூளாய்ச் சந்தி' என்ருல் அதிகமானவர்க ளுக்குத் தெரியாது. இப்பெயர் இன்று நேற்று வந்த தல்ல. பஸ் கொம்பனி ஆரம்பமான காலம் தொடக்கம் இப்பெயர் இருந்துகொண்டே வருகின்றது. இச்சந்தி

யில் மாமரத்துக்குக் கீழே ஒரு கடை இருப்பதால் தான் இப்பெயரை வைத்திருக்கிருர்கள். மாவடிக்கடை யில் பஸ் நின்றதும் சூட்கேசைத் தூக்கிக்கொண்டு இறங்கினுன் சொக்கன்.

சொக்கன் மாவடிக்கடையில் 'மூளாய் ரேட்' பஸ் ஸைப் பார்த்துக் கொண்டிருந்தான். இச்சந்தியில் நின்ருல் எத்தனை எத்தனையோ காட்சிகளையெல்லாம் காணலாம். பெண்மணிகள் பலர் பழம், பாக்கு வெற் றிலை, தேங்காயுடன் தட்டங்களை ஏந்திக்கொண்டு சித் தன்கேணிப் பக்கமாகச்சென்று கொண்டிருந்தனர். "இவர்கள் எந்தக் கோவிலுக்குப் போகிருர்கள்" என் ருன் சொக்கன்.

"சித்தன்கேணிப் பிள்ளையார் கோவிலுக்கு. நல்லூர்க் கந்தசுவாமி கோவிலைப்போல இதுவும் இப்ப பிரபல்யமாகிவிட்டது" என்ருர் அருகில் நின்ற சக பிரயாணி ஒருவர். பார்ப்போரை மயங்க வைக் கும் நல்ல தேகக்கட்டுள்ள ஆண்கள் பலர் பின்னே பறியும் முன்னே வலைகளும் தொங்க மரக்கோலைக் காவிக்கொண்டு வுட்டுக்கோட்டைப் பக்கமாக தங்க ளுக்குள் பலதும் பேசிக்கொண்டும் சிலங்கிய வலைகளைச் சரிசெய்துகொண்டும் சென்றனர். இவர்கள் போகும் அராலித்துறை இங்கிருந்து நாலு மைல் தொலைவில் உள்ளது.

பஸ், மூளாய் ஆஸ்பத்திரிக்கு முன்னுல் நின்றதும் விழுந்தடித்துக்கொண்டு இறங்கிய சொக்கன் 'வெளியே' என்று எழுதியிருப்பதையும் கவனியாமல் ஆஸ்பத்தி ரிக்கு உள்ளே சென்று அங்குமிங்குமாக ஓடினுன். அவன் தட்டுத்தடுமாறி அலைந்து திரியும்போது, அவன் முன்னே வந்த நர்ஸ் ஒருத்தி "ஆரைத்தேடுறியள் ?" என்ருள்.

" அராலி மொட்டைப் புளியடியிலிருந்து வந்திருக் கும் கர்ப்பிணி ... " என்று இழுத்தான் சொக்கன். " அவவின் பெயரென்ன ? "

" மிஸ்ஸிஸ் சொக்கன் "

" ஓ ! அவவா, அங்கே பாருங்கோ — வைத்தியர் குமாரசாமி கட்டிக்கொடுத்த கட்டிடம் இருக்குதல்லோ அதுக்குப் பக்கத்திலே இருக்கிற ' பில்டிங்கிலே ' இரண் டாவது ' றூமிலே ' இருக்கினம். போய்ப் பாருங்கோ " இரண்டு நாட்கள் சுகவீன லீவில் இருந்துவிட்டு அன்று வேலைக்கு வந்திருந்த நர்ஸ் கூறிவிட்டு டொக் ... டொக்... என்ற ' பூட்ஸ் ' சத்தத்துடன் நகர்ந்தாள்.

வைத்தியர் குமாரசுவாமி கட்டிக் கொடுத்த 'பில்டிங்' கைத் தாண்டிச் சென்றதும் ' மிஸ் கலைமதி நேசிங் ஹோம் ' என்று எழுதப்பட்ட ' போர்ட்பலகை' அறை யின் கதவில் தொங்கிக் கொண்டிருந்தது. சொக்கன் கதவைத் தட்டினுன் அவசரத்துடன். " யேஸ் ! உள் ளுக்கு வேலை இருக்கிறது உந்த வாங்கிலே கொஞ்ச நேரம் இருங்கோ" என்ற சொற்கள் அவசரப்பட்டுக் கொண்டிருந்த சொக்கனுக்கு ஆத்திரத்தைக் கிளப்பியது. ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு வாங்கிலே அமர்ந்தான். மீண்டும் ' மிஸ் கலைமதி நேசிங் ஹோம் ' அவன் கண்ணுக்குத் தெரிந்தது. 'கலைமதி' என்ற பெயர் அவ னுக்குக் கடந்த காலத்தை நினைவு படுத்தியது.

## 2

அராலியூர் ... நெல்விளையும் பூமியால் சூழப்பட்டு உணவுக்கே குறைவற்ற செல்வம் கொழிக்கும் கிராம மாய்த் திகழ்வது. அக்கிராமத்தின் வடக்கே யாழ்ப்பா ணத்தையும் காரைநகரையும் இணைக்கும் கல்லுண்டாய் வீதி. அந்த வீதியிலே இருப்பதுதான் செட்டியாமடம்.

செட்டியாமடம் என்று சொல்வதும் மொட்டைப் புளியடி என்று சொல்வதும் அந்த ஊரைத்தான். அந்த மொட்டைப் புளியடியில் இருந்து பார்த்தால் அக்கிராமத்தின் சிறப்பினை வெளியூரவர்களுக்கெல்லாம் பறை சாற்றிக்கொண்டிருக்கும் மாண்பு மிக்க மயிலியப்புலக் கந்தசுவாமியார் ஆலயத்தின் பிரமாண்டமான கோபுரம் காட்சியளிக்கும்.

அக்கிராமத்தில் படித்தவர்கள் இருக்கிருர்களா ? என்று யாரையாவது கேட்டால் ஏன் படிப்பு ? எங்களைச் சுற்றி வயலிருக்கிறது. எங்கள் கையிருக்கிறது. படித்தால்தான் வாழலாம் ; படிக்காவிட்டால் வாழ முடியாதா? என்ற கேள்விகள் ஆயிரக் கணக்கில் எழும். ஆனுல் படித்தவர்கள் ஒருவரும் இல்லையென்று சொல்ல முடியாது. அக்கிராமத்தில் படித்தவர்களும் இருக்கிருர்களென்று சொல்வதற்கு ஒரே ஒரு ஆணும் ஒரே ஒரு பெண்ணும் இருக்கிருர்கள். அவர்கள்தான் சொக்கன் — கலைமதி.

சொக்கன் கிறிஸ்தவர்களின் உதவியுடன் எட்டாம் வகுப்பில் எட்டு வருடம் இருந்து விட்டுப் பாடசாலையை விட்டு வெளியேறியவன். அவ்வூரில் படித்தவன் காற்சட்டை போட்டவன் அவன்தான் என்ருல் அவனைச் சுற்றி வளைக்கும் பெண்களைச் சொல்லவா வேண்டும் ?

இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்த்த காலம். சொக்கனுக்கும் இராணுவத்தில் வேலை கிடைத்துக் கொழும்புக்குப் போய்விட்டான். கொழும்பில் நாலு வருடங்களைக் கழித்துவிட்டுப் பெற்ருேரைப் பார்க்கும் நோக்கமாக வீடு வந்து சேர்ந்தான். பெற்ருேரைப் பார்க்க வந்தவனுக்குக் கன்னிகாதானம் செய்ய முன் வந்தனர் பலர். அதில் கலைமதியும் ஒருத்தி.

கலைமதி – சொக்கனின் முறைப்பெண். கலைமதிக்கும் சொக்கனுக்கும்தான் திருமணம் செய்வதென்று

அவர்கள் சிறுவயதாக இருக்கும் பொழுதே முடிவு கட்டப்பட்டிருந்தது. கலேமதி பார்ப்போரைக் கவரும் பகட்டான பெண்ணல்ல, ஆனல் பண்புள்ளவள். கலேமதியைச் சொக்கனுக்குப் பிடிக்கவில்லே. எப்படியிருந்தும் அவளேத் தட்டிக்கழிக்க வேண்டுமென்று காத்திருந்தான்.

சொக்கன் அழகன். அவனுக்கும் அழகைத்தான் பிடிக்கும். தனக்குக் கிடைப்பவள் அழகியாக இருக்க வேண்டுமென்று கனவு கண்டான்.

" அண்ணே ! என்ரை மனிசனுக்கும் வயதாகிவிட்டுது. அவர் இருக்கும்போதே கலேமதியின் திருமணத்தைச் செய்துவிடவேண்டுமென்பதுதான் எங்கள் எல்லோரது விருப்பமும். சொக்கனும் உத்தியோகமாகி பல வருடங்களாச்சு. இனித் திருமணத்தைச் செய்து வைக்கலாமென எண்ணுகிறேம்" என்ருள் கலேமதியின் தாய் தங்கமணி.

" அதுக்கென்ன, நானும் அதைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன் " என்ருர் சொக்கனின் தந்தை சிவானந்தர்.

" எல்லாரத்துக்கும் முதலில் சாத்திரியைக் கூப்பிட்டுச் சாதகப் பொருத்தத்தைப் பார்ப்போம் " என்ருள் இந்திராணி.

" தங்கச்சி ! உனக்கு விரும்பிய ஒரு சாத்திரியைக் கொண்டு பார்ப்போம் " என்ருர் சிவானந்தர்.

" சாத்திரி செல்லமுத்தர் தான் கெட்டிக்காரர் எண்டு சொல்லுகினம். ஆனல் எனக்கோ சாத்திரத்திலே எள்ளளவும் நம்பிக்கையில்லே."

எத்தனே பொய்யைச் சொன்னுலும் தனக்குக் காசு தான் முக்கியம் என்று தவியாத் தவிக்கும் சாத்திரி சரவணே வந்தான்.

"பெண்ணுக்கு செவ்வாய் தோஷம், சொக்க னைக் கட்டிக் கொடுத்தால் ... சொக்கன் இறக்க நேரிடும்" என்ருன் சொக்கனிடம் முதலில் 'அட்வான்ஸ்' வாங்கிய சாத்திரி சரவணை.

"ஐயோ! எனக்கு இருப்பது ஒரே ஒரு மகன். உனக்கு இருப்பதும் ஒரே ஒரு மகள். இந்தக் கலியாணமே வேண்டாம்" என்று பிடியாய்ப் பிடித்தாள் இந்திராணி.

"மச்சி! உங்களுக்கும் எங்களுக்கும் இருக்கிற உறவு நீடிப்பதற்கு இந்தக் கலியாணம்தான் காரண மாக இருக்கும். கலைமதியை நீங்கள் ஏற்காவிட்டால் இனி நீங்கள் யாரோ! என்றுதான் வரும்" என்ருள் தன் மகளுக்குச் சொக்கனைக் கலியாணம் செய்து வைக்கவேண்டுமென்ற ஆவலால் தங்கமணி.

"என்னணை மச்சாள்! எங்கடை பிள்ளையள் இரண் டும் திருமணம் செய்து இறப்பதிலும் பார்க்க நாங்கள் பிரிந்திருப்பது கூடாதோ" என்ருள் இந்திராணி.

"எனக்கோ உந்தச் சாத்திரத்திலை எள்ளளவும் நம்பிக்கையில்லை" என்ருள் தங்கமணி.

"சும்மா! இராத்தை போன வருசமெல்லாம் அவன் கந்தனைச் செய்யாதையடா, செய்யாதையடா என்று சாத்திரி சரவணை சொன்னதாமெல்லே, அவனே சாத்திரியின் சொல்லைத் தட்டிப்போட்டுத் திருமணம் செய்தவனெல்லே, பிறகு என்ன நடந்தது ?"

"சும்மா போணை! சாத்திரிமார் குருட்டுவாக்கிலை சொல்லுகிறது சிலவேளை சரி வந்து விடுகிது."

"நீயேன் உன்ரை மகளைப் பற்றிக் கவலைப்படு கிருய்? நாங்களெல்லோ ஆரையும் பிடிச்சுக் கலியா ணம் செய்து வைப்போம்."

"உதை மாத்திரம் சொல்லாதை மச்சாள் உன்ரை மேனைக் கட்டிக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லுறத்துக்கு இப்படிச் சுத்தி வளைக்காதை" என்று சீறினாள் தங்கமணி.

"உண்மையைத்தானே சொல்லுறன்."

"என்ரை மேள் உன்ரை மேனைச் செய்யாவிட்டால் வேறை கல்யாணம் செய்வாள் எண்டு நினைக்கிறியே. அதுதான் என்ரை மேளிட்டை முடியாது. அவள் உன்ரை மேனைச் செய்யாவிட்டால், தான் கன்னிப்பெண்ணாகவே இருப்பதாக எனக்கு முன்னமே சொல்லியிருக்கிறாள்."

சொக்கன்—கலைமதியின் கலியாணம் பற்றி இந்திராணிக்கும் தங்கமணிக்குமிடையே பெரிய வாக்கு வாதம் ஏற்பட்டது. தங்கமணிக்கு இதை நினைக்க நினைக்க ஆத்திரம் வந்தது. ஆத்திரத்தை அடக்கமுடியாமல் "இவ்வளவுகாலமும் என்ரை மேளைச் செய்கிறனெண்டு போட்டு இப்ப ஏமாத்திப்போட்டியள். சரி சரி, எல்லாத்துக்கும் கடவுள் இருக்கிறார். முருகா! நீயொரு உண்மையான தெய்வமெண்டா இதுக்குச் சரியான தண்டனை கொடுக்கவேணும்" என்று கூறிக் கொண்டு இந்திராணியின் வீட்டு முற்றத்தில் இருந்த மண்ணை அள்ளித்தூவிவிட்டு நழுவி இருந்த முந்தானைச் சீலையைச் சரியாக இழுத்துச் சொருகிக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறினாள் தங்கமணி.

"இந்தாடியாத்தை! இந்தத் தேத்தண்ணியைக் குடிச்சுவிட்டு நீ திட்டுற மாதிரித் திட்டிக்கொண்டு போ."

"உன்ரை தேத்தண்ணியைக் கொண்டுபோய் நாய்க்கு ஊற்று" என்று கூறிக்கொண்டே வேகமாக நடந்தாள் தங்கமணி.

உலைவாயை மூடினாலும் மூடலாம் ஆனால் ஊர் வாயை மூடுவதென்றால் சாமானியமான காரியமா?

இந்திராணிக்கும் தங்கமணிக்கும் இடையே நடந்த கலியாணப் பேச்சு வார்த்தைகளும் இனிமேல் கலை மதிக்கும் சொக்கனுக்கும் கலியாணம் நடக்காது என்பதும் காட்டுத்தீபோல் ஊராருக்கெல்லாம் தெரிந்து விட்டது. படித்தவன் — காற்சட்டை போட்டவன் — கொழும்பிலே உத்தியோகம் பார்ப்பவன் என்றால் பணக்காரர்கள் சும்மா இருப்பார்களா? என்ரை மேளைத் தாறன், உன்ரை மேளைத் தாறன் என்று பத்தாயிரம், பதினையாயிரம், இருபதினாயிரம் என்று சீதனத் தொகையை ஏற்றிக்கொண்டே போனார்கள்.

சரவணையர் ... அராலியூரில் பேர்போன பணக்காரர். பத்திரிகை வாசிக்கும் அளவுக்குப் படித்தவர்களுள் அவரும் ஒருவர். எந்த நேரமும் புதினப் பத்திரிகைகளை எடுத்து வாசித்துக்கொண்டு — மற்றவர்களுக்கு வாசித்துக் காட்டிக்கொண்டே இருப்பார். ஊர்ப் புதினங்களோ உலகப் புதினங்களோ அவருக்குத் தெரியாது இருப்பதென்றால் அது முயற்கொம்புதான்.

“ சரவணையண்ணை ! சிவானந்தற்றை மேனுக்கெல்லே கலியாணப் பேச்சுக்கள் நடக்குது. நீங்களும் உங்கடை மேளுக்குக் கேட்டுப் பாருங்கோவன் ” என்றார். நாள்தோறும் சரவணையரிடம் வந்து புதினங்களை அறிபவர்களில் ஒருவர்.

“ இஞ்சாரடா தம்பி ! எனக்குந்தக் கவிண்மேந்து உத்தியோகமெண்டாப் பிடிக்காது. அதுவும் ‘ஆமியெண்டா ... அப்பப்பா ! ... அது ஆபத்துக்கே உதவாது ” என்றார் சரவணையர்.

“ நீங்களும் ஒரே ஒரு மகளைத்தான் வைச்சிருக்கிறியள். அந்த மகளுக்கு ஒரு உத்தியோககாரனைச்செய்து கொடுக்க உங்களிட்டைக் காசு இல்லையோ ? ” என்றார் இன்னொருவர்.

“சும்மா போ மச்சாள்! அவன் கந்தையன்ரை பெட்டையையல்லோ பேசியிருந்தது. அவன்ரை பெட்டை இன்னும் காத்திருக்கையில் நாங்கள் தலைப் போடுவது சரியாகுமோ?” என்றார் சரவணையர்.

“அந்தக் கலியாணம்தானே குழம்பிப்போச்சு.”

“மெய்யாய்த்தானே? அப்பிடியெண்டா நாங்களு மொருக்காத் தட்டிப் பாப்பம். எப்படியென்றாலும் கூழைக் கஞ்சியைக் குடிச்சாலும் உந்த ஆமிக்கு கட்டிக்குடுக்க மனம் ஒரு மாதிரிக் கிடக்கு” என்றார் சரவணையர்.

“சும்மா கதையை விட்டுவிட்டுப் போய்க்கேட்டுப் பாருங்கோ.”

“சரி. சரி! ஒருக்காத் தட்டிப் பாப்பம்.”

## 3

சரவணையருக்கும் — சிவானந்தருக்குமிடையே கல்யாணப் பேச்சுவார்த்தை நடந்து, இருபத்தையாயிரம் சீதனத்துடன் ஒப்பேறியது. அடுத்த வாரம் ...... உற்றார் உறவினர் புடைசூழ — மேள வாத்தியங்கள் முழங்க, வெகு கோலாகலமாகத் திருமணம் நடைபெற்று முடிந்தது. மாதம் ஒன்று கழிந்தபின், “லீவு முடிந்து விட்டது உடனே வரவும்” என்று அவனுக்குத் தந்தி வந்திருந்தது. தன் அன்பு மனைவிக்கு ஆசை தீர முத்தங்கள் கொடுத்துவிட்டுக் கொழும்புக்குப் புறப் பட்டான்.

கொழும்புக்கு வந்தபின் அவனால் ஒருநாள்கூட வசந்தியைப் பிரிந்திருக்க முடியவில்லை. எதைப் பார்த்தாலும் எதை எடுத்தாலும் வசந்திதான் அவன் கண்ணுக்குத் தோன்றினாள். சாப்பிடும்பொழுது வசந்தி

அருகிலிருந்து சாப்பாடு கொடுப்பதாகவே நினைப்பான். வானொலியில் பாட்டு நடந்தாலும் அப்பாட்டை வசந்தியே பாடுகிருள் என்று பாட்டையே கேட்டுக்கொண்டிருப்பான். வீதியால் போகும் அழகான பெண்களையெல்லாம் தன் மனைவி வசந்தியென்றே திரும்பித் திரும்பிப் பார்ப்பான். வசந்தியைக் கொழும்பில் கொண்டுவந்து வைத்திருப்பான்; ஆனுல், அவனுக்கு வீடு கிடைக்கவில்லை. எப்படியும் வீடு ஒன்று எடுத்து வசந்தியைத் தன்னுடன் வைத்திருக்கவேண்டுமென்ற ஆவலால் வீடு எடுப்பதற்குத் தன் நண்பர்களுடன் மருதானைப் பக்கமெல்லாம் திரிந்தான். கொழும்பிலே வீடு எடுப்பதென்ருல் சாமானியமான காரியமா? ஒரே ஒரு கார்க்கொட்டில்தான் இருந்தது. அந்தக்கொட்டிலையாவது எடுத்துவிடவேண்டுமென்ற நோக்கத்தோடு வாடகையைக் கேட்டான். வாடகை முப்பது ரூபா. 'கீமணி' ஐஞ்நூறு. 'அட்வான்ஸ்' ஆயிரம் ... என்றனர். அவனுக்குள் தண்ணீரே இல்லாமற்போய்விட்டது.

"அடுத்த கிழமை வருகிறோம்" என்று சொல்லிவிட்டுக் கொட்டாஞ்சேனைப் பக்கமாகச் சென்ருன். கொட்டாஞ்சேனையிலும் வீடு இல்லாமல் திரிவோரைப்பார்த்துவிட்டு வீடு எடுக்கும் நோக்கத்தையே கைவிட்டுவிட்டான்.

"அத்தான்! என்னை எப்பொழுது கொழும்புக்குக் கூட்டிக்கொண்டு போவீர்கள்? கொழும்பைப் பார்க்க வேணுமெண்டு ஒரே ஆசையாக இருக்கிறது. வீடு எடுத்துவிட்டீர்களா? உங்களைப் பார்த்துக்கொண்டு இருந்தால்தான் என் மனம் நிம்மதியடையும்". அவள் எழுதிய கடிதம் அவனை ஊசலாடச் செய்தது.

"வசந்தி, உன்னைக் கூட்டிக்கொண்டு வந்து என்னேடு வைத்திருக்க வேண்டுமென்று எவ்வளவோ பாடுபட்டேன். வீடுதான் எடுக்கமுடியாமல் இருக்கிறது. எனக்கோ லீவும் தருகிருர்களில்லை. சண்டை சமாதா

னமானதும் லீவு எடுத்துக்கொண்டு ஓடோடி வந்து உன்னைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்" என்று அவள் எழுதிய கடிதத்திற்குப் பதில் எழுதியிருந்தான் சொக்கன்.

ஃ ஃ ஃ ஃ

'கிறீச்' என்ற சத்தத்துடன் கதவைத் திறந்ததும் தன் கடந்தகால வாழ்க்கையை நினைத்துக்கொண்டிருந்த சொக்கன் திடுக்குற்று எழுந்தான்.

"அத்தான்!" என்றாள் கலைமதி.

"கலைமதி நீயா...?"

"ஆமாம் நான்தான் அத்தான்! உங்களுக்கு வசந்தி......" என்று இழுத்தாள் கலைமதி.

"என்ன ......?"

"நீங்கள் வீட்டுக்குப் போகவில்லையா?"

"கொழும்பிலிருந்து நேரே இங்குதான்வருகிறேன்"

"அத்தான்! ......" என்று அழுதாள் கலைமதி.

"ஏன் அழுகிறாய்?"

"நீங்கள் ...... பறிகொடுத்துவிட்டீர்கள் அத்தான்!"

"யாரை? ... ..."

"உங்கள் மனைவி வசந்தியைத்தான்."

"ஐயோ! என்மனைவி வசந்தியைப் பறிகொடுத்து விட்டேனா? வசந்தி...... வசந்தி...... என்னைப் பார்க்காமல் போய்விட்டாயே! நான் என்ன பிழைசெய்தேன் உனக்கு..."

"அத்தான்!... அதோ உங்கள் பிள்ளை."

"கலைமதி! என்னை மன்னித்துவிடு. உனக்கு நான் செய்த துரோகத்திற்குத் தகுந்த தண்டனை எனக்குக் கிடைத்துவிட்டது. நீ ஒரு கற்புக்கரசி. உனது கண்ணீர்தான் எனது வாழ்வையே அழித்துவிட்டது" என்று அழுது அழுது மன்னிப்புக் கேட்டுவிட்டுத் தனது பிள்ளையைத் தூக்கி அவளது கையில் கொடுத்து "இன்று முதல் இப்பிள்ளைக்கு நீதான் தாய்" என்று சொல்லி விட்டுப் பறையோசை கேட்கும் திசையை நோக்கி ஓடினான் சொக்கன்.

26-7-1964

# பண்பு

வீட்டு முற்றத்திலே படர்ந்து வளர்ந்து நிழலைப் பரப்பிக் கொண்டிருந்த வேப்பமரத்துக்குக் கீழே சாய்மனை நாற்காலியில் சாய்ந்து பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தேன். "அத்தான்! உங்களையெல்லே, நான் இன்றைக்குக் கூட்டத்துக்குப் போக வேணும்" என்று சொல்லிக்கொண்டு 'மணிப்பர்ஸ்' ஒரு கையிலே தொங்க, மறுகையிலே 'கூலிங்கிளாஸ்' சுழல, அன்ன நடை நடந்துவந்து என்முன்னே நின்றாள் கயல்விழி.

நான் பத்திரிகையில் பிரசுரமான ''பொல்லாத மனைவியால் தற்கொலை செய்துகொண்ட கணவன்'' என்ற தலையங்கமுள்ள செய்தியை ஒரு எழுத்தையும் தவற விடாது, ஊன்றி அவதானித்து வாசித்துக்கொண்டிருந்தேன். நான் வாசித்துக்கொண்டிருப்பதைக் கண்ட என் மனைவி திரும்பவும் என்னைப் பார்த்து "அத்தான்! உங்களையெல்லே, நான் இன்றைக்குக் கூட்டத்துக்குப் போக வேணும்'' என்றாள்.

"என்ன! கூட்டத்துக்கா?'' என்றேன் நான்.

"ஆம்'' என்றாள்.

''கயல்விழி! இன்றைக்குச் சபாவினுடைய கலியாண வீட்டுக்குப் போகவேணுமென்று தெரியாதா? போன கிழமை வந்த திருமண அழைப்பிதழைப் பார்த்தனி தானே'' என்றேன்.

"ஆமா, அதுக்கு இப்பென்ன செய்கிறது அதுக்கு நாளைக்குப் போகலாம். இன்றைக்குக் கட்டாய மாகக் கூட்டத்துக்குப் போகவேணும்" என்ருள்.

"என்ன! கூட்டம்?"

"பழைய மாணவரெல்லாம் சேர்ந்து கொலிச்சிலே கூட்டம் வைக்கிறம்".

"அதுக்கு நாளைக்குப் போகலாம்".

"இன்றைக்குத்தான் கூட்டம். கூட்டத்துக்குப் போகாவிட்டால் என்ரை 'பிரெண்'டெல்லாம் கேலி செய் வினம்".

"அப்ப பின்னே என்ரை 'பிரெண்'டிந்தை கலியாண வீட்டுக்கு மாத்திரம் போகாவிட்டால் என்னைக் கேலி செய்ய மாட்டார்களோ? நீ இன்றைக்குக் கூட்டத்துக் குப் போக வேண்டாம் ".

"இல்லே நான் போகத்தான் வேணும்".

"போனியள் எண்டா இண்டைக்குத் துலேச்சுப்போ டுவன்".

"வயித்திலீங்கற்றை மேன் என்னைப் படிப் பிச்சு உத்தியோகமாக்கி, இருபத்தையாயிரம் சீதனத் தோடை உங்களிட்டைத் தந்தது அடிமையாக இருக் கச் சொல்லியே?"

"என்ன? எனக்குப் பொம்பிளேயில்லாமை உன் னைத் தேடி வந்தனுனே? என்ரை கெட்டகாலம் உன் னைச் சேர்த்துவிட்டது" என்று சொல்லி இருவரும் வாக்குவாதப் பட்டுக் கொண்டு இருக்கும்போது எங் கள் வீட்டுப்படலையில் 'கிறீச்' என்ற 'பிறேக்' சத்தத் துடன் கார் ஒன்று வந்து நின்றது.

படலையடியில் கார் வந்து நிற்பதைக் கண்டதும் என் மனைவிக்கு ஆத்திரம் வந்துவிட்டது. அவர்கள் உள்ளுக்கு வந்துவிட்டால் விஷயம் அவர்களுக்கும் தெரிந்துவிடும் என்ற பயத்தினால் என் மனைவியின் முகம் சுருங்கிக் கறுத்து விட்டது.

"அத்தான்! நான் போறதா? போகவேண்டாமா?"

"போகவேண்டாம்".

"இல்லை நான் போகத்தான் வேண்டும்".

"போனால் திரும்பி வராதே, கொப்பர் வீட்டுக்கே போய்விடு" என்று நான் சொன்னதும் முகத்தைச் சுழித்துவிட்டு, என்னை எரித்துச் சாம்பலாக்குவதுபோல் பார்த்துவிட்டு அங்கங்களையெல்லாம் அழகாகக் காட்டும் 'நைலோன்' சேலை காற்றிலே பறக்க, கருவண்டை ஒத்த இரண்டு பின்னல்களும் குத்திட்டு நிற்கும் தனங்களுக்கிடையே விளையாடுவதுபோல் ஆட, அசைய, விறு விறென்று படலையில் நிற்கும் காரை நோக்கி நடந்தாள் என் மனைவி கயல்விழி.

என் மனத்துக்குள்ளே விருப்பமில்லாமல் இருந்தாலும் என் மனைவியின் மரியாதையைக் காப்பாற்ற வேண்டுமென்ற காரணத்துக்காகக் கார் நின்ற இடத்துக்குச்சென்று வழியனுப்பி வைத்தேன்.

என் மனைவி காரிலே ஏறியதும் காருக்குள்ளே இருந்த கன்னிப்பெண்களும் கட்டிளங்காளைகளும் 'கல கல' வென்று சிரித்தனர். கார் காற்றாகப் பறந்து கொண்டிருந்தது.

அடுத்த நாள் ............

நண்பன் சபாவின் திருமணத்துக்குப் போவதற்காக ஆயத்தம் செய்துகொண்டு மனைவியிடம்போனேன்.

என் மனைவி கயல்விழி கண்ணாடிக்கு முன்னே நின்று பவுடரை எடுத்து 'ஒயிலாக' உடலை வளைத்துக் கன்னத்தில் பூசிக்கொண்டாள். பவுடரைப் பூசியதும் அவளது மாம்பழக் கன்னங்கள் பளபளவென்று சிவந்தன. உதட்டுச் சாயத்தை எடுத்து உதட்டுக்குப் பூசினாள். உதடும் எழிலாகப் பிரகாசித்தது. பின்னலை முன்னுக்குத் தூக்கி மார்புக்கு மேல் போட்டாள். அந்தப் பின்னல் மார்போடு விளையாடிக்கொண்டிருந்தது. வெள்ளை வோயில் பாவாடையும் அதே நிறச் சாறியும் அவற்றின் அழகைப் பளிச்செ‌ன எடுத்துக்காட்டும் இரத்தச் சிவப்புப் பிளவுசும் அணிந்து கொடிபோன்ற தன் உடலை வளைத்து நௌித்து அழகை இரசித்துக் கொண்டு நின்ற என் மனைவியைப் பார்த்ததும் எனக்கு அவளைக் கடித்துத் தின்ன வேண்டும் போல் இருந்தது.

"கயல்விழி! நேரமாச்சு. இன்றைக்கும் போறதில்லையா?"

"அத்தான் ! கொஞ்சம் பொறுங்கோ. இதோ வந்துவிடுகிறேன்."

"என்ன, நாலு பிள்ளைக்குத் தாயான பின்பும் அழகு படுத்திக் கொண்டு நிற்கிறாயே? பார்ப்பவர்களுக்கு அசல் எது? போலி எது? என்பது தெரியாதென்றா? உன்ரை அழகுக்கு உதெல்லாம் என்னத்துக்கு."

"உம்...... உம்—உங்கண்டை கேலிக்கதையை விட்டுவிட்டு சும்மா இருங்கத்தான். அது சரி நான் இன்றைக்கு ஆசுப்பத்திரிக்கு போகவேணும். நீங்களும் வாறியளே?"

"ஏன் ஆஸ்பத்திரிக்கு? ஆரைப் பார்க்க?"

"என்னுடைய வேலை செய்கிற 'ரைப்பிஸ்ற்' ஒராளுக்குச் சுகமில்லை. அவரைத்தான் பாக்கப் போகவேணும்".

"நீ பின்னை அவரைப் பார்க்கப்போ. நான் சபாவிந்தை கலியாண வீட்டுக்குப் போவிட்டுவாறன்" என்று சொல்லி நாஞகவே அவளை அனுப்பி வைத்தேன். நாஞகவே அவளை அனுப்பி வைக்காவிட்டால் அவளுக்கும் எனக்கும் சச்சரவு உண்டாகும் என்பது எனக்குத் தெரியும்! அதஞலே அவள் விருப்பத்துக்கே அவளை அனுப்பி விட்டு நண்பனின் கலியாண வீட்டுக்குப் போனேன்.

ஃ ஃ ஃ

"கலோ! மிஸ்ர நாகராசன், வாப்பா வா. ஏன்ராப்பா நேற்று வரயில்லை?"

"..........................................."

"ஏனப்பா கதைக்காமல் இருக்கிருய்? எங்கையப்பா மனைவியார்? ஏன் கூட்டி வரவில்லை?"

"அவ ஆஸ்பத்திரிக்குப் போவிட்டா".

"ஆரைப் பார்க்க?"

"கந்தோரிலை வேலை செய்கிற ரைப்பிஸ்ரையாம். அது சரி, உன்ரை பெண்சாதியை ஒருக்காக் கூப்பிடு பாப்பம்".

"..........................................."

"ஏனப்பா கதைக்காமல் இருக்கிருய்? பெண்சாதி அழகில்லையா?"

"..........................................."

"உன்னைத்தான்ராப்பா கேக்கிறன், நீ என்னடா வெண்டால் கதைக்காமை ஊமைபோலை இருக்கிருய்? ஒகோ! அந்தப் பழைய போட்டியை நினைச்சுப் போட்டியோ?"

"எந்தப் போட்டி?"

"செய்தா உத்தியோககாரப் பொம்பிளையைச் செய்யிறது. அல்லது பிரமச்சாரியாக இருக்கிறதென்று சொன்னுய் அதைத்தானே நினைச்சனி".

"ஓமடாப்பா, நான் நினைச்சது தவறிப்போச்சு என்ன செய்யிறது. எப்படியாவது ஒரு ஒத்தியோக காரப் பொம்பிளையைச் செய்யலாமெண்டு பார்த்தன், அது முடியாமைப் போச்சு".

"எடே மச்சான், நீ தப்பிவிட்டாயடா, உன்ரை நல்ல காலம் உன்னைத் தப்பவைச்சுவிட்டுது. இஞ்சை பார் நானொரு உத்தியோக காரப் பொம்பிளையைக் கலியாணங் கட்டிப்போட்டுப் படுகிற பாட்டை".

"என்ன பாடுபடுகிருய்?"

"உத்தியோககாரி என்றபடியால்தானே உன்ரை கலியாண வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வர முடியாமற்போச்சு".

"உதுக்குத்தானே சொலுறியள்?"

"இது மாத்திரமில்லை. ஒரு பெண்ணுக்குப் பணம்—படிப்பு இருந்துவிட்டால் போதும் அவளை அடக்கவே முடியாது."

"ஏன் பெண்களை அடக்க வேண்டும்? அவர்களுக்கும் சுதந்திரம் இருக்குது தானே? படித்த பெண் ஒருகாலமும் பிழைவிட மாட்டாள். அவள்......"

"என்ன பெண்களைப்பற்றி ஒரே கண்ட நீதிக்குப் புளுகிருய்? உன்ரை பொம்பிளையை உனக்குப் பிடிக்கவில்லையே? கலியாணம் செய்து இரண்டு நாட்களுக்குள்ளேயே இப்படியென்ருல் பின்னுக்கு என்ன செய்யப் போறியள்" என்றேன் நான்.

நானும் என் நண்பன் சுபாவும் ஒருவரை ஒருவர் கதைத்துச் சிரித்துக்கொண்டு இருக்கும்போது முத்துப் பற்கள் தெரிய முல்லைச்சிரிப்புடன் அன்னநடை நடந்து வந்து 'பலகாரத்தை' என்முன்னே வைத்துவிட்டுச் 'சாப்பிடுங்கள்' என்று தேன்சொட்டும் இனிய குரலில் கூறிவிட்டு எனது நண்பனின் மனைவி நகர்ந்தாள்.

நண்பனின் மனைவியைப் பார்த்தேன். களங்கமில்லாத அவளது முகம் கவர்ச்சியாகவும் பருவத்தின் வளர்ச்சியால் பதமாகவும் காணப்பட்டாள். அவளின் ஒவ்வொரு அங்கங்களும் கடித்துத் தின்னக்கூடிய அளவுக்குப் பூரணமாக வளர்ந்து பதமாக இருந்தன.

தமிழரின் பண்பாட்டுக்கேற்ப அவளின் கழுத்திலே புதிதாகக் கட்டப்பட்ட புதிய தாலிக்கொடி "நான்தான் இந்தப் பெண்ணுக்கு வேலியாக இருக்கிறேன். நான் இவளின் கழுத்திலே இருக்கும்போது இவளை மாத்திரம் 'கரவு' உள்ளத்துடன் பார்க்காதீர்கள். என்னுடைய சொல்லைக் கேளாமல் இவளின் கற்பைச் சூறையாட முற்படுவீர்களாயின், என்னுடைய தாலியிலே இருக்கும் திரிசூலத்தினுல் குத்திக் கொன்றுவிடுவேன்" என்று சொல்வதுபோல் பளிச்சுப் பளிச்சென்று மின்னிக் கொண்டிருந்ததோடு, அவள் இன்னொருவன் மனைவி என்பதையும் அது எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தது.

"என்னப்பா! ஒரேயடியாக மனைவியையே பார்த்தாய் என்ன அழகில்லாதவள்-பணமில்லாதவள் என்ரு?"

"ஒன்றுமில்லை. நீ அதிஷ்டசாலியப்பா."

"ஏன்?"

"இப்படியான ஒரு பெண்ணைத் தேடி எடுத்துப் போட்டாயே?"

"நீ உத்தியோககாரப் பெண்ணைக் கலியாணம் கட்டினுப்போலே கேலி செய்கிருயா?"

"நண்பா! நான் கேலி செய்யவில்லை. என் வாழ்க்கையிலே ஏற்பட்ட ஏமாற்றத்தைக் கூறுகிறேன் கேள்" என்று சொல்லி என் வாழ்க்கை வரலாறுகளைக் கூறி ஆரம்பித்தேன்.

ஃ ஃ ஃ ஃ

எனது ஊரிலே எத்தனையோ அழகிய பெண்களெல்லாம் இருந்தனர். அவர்களுக்குள்ளே பணத்திலும் படிப்பிலும் கூடியவளான கயல்விழியைத் தேடி எடுத்து என் மனைவியாக ஏற்றுக்கொண்டேன்.

கயல்விழிக்கு மஞ்சள் கயிறு கட்டியதும், "உனக்கென்ன இரண்டு பேற்ரை சம்பளம். நல்லாக மிச்சம் பிடிக்கலாம். கெதியிலே குட்டிப் பணக்காரனுக வந்து விடுவாய்" என்று என் உறவினர்கள் எல்லோரும் என்னைக் கேலி செய்தனர்.

நானும் அவர்கள் சொல்வதுபோல் பணக்காரனுகவும் மரியாதையான குடும்பமாகவும் வாழலாம் என்று நினைத்துப் பெருமிதப்பட்டேன். ஆனுல், நான் நினைத்ததுபோல் ஒன்றுமே நடக்கவில்லை.

உத்தியோககாரப் பெண்ணைத் தேடி எடுத்த நான் படும்பாட்டைச் சொல்லவே வெட்கமாக இருக்கிறது.

என் மனைவி நித்திரைக்குப் பிறப்பிடமானவள். அவள் ஒவ்வொரு நாளும் காலையில் ஏழு மணிக்குப் பின்னே நித்திரைவிட்டு எழும்புவாள். அவள் எழும்புவதற்கு முன்னே நான் எழும்பிவிடுவேன். நான் எழும்பியதும் தேநீர் வைத்துவிட்டு என் மனைவியை எழுப்புவேன். அவள் "கொஞ்சம் பொறுங்கோ, பஞ்சி

யாக்கிடக்கு" என்பாள். "நேரம் ஏழுமணியாச்சு. இண்டைக்குக் கந்தோருக்குப் போறதில்லையே? எழும் புங்கோ" என்று சொல்லி விடாப்பிடியாக எழுப்பினல் தான் எழும்புவாள்.

அவள் எழும்பி முகம் கழுவுவதற்கு முன்பே நானும் வேலைகாரப் பெட்டையும் சேர்ந்து சாப்பாடு எல்லாம் சமைத்துவிடுவோம். காலைச் சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டு அவள் தன்னுடைய கந்தோருக்குப் போவாள். நான் என்னுடைய கந்தோருக்குப் போவேன்.

திரும்பவும் மாலை நாலுமணிக்குத்தான் இருவரும் வீடு வந்து சேருவோம். வீட்டுக்கு வந்ததும் அந்தக் கூட்டத்துக்குப் போகவேணும் இந்தக் கூட்டத்துக்குப் போகவேணும் என்று சொல்லிவிட்டுத் தன் விருப்பப் படி போவாள்.

இன்று நீ கூட்டத்துக்குப் போகவேண்டாம் என்று தடுத்தால் போதும். உடனே என்மேல் சீறிவிழுவாள். "வீட்டுக்குள்ளே என்னைப் பூட்டிவைக்கப் பார்க்கிறீர் களா? இதுக்குத்தான என்னைக் கலியாணம் செய்து கொண்டீர்கள்?" என்றெல்லாம் வாயில் வந்தமாதிரி மரியாதை இல்லாமல் ஏசுவாள். சிலவேளைகளில் சாப் பிடாமலும் இருந்துவிடுவாள்.

ஒருநாள்,

"இன்று எங்கள் சங்கத்தினர் 'பிக்னிக்' போக உத்தேசித்திருக்கிறர்கள். நானும் அவர்களுடன் போகிறேன். மத்தியான உணவை நீங்களே ஆக்கிக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டுப் போனள்.

"என்ன கயல்விழி! ஒவ்வொரு நாளும் இப்படியே போனல் ஊரவர்கள் என்ன நினைப்பார்கள்?"

"ஊரவர்களுக்குப் பயந்து நாங்கள் நடக்க முடியுமா?" என்றுள். அவளோடு கதைத்தால் சண்டை தான் பிடிக்கவேண்டும் என நினைத்து, அவளின் விருப் பப்படி நடக்க விட்டுவிட்டேன். இன்றும் அவள் அந்த நிலையிலேயே இருக்கிறுள். இப்படியே படித்த பெண்ணைக் கலியாணம் செய்து நான் படுகிறபாடு ஒன்று, இரண்டா.........

"பணம், படிப்பு இருக்கிற பெண்களைக் கலியாணம் கட்டக் கூடாது. இனிமேல் என் நண்பர்களைக் கலி யாணம் கட்டவும் விடமாட்டேன்" என்றேன் நான்.

"என்ன! பணம், படிப்பு இருக்கிற பெண்களைக் கலியாணம் செய்யக்கூடாதா.........?" என்று குறுக்கிட் டான் என் நண்பன் சபா.

"ஆமாம் சபா. பணம் — படிப்பு இருந்தால் மட்டும் போதாது. அத்தோடு 'பண்பும்' இருக்கவேண்டும். ஒரு பெண்ணுக்குப் பண்புதான் மிக முக்கியம். அந்தப் பண்பு இல்லையென்றுல் அவளைப் பேயென்று தான் சொல்ல வேண்டும்" என்றேன் நான்.

படித்த பெண்ணைக் கலியாணம் செய்யவில்லையே என்று வருந்திக்கொண்டிருந்த என் நண்பன் சபாவின் புன்னகை பூத்துக் குலுங்கியது.

வைகாசி, 1965.

# அந்தஸ்து ஒத்துவராது

"அம்மா! அம்மோ!!" என்று கூப்பிட்டுக் கொண்டு அவசர அவசரமாகக் கதவைத் தட்டினன் வரதர். தலைமாட்டில் தணித்து வைத்திருந்த 'லாம்பைத்' தூண்டி விட்டு "என்னடா வரதர் பத்துமணி யாழ்தேவியிலை வாறமெண்டு எழுதினுய். பேந்தேன்ரா நேரஞ்செண்டது."

"அவள் ஒருத்தி 'ரெயில்' தண்டவாளத்துக்கை தலையைக் குடுத்துவிட்டாள்."

"ஏனும் தலையைக் குடுத்தவள்?"

"ஏதோ புருசனுக்கும் பெண்சாதிக்குமிடையில் சச்சரவாம்."

"அதுதான் சொல்லுறது ஒரு கலியாணத்தைச் செய்யயுக்கை குலம், கோத்திரத்தை அறிந்து செய்ய வேணுமெண்டு" என்று கூறிக்கொண்டே கதவைத் திறந்தாள் அன்னமுத்து.

"அம்மா! எங்கையம்மா அவவைக் காணவில்லை".

"அது பாவம் இவ்வளவு நேரமும் முழிச்சுக் கொண்டு இருந்தது. மணி அழுதாப்போலை அவனைக் கொண்டு போய் நித்திரையாக்கிச்சிது அதுக்கும் நித்திரை வந்து விட்டுது."

"ரவி எங்கே?"

"படுத்திட்டான்; அவன் சரியான குறும்புக்காரனடா."

"தம்பி நாவேந்தன் ஏதாவது வேலைக்குக் கீலைக்கு எழுதிப் போட்டவனே?"

"அவனுக்கேன்ராப்பா வேலை. அவனுக்குத்தானே ஓயாத வேலையாக் கிடக்கு. ஒருநாளைக்கு அந்தக் கூட்டத்துக்குப் போறன், ஒரு நாளைக்கு இந்தக் கூட்டத்துக்குப் போறன் என்று சதா கூட்டங்களிலே பேசிக் கொண்டு திரிவது தான் வேலையாக்கிடக்கு."

"உனக்கென்னம்மா தெரியும். அவன் ஒரு பேச்சாளனுக இருக்கிறது, எங்களுக்கெல்லாம் எவ்வளவு பெருமை தெரியுமே?"

"நீயும் பின்னை அதை வரவேற்கிருய் என்று சொல்லு."

"சரி சரி அதிருக்கட்டும் அம்மா; மருமேள் ஒற்றுமையாக இருக்கிருவே?"

"என்னடா ஒரு மாதிரிக் கேக்கிருய், எப்பவடா அது எங்களோடை சண்டை பிடிச்சுது. அதைப் போல ஒரு பிள்ளையைத் தேடினுலும் கிடைக்குமே?"

"அடேயப்பா மருமேளைப் பற்றிப் புளுகிறதைப் பார்."

'உண்மையைத் தான்ரா சொல்லுறன். நான் மாத்திரம் சொல்லேல்லையடா; எங்கடை ஒற்றுமையைக் கண்டு இந்த ஊரே பொருமைப்படுகிறதடா."

"சரி சரி சாப்பாட்டைப் போடம்மா நான் அவவை எழுப்பிக்கொண்டு வாறன்."

"தங்கம்! தங்கம்!! என்ன ஒரேயடியாக நித்திரையாகக்கிடக்கிருய். 'எழும்பு எழும்பு" என்று கூறிக் கொண்டே தட்டினுன் வரதர். வரதர் தட்டியதும் திடுக்கிட்டு எழும்பிய தங்கரத்தினம் 'ஏனத்தான் இவ்வளவு நேரஞ் சென்டது' என்று கூறிக்கொண்டே குசினிப் பக்கம்

போனுள். அங்கே அன்னமுத்து கோப்பையில் சோறு போட்டுக்கொண்டிருந்தாள்.

"அத்தை! ஏனத்தைஉங்களுக்கிந்தக் கஷ்டம்; என்னை எழுப்பி விட்டால் நான் போட்டுக் கொடுக்கமாட்டேனு?" என்ருள் தங்கரத்தினம்.

"எடே வரதர்; ஏண்டா பிள்ளையை எழுப்பினனி; அது பாவம் காலையிலை இருந்து மாலைவரைக்கும் மாடு மாதிரி வேலை செய்து போட்டுக் கிடந்ததை நீ போய் எழுப்பின்னியே" என்று மகனை ஏசிவிட்டு எழும்பிப் போனுள் அன்னமுத்து.

"அட உன்ரைமாமி உன்னிலை நல்ல பாசம் போல கிடக்கு."

"அவவைப்போல ஒரு குணமான மாமியை எங்கு தேடினுலும் கிடைக்காதத்தான். அவ எனக்கு மாமியாக்கிடைச்சது சீரணி நாகம்மாளின்ரை அருள்தான்" என்ருள் தங்கரத்தினம். இப்படியே இருவரும் சிரித்துக் கதைத்துச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு அன்னமுத்துவுக்கு அருகில் போய் இருந்தனர்.

"அம்மா! நான் இண்டைக்கு 'ரெயினு'க்கை மாமாவைக் கண்டனுனம்மா."

"உன்னேடை கதைச்சவையே?"

"ஓமோம் ஒருநாளுமில்லாத மாதிரி, இண்டைக்கு நல்லாக் கதைச்சாரம்மா."

"நான் நினைச்சன் அவை பெரிய அந்தஸ்துக்காரர்; உன்னேடை கதைக்கமாட்டினமெண்டு."

"......உம்"

"என்ன கதைச்சவை?"

"மாமாவை வேலையிலை இருந்து நிப்பாட்டிப் போட்டாங்களாம்."

"ஏன்?"

"அவர் ஏதோ கள்ளத்தோணியள் வருவதற்கு உடந்தையாக இருந்தவராமெண்டு".

"பிறகு?"

"அவர் வீடு வாசலெல்லாம் வித்து வழக்காடியும் வழக்கிலே தோத்துப்போனுராம்."

"பிறகு?"

"பிறகு என்ன; ரேணுகாவுக்கு 'றிசிற்றர்' பண்ணியிருந்த ரகுநாதனும் ரேணுகாவை விட்டு விட்டு ஓடிப் போய் ஆரோ ஒருத்தியைக் கலியாணம் கட்டிப்போட்டானும்" என்று அவர்களைப் பற்றிய கதைகளைக் கூறினுன் வரதர். பின்னர் மகனும் மருமகளும் படுக்கைக்குச் சென்றுவிட்டனர்.

அவர்கள் இருவரும் போனபின் அன்னமுத்து மாத்திரம் தனியாக இருந்தாள். அவள் தனிமையாக இருந்ததனுலோ என்னவோ "பிறகு என்ன, ரேணுகாவுக்கு 'றிசிற்றர்' பண்ணியிருந்த ரகுநாதனும் ரேணுகாவை விட்டு விட்டு ஓடிப்போய் ஆரோ ஒருத்தியைக் கலியாணம் கட்டிப்போட்டானும்" என்று வரதர் கூறியது மீண்டும் அன்னமுத்துவின் ஞாபகத்திற்கு வந்தது. அதை நினைத்ததும் தங்கள் அந்தஸ்தைப்பற்றி ரேணுகா அவளுக்கு எழுதிய கடிதமும் ஞாபகத்திற்கு வந்து கடந்த காலத்தைச் சங்கிலிக் கோவைபோல் நினைவு படுத்தியது.

° ° °

"என்ன மச்சாள் ஏதோ எழுதிரு கிழிக்கிரு என்ன விஷயம்? பைத்தியம் கியித்தியம் பிடிச்சுப் போட்டுதே?" என்று கேட்டுக்கொண்டே அடுத்த வீட்டுப் பொன்னம்மா வந்தாள்.

"ஒன்றுமில்லையடி மச்சாள் என்ரை மகன்ரை விஷயம்தான். உதிலை இரு கொஞ்ச நேரம் கதைப்பம்" என்ருள் அன்னமுத்து.

"கலியாண விஷயமே?"

"ஓ......!"

"அதுதானே ஊரெல்லாம் கதைக்கிது. வயது வந்தும் இன்னும் கல்யாணம் செய்யாமல் மகனைக்கொண்டு உழைப்பிச்சுத் தின்னிருயெண்டு."

"நான் என்ன செய்யிறது? மாப்பிளை வீட்டாரும் பெம்பிளை வீட்டாரைப் போய்க்கேக்கிறதே."

"ஏன்? உன்ரை கொண்ணையின்ரை மேளைத்தானே செய்யிறதெண்டு ஊரெல்லாம் கதைக்கினம்."

"அது என்ரை அண்ணையின்ரை பெண்சாதிக்கு விருப்பமில்லையாம். அவவுக்கு நான் கடிதமெழுதிப் பார்த்தனுன். அவ தாறுமாருக எழுதியிருக்கிரு" என்ருள் அன்னமுத்து. அன்னமுத்து கதைக்கும் போது குரல் கரகரத்தது, கண்களும் குளமாயின.

"விருப்பமில்லாவிட்டால் உனக்கென்ன; ஊர் முழுக்கப் பொம்பிளையளாக் கிடக்கு. அழகு வேணுமா? பணம் வேணுமா? குணம் வேணுமா? எது வேணுமெண்டு சொல்லு இப்பவேகொண்டு வந்துவிடுகிறேன்."

"ஒண்டைக் கொண்டுவரச் சொன்ஞ ஒன்பதைக் கொண்டுவந்து விடுவாயெண்டு எனக்குத் தெரியும். ஆனுல் என்ரை அண்ணையின்ரை பிள்ளையையும் ஒருக்கா எழுதிக் கேட்டுப் போட்டுச் சொல்லுறன்" என்று அருகிலிருந்த பொன்னம்மாவுக்குச் சொல்லிவிட்டு மீண்டும்

தன் மருமகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கினுள் அன்னமுத்து. கடிதம் ரேணுகாவுக்குப் பறந்தது.

ஃ ஃ ஃ ஃ

ரேணுகாவின் கடிதம் எப்பொழுது வரும்; என்ன மாதிரி வரும் என்று யோசித்துக் கொண்டிருந்தாள் அன்னமுத்து. கடிதத்தின் வரவை எதிர்பார்த்துக்கொண் டிருந்த அன்னமுத்து சைக்கிள் சப்தம் கேட்டு ஓடிப் போனுள் படலையடிக்கு. கடிதத்தை வாங்கியவள், "தம்பி! இந்தக் கடிதத்தை ஆர் அனுப்பியிருக்கெண்டு பார்த்துச் சொல்லு தம்பி."

"இது கொழும்பிலிருந்து ரேணுகா அனுப்பியிருக்கு" என்ருன் தபாற்காரன்.

அன்னமுத்துவின் படலையில் தபாற்காரன் நிற்ப தைக்கண்ட அடுத்தவீட்டுப் பொன்னம்மா, "அன்ன முத்து மச்சாள் உன்ரை மருமேளிட்டை இருந்து வந்த தாமே?"

"ஓமாம், என்ரை மருமேள்தானும்போட்டிருக்கிருள். வாவன் என்ன எழுதியிருக்கிரு என்று வாசித்துப் பாப் பம்" என்றவள் மிக்க சந்தோஷத்துடன் சுருட்டியிருந்த பாயை விரித்துவிட்டு 'உதிலே இரு' என்று பொன்னம் மாவையும் இருத்தி விட்டு தானும் இருந்தாள்.

இருந்தவள் கையிலிருந்த தபால் உறையைக் கிழித்துக் கடிதத்தை எடுத்தாள். அவசர அவசரமாக வாசிக்கத் தொடங்கினுள். அதில் "உங்களுக்கும் எங்க ளுக்கும் உள்ள அந்தஸ்து ஒத்துவராது. நீங்கள்வேறு யாரையும் பார்த்து உங்கள் மகனுக்குத் திருமணம் செய்து கொடுங்கள். என்னை நம்பியிருக்க வேண்டாம்," என்ற சொற்கள் தடிப்பாக இருப்பதைக் கண்டு அன்ன முத்துவின் முகம் கறுத்துக் கண்கள் குளமாயின.

"அன்னமுத்து மச்சாள்! நீ கவலைப்படாதை. ஆம்பிளைக்கும் எங்கேயாலும் பெம்பிளைஇல்லாமைப் போகுமே. அதுவும் இந்த ஊரிலை" என்றாள் பொன்னம்மா.

"சரி சரி, நானும் என்ரை அண்ணையின்ரை பிள்ளையைச் செய்ய வேணுமெண்டு தான் என்ரை மகனை வைச்சுக் காத்துக் கொண்டிருந்தனான். அதுவும் இண்டையோடு போச்சுது, இனி எங்கேயாவது பாத்து நல்ல குணமான பொம்பிளை ஒண்டைச் செய்யவேணும்" என்றாள் அன்னமுத்து.

"மச்சாள்! படலையிலை கார்ச் சத்தம் கேக்குது ஆரெண்டு பார்."

"ஆரோ வருகினம் போலை. பார்த்துக்கொண்டு வாறன் இருந்துகொள்" என்று கூறிக்கொண்டே போனாள் அன்னமுத்து.

"இஞ்சாருங்கோ அன்னமுத்துவின்ரை வீடு இது தானே —" காரில் வந்தவர்களுள் ஒருவரான கோவிந்த பிள்ளை கேட்டார்.

"ஓமோம்! நான்தான் அன்னமுத்து. வாருங்கோவன் உள்ளுக்கு" என்று வந்தவர்கள் எல்லோரையும் கூட்டிக் கொண்டு போய் இருத்தினாள் அன்னமுத்து.

அன்னமுத்து வறியவள்தான். வீடும் ஓலை வீடு. ஆனால் அவளின் பிள்ளைக்கு மாத்திரம் அவ்வூரில் நல்ல மதிப்பு. காரணம் அவ்வூரிலே பெண்பிள்ளைகள் அதிகம் இருப்பதுதான். அதனாலே மாதந்தோறும் அவள் வீட்டுக்குவந்து கலியாணம் பேசுவோர் எண்ணில் அடங்காது. அப்படிக் கலியாணம் பேசுவதற்காகத்தான் கோவிந்த பிள்ளையின் குடும்பத்தினரும் வந்திருந்தனர்.

"என்ன! அவையும் வந்திருக்கினம் நீயும் ஒண்டும் பேசாமையிருக்கிறுய்" என்றுபேச்சுவார்த்தையை ஆரம் பித்து வைத்தாள் பொன்னம்மா.

"ஏன்? அவசரப்படுகிறுய். அவை என்னத்துக்கு வந்ததெண்டு சொல்லுவினம்தானே?"

"உங்களையெல்லே, உங்கள் மகனுக்கு எங்கடை பிள் ளையைச் செய்யலாமெண்டு நினைக்கிறேம். உங்கள் விருப்பத்தைச் சொல்லுகிறியளே? நீங்கள் கேக்கிற சீதனத்தை நாங்கள் தாறேம்" என்ருர் கோவிந்தபிள்ளை.

"நான் சீதனத்துக்காக என்ரை மகனை விக்க இருக் கவில்லை, அவன் நல்ல குணமான பிள்ளை ஒண்டைக் கலி யாணம் செய்து சந்தோஷமாக இருக்க வேண்டுமென் பதுதான் என் விருப்பம்"

"எங்கள் மகளுந்தை குணத்தைப் பற்றிப் பொன்னம்மாவைக் கேட்டாலேசொல்லுவா. கேட்டுப் பாருங்கோ எப்பிடியெண்டு".

"ஏன்? பொன்னம்மாவைக் கேக்கவேணும். ஊரிலை ஒரு மாதிரி உங்கடை மகளைப்பற்றிக் கதைக்கி னம்... ஆருக்கோ காயிதம் போட்டதாமெண்டு."

"உதெல்லாம் உந்த ஊரவங்கள் கட்டினகட்டுக் கதை".

"எந்தக் கதையாக இருந்தாலும் எனக்கென்ன. நான் மாத்திரம் இதை விரும்பவில்லை" என்று அன்னமுத்து சொன்னதும் வந்தவர்கள் எல்லோரும் எழும்பிப் போய் விட்டார்கள்.

"ஏன் மாட்டனெண்டனி? நல்ல சீதனம் தருகினமா மெல்லே வாங்கிக் கொண்டு செய்யேன். குடும்பமும் நல்ல அந்தஸ்துக்காரர்."

"சும்மா போமச்சாள். சீதனத்தை எடுத்து நாங்கள் சாப்பிடுகிறதே? பிள்ளையள் சண்டை சச்சரவு இல்லாமல் இருந்தால் போதும். அவனும் தகப்பன் இல்லாத பிள்ளை சண்டை சச்சரவு வந்தால். ஆர் போய் அவனுக்காகக் கதைக்கிறது? அந்தஸ்து இண்டைக்கு வரும் நாளைக்குப் போய்விடும். அதுக்காகப் பிள்ளையளை நாசமாக்கிறதே?"

"பின்னை நெடுக வச்சுக்கொண்டு இருக்கப் போறியே?"

"நல்ல குணமான பொம்பிளை இருந்தால் பேசிக் கொண்டுவா. செய்யிறன்."

"சரி சரி பொழுது படப் போகுது. ஆடுமாடுகளைப் பிடிச்சுக் கட்டவேணும். வீட்டுக்கு விளக்கும் வைக்க வேணும். எல்லாத்துக்கும் நாளைக்கு வாறன்" என்று கூறிக்கொண்டு போனுள் பொன்னம்மா.

ஃ ஃ ஃ ஃ

"தம்பி நாவேந்தன்! உன்ரை கொம்மா இருக்கிருவே?"

"இப்பதான் முழுகிவிட்டு சிவன்கோயிலுக்குப் போரு"

"அப்பிடி யெண்டாக் கொம்மா வந்ததுக்குப் பிறகு கூப்பிட்டுச் சொல்லு தம்பி. நான் அவவோடை கதைக்க வேணும்." என்று படலையில் நின்று சொல்லிப் போட்டுப் போனுள் பொன்னம்மா.

அவள் சொல்லி விட்டுப் போய் பத்து நிமிடங்களுக்குப் பிறகு படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள் அன்னமுத்து.

"அம்மா! உங்களைக் காணவேண்டுமெண்டு அடுத்த வீட்டுப் பொன்னம்மா மாமி சொல்லிப்போட்டுப்போரு.

என்ன விஷயமெண்டு கேட்டுக் கொண்டு வாணே. ஏதோ அவசியமான காரியம் கதைக்க வேணுமாம்."

நாவேந்தன் சொன்னதும் வேலிக்கருகில் நின்று "மச்சாள்! மச்சாள்!!—" என்று உரத்துக் கூப்பிட்டாள் அன்னமுத்து.

"கொஞ்சம் பொறு மச்சாள்! அடுப்பிலே உலைவைச் சுப் போட்டு வாறன். நீபோய்ச் சாப்பிடு" பின்னர் பொன்னம்மா வந்து விஷயத்தை ஆரம்பித்தாள்.

"எல்லாம் சரியாக்கிப் போட்டன். நான் நினைச்சா முடியாத காரியமும் ஒண்டு இருக்குதே. ஆனல் ஒன்று கொஞ்சம் வறுமைப்பட்டதுகள் அவ்வளவுதான்."

"அது தான் நல்லது. என்ரை மேனிலும் பார்க்க வறுமைப்பட்டவளாக இருந்தால்தான் கொஞ்சம் அடங்கிக் கிடங்கிநடப்பாள். அல்லது நான் பெரிசோ நீ பெரிசோ எண்டு வாழ்நாள் முழுக்கச் சண்டைபிடிச்சுக் கொண்டு தான் இருக்கவேணும்."

"நீ பின்னே வறுமைப்பட்ட மருமகளேத்தான் விரும்புகிருய்!"

"குணம் எப்படி?"

"தங்கக் குணம். இப்படியான குணமுள்ள பிள்ளேயை நீ தேடினலும் கிடைக்காது."

"எப்ப பின்னேக் கலியாணப் பேச்சை போட்டிருக்கிருய்."

"இண்டைக்கு நாலு மணிக்கு வருவினம்."

"நீ சரியான ஆளாத்தான் கிடக்குது."

"சரியான ஆளென்ன, இந்த விஷயத்திலே நிறைந்த அநுபவசாலி எண்டுசொல்லு" என்று சொல்லிச் சிரித்

தாள் பொன்னம்மா. அன்னமுத்துவும் பொன்னம்மாவுடன் சேர்ந்து சிரித்தாள்.

ஃ ஃ ஃ ஃ

அந்த ஊரிலே கலியாணப் 'புரோக்கர்' என்றால் அது பொன்னம்மாவைத் தான் குறிக்கும். கலியாண விஷயத்திலே பொன்னம்மாவுக்கு நல்ல மதிப்புண்டு. அநுபவமும் உண்டு. அவள் கண்டபடி வேண்டா வெறுப்பாகக் கலியாணம் செய்து வைக்க மாட்டாள். தான் செய்து வைக்கும் கலியாணங்கள் எல்லாம் பிற்காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ வேண்டும் என்ற பெருநோக்கைக் கொண்டே செய்து வைப்பாள் அவள்.

அவள் செய்துவைத்த கலியாணங்களை விரல்விட்டு எண்ண முடியாது. அவள் பெயரைச் சொல்லி இன்றும் எத்தனையோ குடும்பங்கள் ஒற்றுமையாக வாழ்வதைக் காணலாம்.

இருபகுதியினருக்குமிடையே கலியாணப் பேச்சு நடைபெற்று முடிந்து விட்டது. கலியாணப் பேச்சு முடிவுற்றது அன்னமுத்துவுக்கு ஒரு தலைச்சுமை நீங்கியது போல இருந்தது.

"எடே தம்பி! உன்ரை கொண்ணைக்கொரு காயிதம் எழுதிப்போடடா."

"அவர் உந்தக் கலியாணத்துக்கு ஒத்துவரமாட்டார்."

"ஏன்ரா ஒத்துவரமாட்டார். நீ எழுதிப்போடடா."

"மற்றவங்களெல்லாம் இருபதினாயிரம் முப்பதினாயிரம் எண்டு வாங்கினங்கள். அவருக்கு மாத்திரம் என்ன சீதனம் பேசியிருக்கிறியள்."

"நான் பணத்துக்காகக் கலியாணம் பேசயில்லையடா குணத்துக்காகத்தான்ரா கலியாணம் பேசினனான். நீ

கொஞ்சக் காலம் இருந்து பாரனடா பணமோ? குணமோ? பெரிசெண்டு.''

''சரி சரி, நானும் இருந்துதானே பார்க்கப்போறன்.''

''என்னத்தைப் பார்க்கப் போருய். உன்ரை விசர்க் கதையை விட்டு விட்டு நீ எழுது.''

''என்னமாதிரி எழுதுகிறது?''

''காசு இரண்டாயிரம். நகை ஆயிரம். ஆக் மொத்தம் மூவாயிரம் என்று எழுது.''

கடிதம் வரதரின் கைக்குக் கிடைத்தது. கடிதத்தை வாசித்தான்.

''காசு இரண்டாயிரம். நகை ஆயிரம். ஆக மொத்தம் மூவாயிரம்.''

''பெண்ணின் பெயர் தங்கரத்தினம்; தங்கமான குணம்.''

'நல்ல அழகி' என்ற தடித்த எழுத்துக்கள் அவனைத் திருப்பித் திருப்பி வாசிக்கச் செய்தன.

வரதர் தன் தகப்பனை இழந்த பின் தாய் கீறிய கோட்டுக்குள்ளே இருந்து வளர்ந்தவன். தன் தாய் தனக்கு விரோதமாக எதையும் செய்ய மாட்டாள் என்பது அவனுக்கு நன்ருகத் தெரியும். எந்தத் தாயும் தன் மகனுக்குத் துரோகம் செய்வதில்லை என்பது அவன் எண்ணம். தன் தாய் தனக்குப் பேசும் கலியாணம் ஏதோ ஒரு வகையில் நல்லதாகத் தான் அமையும் என்ற முடிவுக்கு வந்தான்.

''அம்மா! என்னைக் கேளாமலே எனக்குக் கலியாணம் பேசிவிட்டீர்கள். அதை நான் மறுக்கவில்லை. ஆனல்

'உன் மாமனின் மகள் ரேணுகா இருக்கிருள். அவளைத் தான் உனக்கு கலியாணம் செய்யிறது' என்று அடிக் கடி எனக்குக் கூறுவாயே அந்த எண்ணத்தை எப்படி அம்மா மறந்து இப்படி மாறிவிட்டீர்கள்? உங்களுக்குள் ஏதாவது மனக் கசப்புக்கள் ஏற்பட்டு விட்டதா? இப் படி எழுதிவிட்டேன் என்று வருந்தாதீர்கள். உங்கள் விருப்பப்படி கலியாணம் செய்வதற்கு வருகிறேன். வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ளுங்கள்."

அவன் எழுதிய கடிதம் அன்னமுத்துவுக்குக் கிடைத் தது. அன்னமுத்துவின் ஆனந்தத்தை அளவிடவே முடி யாது. அழகான முறையிலே திருமண அழைப்பிதழ்கள் அச்சிட்டு உற்ருர் உறவினர்களுக்கு அனுப்பப்பட்டன. கொழும்பில் உள்ள பெரியதம்பி தம்பதிகளுக்கும் அனுப்பப்பட்டது.

பெரியதம்பி அன்னமுத்துவின் ஒரே ஒரு அண் ணன். கொழும்பிலே சுங்கப் பகுதியில் உயர்தர உத்தி யோகம் வகிப்பவர். செல்வச் சீமான் என்று சொல்லக் கூடிய அளவுக்குப் பணம் நிறையவைத்திருக்கிருர். அத ஞல் தான் அவரது ஒரே ஒரு மகளான ரேணுகா தான் அந்தஸ்தில் கூடியவள் என்ற பெருமையுடன் நடந்து கொள்கிருள். அவள் தன் உற்ருர் உறவினருடன் கதைப்பதேயில்லை. அவ்வளவுக்கு அவள் அந்தஸ்து அவளை உயர்த்திக் கொண்டிருந்தது.

வரதருக்கும் தங்கரத்தினத்திற்கும் திருமணம் வெகு கோலாகலமாக நடந்தது. உற்ருர் உறவினர் எல்லோ ரும் திருமணத்திற்குச் சமுகம் கொடுத்தனர். ஆஞல் அன்னமுத்துவின் அண்ணன் பெரிய தம்பியின் குடும் பத்தினர் மாத்திரம் சமுகம் கொடுக்கவில்லை. இது எல்லோருக்கும் ஆச்சரியத்தையும் ஆத்திரத்தையும் கொடுத்தது.

"என்ன மச்சாள்! நீ இப்பிடிப் பெரியெடுப்பாச் செய்வாயெண்டு நான் கனவிலும் நினைக்கவில்லை" இப்படிக் கூறினாள் அன்னமுத்துவின் மைத்துனி செல்லமுத்து.

"எனக்கோ இரண்டேயிரண்டு பெடியள். அதுவும் முதல் மூத்தவன்ரை கலியாணத்தை செய்யயுக்கை நல்லாச் செய்ய வேணுமெண்டு எனக்கு ஆசை. ஆனால் வீண் செலவு ஒண்டுமில்லைத்தானே."

"என்ன மச்சாள்! பெரியதம்பி அத்தானைக் காணயில்லை."

"அவை பெரிய அந்தஸ்துக்காரர். எங்களிட்டை வருகினமே?"

"நானெல்லாம் கேள்விப்பட்டனான். ரேணுகாவும் தாயும் ஏதோ தாறுமாறாக உனக்கெழுதினவையாம். பெரிய தம்பி அத்தான்ரை பெண்டில் ஒரு மாதிரியான ஆளெண்டு எங்களுக்குத் தெரியும். ஆனால் மகளும்......"

"ஏன் மச்சாள்! அவையின்ரை கதை எங்களுக்கு. என்ரை மருமேளைப் பாத்தனியே. எப்பிடி?"

"அவளின்ரை முகத்தைப் பார்க்கச் சந்திரனைப் பாத்த மாதிரிக் கிடக்குது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்களெல்லே. முகத்தைப் பாத்தாலே குணத்தைச் சொல்லத் தேவையில்லை."

"நானும் குணத்துக்காகத்தான் செய்தனான்."

"எங்கையடியாத்தை தேடி எடுத்தனி?"

"சண்டிலிப்பாய்ச் சந்தியைத் தெரியாதே?"

"தெரியும்."

"அதிலை நிண்டு பாத்தாச் சீரணி நாகம்மாள் கோயில் தெரியும். அந்தக் கோயிலுக்கு வடக்குப் பக்கத்திலை இருக்கிற கல்வீடு தான் மருமேளின்ரை வீடு."

"அப்பிடிச் சொல்லேன் சங்கதியை. எனக்கு நேர மாச்சு; போய்விட்டுப் பிறகொரு நாளைக்கு வாறன். எங்களை மறந்து கிறந்து போகாதை. எங்களிட்டையும் பொம்பிளைப் பிள்ளையள் இருக்கு" என்று கூறிக் கொண்டு நகர்ந்தாள் செல்லமுத்து.

ஃ ஃ ஃ ஃ

அன்னமுத்துவுக்கு ரேணுகா எழுதிய கடிதம் பாரதூரமானது தான். இருந்தாலும் அன்னமுத்துவின் மனம் இரங்கி விட்டது. எப்படி இருந்தாலும் அவள் தன்னுடைய அண்ணன் மகள் என்பதை மறக்கவில்லை. அண்ணனின் குடும்பம் பெரிய அந்தஸ்துள்ளதாக இருந்து தற்பொழுது சீரழிவதையும் அவளால் பொறுக்க முடியவில்லை. என்ன இருந்தாலும் சகோதர பாசமல்லவா......?

மகன் மணியை நித்திரையாக்கி விட்டு வரதரும் தங்கரத்தினமும் அன்னமுத்து இருந்த அறைக்கு வந்தார்கள். அவர்கள் வந்ததும் திடுக்கிட்டுத் தன் கடந்த கால நினைவை நிறுத்திவிட்டுத் "தம்பி நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்" என்றாள் அன்னமுத்து.

"என்ன முடிவுக்கம்மா வந்திருக்கிறீர்கள்?"

"அவள் ரேணுகாவுக்கு என்ரை நாவேந்தனைக் கலியாணம் செய்ய முடிவு செய்து விட்டேன். எப்பிடியடா மேனை என்ரை முடிவு?"

"நல்ல முடிவம்மா" என்றான் வரதர்.

9-2-1964

அச்சுப்பதிவு :

கலைவாணி அச்சகம்,
10, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.

006070

சித்தன்கேணி கலைநகரைச் சேர்ந்த திரு. நா. க. தங்கரத் [illegible] வர்கள் அராலி வடக்குச் செட்டியார் மடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு நாகர் கந்தையாவுக்கும் திருமதி மனோன்மணி கந்தையாவுக்கும் 8-6-35 ல் பிறந்தார்.



'நகுலன்', 'அராலியூரான்' 'கலைநகரான', 'கொழும்பு மாமா', 'இராசாக்குட்டி' என்னும் புனைபெயர்களுள் மறைந்திருந்து சிறுகதை, கட்டுரை, கவிதைகள் எழுதும் இவர், சமூகத்தொண்டனில் முதன்முதலாகக் கட்டுரை எழுதத் தொடங்கி, தினகரன் வீரகேசரி, ஈழநாடு, ஸ்ரீலங்கா, சுதந்திரன், விவேகி, கலைவாணி முதலிய பத்திரிகைகளில் ஏராளமான கதைகளையும் ட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

1964-ம் ஆண்டு ஆவரங்கால் மத்திய சனசமூக நிலையத்தினர் நடாத்திய 'வன்னியசிங்கம் ஞாபகார்த்த அகில இலங்கைச்சித்திரப் போட்டியில், 'வெள்ளிப்பதக்கம்' பரிசுபெற்ற இவர், 1953 ம் ஆண்டு கோப்பாய் 'வின்ஜர் ஆட்கிளப்' நடாத்திய இன்ரமீடியேற் சித்திரப் பரீட்சையிலும் திறமையாகச் சித்தியடைந்துள்ளார். கொழும்பு நுண்கலைக் கல்லூரியிலும் (சனிக்கிழமை வகுப்பு) சி[illegible]காலம் படித்துள்ளார்.

கலைகளில் மிகவும் ஆர்வமுள்ள இவர், 1964 ம் ஆண்[illegible] ந[illegible] பெற்ற வடமாகாண ஆசிரிய கலாசாலைகளின் தமிழ் விழாவில் இடம்பெற்ற 'கருகிய இலட்சியம்' என்ற நாடகத்துக்கு இயக்குனராக இருந்ததோடு கதாநாயகன் பாத்திரமும் ஏற்றுத் திறம்பட நடித்துள்ளார். இவ்விழாவில் இவரே குதிரையாட்டமுமாடி ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதலையும் பெற்றார். பதினைந்துக்கு மேற்பட்ட நாடகங்களில் கதாநாயகன் பாத்திரமேற்றுத் திறம்பட நடித்த இவர், இலங்கை வானொலி நாடகத்திலும் பங்குபற்றத் தவறவில்லை.

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலையினதும், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியினதும் பழைய மாணவரான இவர், கொழும்பு முகத்துவாரம் கதீட்ரல் தமிழ்க் கலவன் பாடசாலையில் (19-1-59 — 5-1-64) ஐந்து வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். தற்போது கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய கலாசாலையில் ஆசிரியப் பயிற்சியில் இறுதி ஆண்டு ஆசிரிய மாணவராக இருக்கும் இவர், மேற்ப[illegible] கலாசாலையின் வருட வெளியீடான 'கலைச்சுடர்' சஞ்சிகைக்கு [illegible]தழாசிரியராகவும், ஆளுமன்றத் தபால் மந்திரியாகவும் கடமையாற்றுகின்றார்.